

கல்கி
KALKI 24.6.90 ரூ. 2.50
அத்வானி
சிறப்புப் பேட்டி

பைபிள் கதைகள் என்ன ஆச்சு?

ராமாயணம், மகாபாரதம் போன்ற புராண, இதிகாச, மதச் சார்புள்ள கதைகள் மக்கள் மத்தியில் பெருத்த வரவேற்பைப் பெறுகின்றன என்பதைப் புரிந்து கொண்ட தூர்தர்ஷன் அந்த வரிசையைத் தொடரலாம் என்று கருத்துத் தெரிவித்த போது கேரளத்தைச் சேர்ந்த ஒரு படத் தயாரிப்பாளர் விரைந்து சிந்தித்தார். பைபிளை ஆதாரமாகக் கொண்ட ஒரு டெலிவிஷன் தொடரைத் தாம் தயாரிக்க விரும்புவதாக அறிவித்தார்.

அவர் எம். சி. புன்னோஸ். கேரளத்தில் அப்பச்சன்' என்கிற பெயரில் மிகவும் பிரபலமாக உள்ளவர். 'மை டியர் குட்டிச்சாத்தான்' என்கிற 3-D திரைப்படம் வெளியாகிப் பரபரப்புடன் சக்கைப் போடு போட்டதே, நினைவிருக்கிறதா? அதனைத் தயாரித்த நவோதயா பிலிம்ஸ் அவருடையது தான். தென்னகத்தின் முதல் 70 எம் எம் திரைப்படம், முதல் சினிமாஸ்கோப் படம், முதல் 3-D படம் ஆகியவற்றைத் தயாரித்துள்ள பெருமை நவோதயாவுக்கு உண்டு. அந்த நிறுவனத்தின் சார்பில் தான் 'பைபிள் கதைக'ளைப் பெரிய அளவில் தயாரிக்கப் போவதாகத் தெரிவித்தார் அப்பச்சன்.

கேரளத்தின் முந்தைய ஐக்கிய ஜனநாயக அரசிடம் நெருங்கிய தொடர்பும் செல்வாக்கும் கொண்டிருந்தவர் அப்பச்சன். எனவே, அவர் இப்படி அறிவித்த சமயத்தில் மத்திய செய்தி — ஒலிபரப்புத் துறை அமைச்சராகக் கிருஷ்ண குமார் பதவி வகித்த நிலையில், தூர்தர்ஷன் அதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறுவதில் அவருக்கு எந்தச் சிரமும் இருக்கவில்லை. தூர்தர்ஷன் அதிகாரிகள் அதற்கான 'ப்ராஜக்ட்' அறிக்கையைச் சமர்ப்பிக்கச் சொன்னார்கள்.

இது நடந்தது செப்டம்பர் — 88 இல். 'பைபிள் கதைகள்' என்கிற பெயரில்



சுமார் 39 வாரங்கள் இந்தத் தொடர் வரலாம் என்றும் பிப்ரவரி — 90 அல்லது ஈஸ்டர் பண்டிகையின் போது ஒளிபரப்புக்குப் படம் தயாராக இருக்க வேண்டும் என்றும் அப்போது அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

'ப்ராஜக்ட்' அறிக்கையும் விரிவான 'ஸ்கிர்ப்ட்'டும் தயாரிக்கப்பட்டன. ஏப்ரல் 89 இல் தூர்தர்ஷனுக்கு அவை சமர்ப்பிக்கப்பட்டன. திட்டம் ஓகேயாகிவிடும் என்கிற நம்பிக்கை வர, உடனே செயலில் இறங்கினார் தயாரிப்பாளர்.

எதையும் பெரிதாகவே செய்து பழக்கப்பட்டவர் இப்படியொரு வாய்ப்புக் கிடைத்தால் சும்மா இருப்பாரா? இரண்டு நிமிடம் தோன்றி அன்னை தெரசா இந்தத் தொடரை அறிமுகம் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டார். 'மகாபாரதம்' தொடருக்கு வசனம் எழுதிய ராஹி மசூம் ரசாவின் சகா, பூஷன்தன்வாலி இதற்கு வசனம். ஷம்மி கபூர், நாசுருத்தின் ஷா, திலீப்குமார், அலோக் நாத், ரஸா முரத் போன்ற பிரபலமானவர்கள் முக்கிய பாத்திரங்களில். பாஸில், பிரதாப் போத்தன், சிபில் மலயில், மாத்யூ பால், ராஜீவ் குமார் போன்ற இயக்குனர்களின் தொழில் நுட்பப் பணி... இப்படி அவர் திட்டம் விரிவடைந்தது.

உலகின் தோற்றத்திலிருந்து இயேசு பிரான் பரமண்டலத்துக்குச் சென்றடைவது வரையிலான நிகழ்ச்சிகள் தொடரில் இடம் பெறும் என்று முடிவாகியது. 'மகாபாரதம்' முடிவடைந்தவுடனேயே இந்தத் தொடர் ஒளிபரப்பாகத் தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இப்படிப் பலமான அஸ்திவாரத்துடன் ஆரம்பிக்கப்பட்ட தொடருக்கு எதிர்ப்பு இருக்கக் கூடும் என்பது முதல் முதலில் டிசம்பர் — 89 இல் தான் தெரிய வந்தது. ஜம்மு — காஷ்மீர் தொலைக்காட்சி நிலையத்துக்கு எச்சரிக்கை போன்கால்கள் வரத் தொடங்கின. செய்தவர்கள் இஸ்லாமிய மத அடிப்படைவாதிகள். தொடரில் இடம் பெறக் கூடிய சில பாத்திரங்களைத் திரையில் காண்பிக்கக் கூடாது என்று அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இதைத் தொடர்ந்து, ஏற்படக் கூடிய நிலைமைகளைச் சமாளிக்கும் நோக்கத்துடன், அப்பகுதிகளை நீக்கி விடும்படியும் தொடரை முப்பது வாரங்களுக்கு வரும் வகையில் குறைக்கும் படியும் தயாரிப்பாளருக்குத் தெரிவிக்கப்பட்டது.


பழைய ஏற்பாட்டில் முக்கிய அங்கம் வகிக்கும் ஆப்ரகாம், மோசஸ், ஜோசப் ஆகியோர் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் தொடரில் இடம் பெறுவதை இஸ்லாமிய மத அடிப்படைவாதிகள் விரும்பவில்லை என்பதைத் தெரிந்து கொண்ட நவோதயா அவற்றை நீக்கிவிட முடிவு செய்தது.

ஆனால் பிரச்னை இத்துடன் முடிவடைந்து விடவில்லை.

தூர்தர்ஷன் இதுவரை தயாரிப்பாளருக்கு அனுமதிக் கடிதம் வழங்கவில்லை. அப்படி வழங்கப்படுவதற்கு இன்னும் தாமதம் ஆகலாம் என்றும் தெரியப்படுத்தியுள்ளது. புதிய அரசு மத்தியில் பொறுப்பேற்ற பின்னர், எல்லாத் தொடர்களையும் மறுபரிசீலனை செய்வதற்கு ஒரு குழு அமைத்துள்ளதுதான் இதற்குக் காரணமாம்.

எனவே, எடுத்த வரையில் நிறுத்திக் கொண்டு மீதமுள்ள பகுதிகளைப் படமாக்குவது ஒத்திப் போடப் பட்டுள்ளது. சுமார் ஐந்து கோடி ரூபாய் திட்டம் இந்தத் தொடர்!

— பிச்சாமி



— ஆர். ஆர். பூபதி

மத்யமர் :

சுஜாதா

ஜாதி இரண்டொழிய...

வாசகர் விமர்சனம்

புலம்பல் கதை எழுத சுஜாதா தேவையா?

தீர்வுதான் என்ன?

இட ஒதுக்கீடு என்பது முடவர்களுக்கு ஊன்றுகோல்களாகவும், முடியாதவர்களுக்கு உதவும் கரங்களாகவும் இருக்க ஏற்படுத்தப் பட்டதேயன்றி, சுற்றுச் சார்பும் பொருளா தார வசதியும் கொண்டவர்களின் முயற்சி யின்மைக்கும், சோம்பேறித்தனத்திற்கும் ஆலவட்டம் வீசி ஆதரவளிக்க அல்ல.

ஆனால் நடைமுறையில் நடப்பது என்ன? சுற்றுச் சார்பும், பொருளாதார வசதியும் கொண்ட ஷீலாக்கள் மட்டுமே சாதியின் பெயரால் சலுகைகள் பெறுகிறார் கள். அவர்கள் முற்பட்ட வகுப்பு ரமேஷ் களின் இடத்தை மட்டும் பறித்துக் கொள்ள வில்லை. கால் வயிற்றுக் கஞ்சிக்குக் கஷ்டப் படும் குப்பன், சுப்பனின் இடத்தையும் அல்லவா பறித்துக் கொள்கிறார்கள். அவன் பாவம்! தொடர்ந்து கஷ்டப்பட்டுக் கொண்டே இருக்கிறான்.



இன்னொரு பக்கத்தில் தங்களை விடவும் சுற்றுச் சார்பும், பொருளாதார வசதியும் கொண்டவர்கள் அரசின் தவறான அணுகு முறையால், குறைந்த முயற்சியிலேயே முன்னேறுவதைக் காணும் போது தங்கள் முயற்சிக்கும், திறமைக்கும் மதிப்பில்லை என்பதை உணரும் போது முற்பட்ட வகுப் பினர் என முத்திரை குத்தப்பட்டவர்கள் விரக்தியின் விளிம்புக்கே சென்று விடுகின்ற னர். இந்த விரக்தி நாட்டின் பின்னேற்றத் திற்குத்தான் வழிவகுக்கும்.

தீர்வுதான் என்ன? அதுதான் சுஜாதா வின் உத்தி. அவர் சொல்லாமல் சொல்லும் வழிமுறை. எது பேக்வேர்டு என்பதைச் சுற்றுச் சார்பு, பொருளாதார வசதி ஆகிய வற்றையும் அளவுகோலாகக் கொண்டு நிர்ணயிக்கட்டும். சாதி அடிப்படையில் சலுகைகள் வழங்கினால் கூட அதனைச் சுற்றுச் சார்பு, பொருளாதார வசதி ஆகிய வற்றுடன் பிணைக்க வேண்டும். அதன் மூலம் இடஒதுக்கீடு யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேரும். இப்படிப் பயன் பெறப் பயன் பெற இடஒதுக்கீட்டின் அளவைக் குறைத்துக் கொண்டே வந்து நூறு சதவீதமும் பொதுப் போட்டியாக்கி விட வேண்டும். அதுதான் நாமும் நாடும் உருப்பட வழி.

இத்தகைய நல்ல நிலை உருவாகத் தடை யாய் இருக்கும் இன்றைய அர்த்தமற்ற இட ஒதுக்கீட்டுக் கொள்கையை எதிர்ப்பது பாவ மென்றால், அந்தப் பாவத்தைச் செய்யத் தேசப் பற்றுள்ள ஒவ்வொரு இந்தியனும் தயாராய் இருக்க வேண்டும்.

— முக. தி. சு. பாலசுப்பிரமணியன், முசிறி.

உணர்ச்சி வெள்ளத்தில் ஒரு துளி

பிரசார யுக்தியுடன் கதையை அமைத்த சுஜாதா எது அநியாயம் என சித்தார்த்தன் மூலம் விளக்கும் போது நெஞ்சை நெருடு கிறார். வேலையின்மை என்பது ஒரு **inconvenience** தானே தவிர ஒன்றும் **disgroce** இல்லை. ஆனால் ஆயிரம் வருஷங்களாக ஜாதியின் பேரால் இழைக்கப்பட்டு வரும் அநியாயம் ஒரு **disgroce**. அடிமையாக இருந்த உணர்ச்சி வெள்ளம் தடை தாண்டி வரும் போது அறியாமை சற்றுச் சலசலப்பது இயல்பு. அந்த உணர்ச்சி வெள்ளத்தில் ஒரு துளிதான் ஷீலா. பொதுவாகச் சொன்னால் நாட்டில் ஷீலா மற்றும் ரமேஷ்களின் எண்ணிக்கை வெகு குறைவே.

— பி. பி. ஜெகதீசன், கைலாசபுரம்.

சமகால சோகம்

கதையின் கரு நமது சமகால சோகத்தின் ஆழமான அடையாளம். சுதந்திர இந்தியா வின் எதிர்காலத்தை நாசமாக்க, சாதியின்

ரூ. 50 பரிசு பெறுபவர்:

முக. தி. சு. பாலசுப்பிரமணியன்,
சிங்காரச் சோலை,
18 பி, தாத்தையங்கார் பேட்டை ரோடு,
முசிறி — 621 211.

மற்ற கடிதங்கள் ஒவ்வொன்றும் ரூ. 25 அன்பளிப்புப் பெறுகின்றன.

அடிப்படையில், சில அரசியல்வாதிகள் இறந்த காலத்தைக் காரணமாய்க் காட்டி இயற்றிய சட்டம்தான் இந்தச் சோகத்தின் வித்து. நம் சமூகத்தின் இந்த அடிப்படை பலவீனம்தான் இக் கதையின் பலம்.

சுஜாதாவின் எழுத்துச் சாணக்கியத்தில் பளிச்சிடுவது இந்தச் சோகம்தான். தெரிந்ததும், எதிர்பார்க்கப்படுவதும், ஆனால் நடக்கும்போது நம்மை ஆழமாய்க் காயப்படுத்துவதுமான சோகம்.

— எம். விஜயலக்ஷ்மி, புதுதில்லி.

எத்தனை ஷீலாக்கள்?

இந்தியாவில் உள்ள தாழ்த்தப்பட்டவர்களில் எத்தனை 'பெரிய இடத்து ஷீலாக்கள்' இருப்பார்கள்? 50% இருக்க வேண்டாம். 25% இருந்தாலே இந்தியா என்றோ வளர்ந்து நிமிர்ந்திருக்கும்! ஷீலாவை இண்டர்வியூ செய்த ப்ரொபசர் நரசிம்மன், அடுத்த ஐவரையும் இண்டர்வியூ செய்திருந்தால், அவர்களின் வறுமை, குடும்பச் சூழ்நிலை, ரமேஷின் நிலைமையை விடப் பரிதாபமானதாக இருப்பதை உணர்ந்திருப்பார். இது சுஜாதா சாருக்கும் தெரியும். எனவேதான் அவர் அடுத்த கட்டத்திற்குப் போகவில்லை. மீறி ஓர் அடி எடுத்து வைத்தாலும் கதை நீர்த்துப் போய் விடுமே!

— பா. லக்ஷ்மிகாந்தன், தஞ்சாவூர்.

நாளைய தாழ்த்தப்பட்ட வர்க்கம்

முன்னேற்றப்பட்டவன் என்று முத்திரை குத்தப்பட்ட இளைஞர்கள், தகுதியிருந்தும் தள்ளுபடியாகும் அவலத்தை 'ஜாதி இரண்டொழிய...' மூலம் தெளிவாக்கியிருக்கிறார் சுஜாதா. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் செய்த பாவத்திற்கு இன்று பழியாம்! இவர்கள் நாளைய சரித்திரத்திற்கு ஒரு தாழ்த்தப்பட்டவர்களை உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதே உண்மை. இந்தக் கதை 'சுஜாதா' எழுதி 'கல்கி'யில் பிரசுரமானதற்குக் கூட தனி முத்திரை குத்தத் தயாராகிக் கொண்டிருப்பார்கள் சிலர்.

— மேகதூதன், ஸ்ரீரங்கம்.

அரசு கண்ணை மூடினால்...

''அடிமைத்தனமான உத்தியோகம் கிடைக்கவில்லையே'' என ஏக்கமுறும் ஃபார்வார்ட் ரமேஷையும், அவனைக் கண்டு வேதனைப்படும் நரசிம்மனையும் படைத்து ஏன்தான் ''சுஜாதா'' இப்படி ஃபார்வார்டுகளைப் பலவீனப்படுத்துகிறாரோ தெரியவில்லை! உயர ஆயிரம் வழி! சுய தொழிலோ, பத்திரிகையோ, பிஸினஸோ, சினிமாவோ, அரசியலோ, எதிலாவது முன்னேறுபவன்தான் ஃபார்வார்டு. அரசு கண்ணை மூடிக் கொண்டால் அகிலமே அஸ்தமித்து விடுமா? புலம்பல் கதை எழுத ஒரு சுஜாதா தேவையா?

— பி. வெங்கடகிரிதரன், நெமிலி.

சுட்டிக்காட்ட நினைத்தால்...

ஷீலா என்ற பாத்திரப் படைப்பின் மூலம் ஷெட்யூல்ட் வகுப்பினர் அனைவரும் முன்னேறிய நிலைக்கு வந்து விட்டனர் என்று சுஜாதா சுட்டிக்காட்ட நினைத்தால் அது கண்டிப்பாக அவருக்குத் தோல்விதான். தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் கொஞ்சம் பேர் வேண்டுமானால் மேல் மட்டத்தை அடைந்திருக்கலாம். பெரும்பான்மையோர் இன்னமும் வறுமைக் கோட்டுக்குக் கீழே தான் இருக்கின்றனர். இன்னமும் பல்வகையிலும் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அந்த இனத்தை மேல் மட்டத்துக்குக் கொண்டு வரும் பொருட்டே அரசாங்கம் இன்று பல சலுகைகளை அளித்து வருகிறது.

— என். கிருஷ்ணமூர்த்தி, சிவகாசி.

தவறி விட்டாரே!

தலித் மக்களில் ஒரு சிறுபான்மையினர் கடந்த 43 ஆண்டுகளாக அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சலுகைகளினால் விடுதலையடைந்து உயர் பதவிகளை அடைந்திருக்கிறார்கள். இன்று அப்படிப் பட்டவர்களின் பிள்ளைகளே தொடர்ந்து சலுகைகளைப் பெறுவதனால் இன்னமும் நலிவுற்ற நிலையில் காணப்படும் கிராமப்புற நிலமற்ற கூலிகளின் பிள்ளைகள் முன்னேறுவதற்குத் தடையாக அமைந்து விடுகின்றனர். எப்படியெனில், வசதி படைத்த படித்த பெற்றோரின் பிள்ளைகள் தேர்வுகளில் மிகச் சிறந்த (ஏனைய செல்வாக்குள்ள ஜாதியினருக்கு இணையாக) மதிப்பெண்கள் பெற்றுத் தேறுகிறார்கள். அவர்களும் ஒதுக்கீடு சலுகைகளுக்காகப் போட்டியிடுகையில், எளிய படிப்பறிவில்லாத பெற்றோரின் பிள்ளைகளாய், வாய்ப்புகளும் வசதிகளும் குறைந்த சூழலில், படித்துத் தேர்வுகள் எழுதுவதனால் சற்றுக் குறைவான மதிப்பெண்களே பெறுகிறவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். இந்த உண்மையை சுஜாதா சுட்டிக் காட்டியிருப்பாரெனில் ஓர் அரிய சேவையைச் செய்திருப்பார். ஆனால் அதில் தவறி விட்டாரே!

— தியான்சந்த்கார், மதுரை.

"தமிழக அரசியல் தவறான

மக்களவையில் லால் கிஷன் அத்வானி ஓர் ஒழுங்குப் பிரச்னை எழுப்ப விரும்பிக் கையுயர்த்தினால், அவைத் தலைவர் ரபி ராய் உடனே மைக்கில் 'அத்வானிஜி' என்று அழைத்து விடுகிறார். வழக்க மாக இத்தகைய தருணங்களில், கோஷ மிட்டு, வீண் அமளி செய்து அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் உறுப்பினர்கள் கூட அத்வானிஜியின் point of order ஐக் கூர்ந்து கேட்க நிசப்தமாக உட்கார்ந்து விடுகிறார்கள். எல்லாத் தரப்பினரது மதிப்பையும் மரியாதையையும் பெற்ற எல்.கே. அத்வானி பொது வாழ்விலும் சரி, தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி, எளிமைக்கும் நேர்மைக்கும் பெயர் போனவர். அறுபத்திரண்டு வயதான அவர் பாராளுமன்றத்தின் மூத்த உறுப்பினர் என்ற முறையில் மிகப் பெரிய அரசாங்க பங்களாவில் வசிக்கும் உரிமை பெற்றவர். ஆனால் பல வருடங்களாக, அரசின் செயலாளர்களும் இணைச் செய லாளர்களும் வசிக்கும் சிறிய குடியிருப்பில்தான் வசித்து வருகிறார். இந்த வீட்டில் பூஜை அறை கிடையாது...! கடந்த ஜூன் பத்தாம் தேதி, அத்வானி கல்கிக்கு அளித்த சிறப்புப் பேட்டியின் தொகுப்பு:

கேள்வி: இந்திய அமைதிப்படை இலங் கையிலிருந்து சென்னை திரும்பிய போது அளிக்கப்பட்ட வரவேற்பில் முதல்வர் கருணாநிதி கலந்து கொள்ளாதது குறித்து உங்கள் கருத்து என்ன? உங்கள் கட்சி இது வரையிலும் இதைப் பற்றிக் கருத்து ஏதும் தெரிவிக்கவில்லையே?

லால் கிஷன் அத்வானி: அமைதிப் படை, முந்தைய ராஜீவ் அரசால் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் இலங்கைக்கு அனுப்பி வைக் கப்பட்டது. ஒரு தேசத்தின் பாதுகாப்புப் படைகள் அரசியலுக்கு அப்பாற்பட் டவை. வரவேற்பு நிகழ்ச்சிக்கு முதல்வர் கருணாநிதி செல்லவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கதே. பிரதம மந்திரி வி. பி. சிங், பாலம் விமான நிலையத்தில் அமைதிப் படையினரைச் சந்தித்து உற்சாகப்படுத்தி யது ஆறுதலான விஷயம்.

கேள்வி: சமீப காலமாகத் தமிழகத்தில் ஒரு குறிப்பிட்ட ஜாதிக்கு எதிராகத் திரா விடக் கழகத்தினர் கிளர்ச்சி செய்து வருகின் றனர். திராவிடக் கழக மாநாட்டில் இந்த சிறுபான்மை இனத்தவருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களை முதல் வர் கண்டிக்கவில்லை... இதுபற்றி உங்கள் கருத்து...?

அத்வானி: எங்கள் கட்சியின் மாநிலப் பிரிவிடமிருந்து இந்தத் தீர்மானங்களின் விரிவான நகல் எனக்கு இன்னும் வந்து சேர வில்லை. எனினும் கொள்கை அளவில் திராவிடக் கழக மாநாட்டுப் பிரசங்கங்களை நாங்கள் கண்டிக்கவே செய்கிறோம். பூணூலை அறுப்பது போன்ற செயல்கள் நடைபெறுவது தமிழக அரசியல் அநாக ரிகத் திசையில் திரும்பியுள்ளதையே காட்டு கிறது. இது மிகவும் வருந்தத்தக்க திருப்பம் ஆகும்!


கேள்வி: திருப்பம் என்று நீங்கள் குறிப் பிடுவதைச் சற்று விளக்க முடியுமா?

அத்வானி: தி. மு. க. அரசு வேறு வழி யின்றித் தனது பழைய நாள் அரசியல் பாதைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. சட்டசபைத் தேர்தல்களில் பெரிய வெற்றி பெற்றுவிட்டு, நாடாளுமன்றத் தேர்தல் களில் பெரும்பாலும் தோல்வியையே தழுவி யது தி. மு. க. இரண்டு தேர்தல்களுக்கும் இடைப்பட்ட காலம் ஓர் ஆண்டுதான். இந்த ஓர் ஆண்டுக்குள் தமிழக மக்கள் தங்கள் அரசு பற்றிய அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டு எதிர்ப்பைத் தெரிவித்து விட்டார் கள். இதனால் விளைந்த ஆற்றாமையின் காரணமாக, தி. மு. க. அரசு ஒரு குறிப்பிட்ட இனத்தவருக்கு எதிராக வெறுப்பை வளர்க் கும் தனது பழைய பாதைக்குத் திரும்பியிருக் கக்கூடும். இதன் விளைவாக, தி. மு. க. தான் அங்கம் வகிக்கும் தேசிய முன்னணிக் கும் அவப்பெயர் தேடித் தந்து கொண்டிருப் பதை உணர வேண்டும்.

கேள்வி: உத்திரப் பிரதேச முதல்வர் முலாயம் சிங் யாதவ், அரசுப் பணிகளில் ஆங்கிலம் உபயோகிப்பதற்குத் தடை விதித்து, ஹிந்தியையே பயன்படுத்த வேண் டும் என்று சுற்றறிக்கை விடுத்துள்ளாரே?

பாதையில் செல்கிறது"

அத்வானி சிறப்புப் பேட்டி:



அத்வானி: எங்கள் கட்சி இருமொழிக் கொள்கையைத்தான் ஆதரிக்கிறது. ஆங்கிலம் நம் நாட்டின் அதிகாரபூர்வமான மொழிகளுள் ஒன்று. அதன் உபயோகத்தை அதிகப் படுத்துவதையே நாங்கள் விரும்புகிறோம். பண்டித நேரு காலத்திலிருந்தே நாங்கள் இருமொழிக் கொள்கையைத்தான் ஆதரித்து வருகிறோம். உ. பி. முதல்வர் அனுப்பியது போன்ற சுற்றறிக்கைகள் குழப்பத்தையே ஏற்படுத்தும்.

(இந்தக் கட்டத்தில் அத்வானி மேலும் ஏதோ பேச வாயெடுத்துப் பின் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு விட்டார்.)

கேள்வி: தேசிய முன்னணி அரசின் ஆறு மாத கால ஆட்சி குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன...?

அத்வானி: முந்தைய அரசுகளைக் காட்டிலும் இந்த அரசு எவ்வளவோ மேலானது. முந்தைய அரசுகள் ஜனநாயகப் பாரம்பரியம் மிக்க அமைப்புக்களைப் படிப்படியாக அழித்து வந்தன. இப்போது தேசிய முன்னணி ஆட்சியில் ஜனநாயகம் மீண்டும் நிலை நாட்டப்படுகிறது.

கேள்வி: சற்று விரிவாகக் கூற முடியுமா? பாரம்பரிய அமைப்புக்கள் என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்...?

அத்வானி: நாடாளுமன்றம், பத்திரிகைகள், நீதித்துறை, தேர்தல் கமிஷன்... இவற்றைத்தான் குறிப்பிடுகிறேன். தேசிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்த பிறகுதான் கவிடிஷ் தணிக்கை பீரோவின் ரிப்போர்ட் வெளிவர ஆரம்பித்துள்ளது; முந்தைய அரசாங்கம் இதை மறைத்து வைத்திருந்தது. நாடாளுமன்றத்தைப் பொறுத்தமட்டில், அவையின் துணைத் தலைவராக, பிரதான எதிர்க்கட்சி உறுப்பினரை (இ. காங்) நியமித்துள்ளது இந்த அரசு. இ.காங்கிரஸ் அரசுக்கு இத்தகைய துணிவு இருந்ததில்லை. அவர்கள் ஆட்சியில், தி. மு. க., அ. தி. மு. க., உறுப்பினர்கள்தான் துணைத் தலைவர்களாக இருந்தனர். இப்போது பத்திரிகைகளுக்கும் அதிக சுதந்திரம் இருக்கிறது. பொது மக்களுக்கு இந்த உண்மைகள் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

கேள்வி: ஓர் ஆண்டு அல்லது ஒன்றரை ஆண்டுகளின் இறுதியில் பி. ஜே. பி. தேசிய முன்னணிக்குத் தரும் ஆதரவை வாபஸ் பெறத் திட்டம் தீட்டி வருவதாக இ. காங்கிரஸ் வட்டாரங்களில் சொல்கிறார்களே...?

அத்வானி: திடீர்த் திருப்பங்களை உண்டாக்கி, பரபரப்பு ஏற்படுத்தி, மலிவான விளம்பரம் பெறும் கட்சியல்ல பி. ஜே. பி. நாடாளுமன்றத்தில், முன்னெப்போதைக் காட்டிலும் அதிக இடங்களைப் பெற்றுள்ளோம். இரண்டு மாநிலங்களில் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்துள்ளோம்; மற்றொன்றில் ஜனதா தள — பி. ஜே. பி. கூட்டணி அரசு அமைந்துள்ளது. நாங்கள் படிப்படியாக முன்னேறியுள்ள இத்தருணத்தில், தேசிய முன்னணிக்கு ஆதரவை வாபஸ் பெறுவதால் என்ன லாபம்? பார்க்கப் போனால், அத்தகைய செயலை நாங்கள் செய்வதால் இ. காங்கிரஸுக்கு அல்லவா அனுகூலம் ஏற்படும்! எனவே, அவசரப்பட்டு எதுவும் செய்ய மாட்டோம். இத்தகைய வதந்திகள் எங்கள் கட்சியின் கட்டுக்கோப்பைக் கலைக்கவும் மாட்டா! கடந்த ஆறு மாதங்களில் நடந்த தேர்தல்களில் எல்லாம் இ. காங்கிரஸ் பலவீனமடைந்து வருவது நிரூபணமாகி விட்டது. மக்களின் ஆதரவு தேசிய முன்னணிக்குத்தான்; இ. காங்கிரஸுக்கு அல்ல. எனவே பி. ஜே. பி. தேசிய முன்னணிக்குத் தனது ஆதரவை வாபஸ் பெறவேண்டிய அவசியம்தான் என்ன...? ஆனால் ஒன்று. ஆளும் தேசிய முன்னணி உட்கட்சிப் பூசல்களையெல்லாம் நிறுத்திவிட்டு உருப்படியாகச் செயல்பட ஆரம்பிக்க வேண்டும்.

கேள்வி: பி. ஜே. பி. யின் அடுத்த தேசிய செயற்குழுக் கூட்டத்தைச் சென்னையில் நடத்தப் போவதற்கு ஏதேனும் விசேஷ காரணம் உள்ளதா?

அத்வானி: தமிழ்நாட்டில் எங்கள் கட்சி இன்னும் பலம் பெறவில்லை. இதை உத்தேசித்துத்தான் கல்கத்தா தேசிய செயற்குழுக் கூட்டத்தின் போது, அடுத்த கூட்டத்தைச் சென்னையில் வைத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டது. தென்னிந்தியாவில் மக்கள் ஆதரவைக் கோரப் போகிறோம்.

கேள்வி: மத்தியப் பிரதேசம், ஹிமாசலப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்களிலும் பி. ஜே. பி. ஆட்சி நடக்கிறது. இந்த மாநில ஆட்சிகளைக் கண்காணிக்க உங்கள் கட்சி என்ன வழிமுறைகளைக் கையாள்கிறது?

அத்வானி: நீங்கள் இந்த விஷயத்தைச் சுட்டிக்காட்டியது நல்லது. முதலமைச்சர்களுக்குச் சில செயல்பாட்டு முறைகளை விவரித்துள்ளோம். தேசிய அளவிலான விமர்சனக் குழு ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இதன் இறுதி வடிவம் சென்னை மாநாட்டில் முடிவு செய்யப்படக் கூடும். பி. ஜே. பி. யின் தேசியச் செயற்குழுதான் இதுபற்றி முடிவு செய்ய வேண்டும்.

கேள்வி: தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

அத்வானி: குறுகிய இன, வர்க்க வட்டங்களிலிருந்து விடுபட்டுப் பரந்த அளவில் தேச நலனைப்பற்றி அவர்கள் சிந்திக்க வேண்டும். தமிழர்களிடையே தேசிய உணர்வு குறைந்துவிட்டது. பிரிவினைப் போக்கும் வாதமும் அதிகரித்து விட்டன. தி. மு. க., அ. தி. மு. க. போன்ற மாநில அளவிலான கட்சிகளுக்குத்தான் இங்கு ஆதரவு இருந்து வந்திருக்கிறது. தேசிய கட்சியான காங்கிரஸ் இவற்றை நம்பித்தான் தேர்தலில் இறங்கியிருக்கிறது. தமிழக இளைஞர்கள் மட்டும் மனம் வைத்தால் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்த முடியும். அவர்கள் முதலில் சுய ஆராய்ச்சியிலும் விமர்சனத்திலும் ஈடுபட வேண்டும். அப்படிச் செய்தால் தேச நலனை மனத்தில் கொண்டு, விசாலமான பார்வையுடன் அவர்களால் பிரச்னைகளை அணுக முடியும். தேசத்தின் எதிர்காலம், தேசத்தின் இலட்சியம், என்று அவர்கள் நோக்கு விரிவடைந்து, எந்தக் கட்சி நாட்டு நலனுக்காக உழைக்கிறது என்பதை அவர்களால் எளிதில் புரிந்து கொள்ள முடியும். முதல் கட்டமாக, அவர்கள் சுயமாகச் சிந்திக்கத் தொடங்கட்டும்...!

பேட்டி: **ராஜகோபாலன்.**

படம்: **சுபா.**

"தமிழகத்தில் ஆயுதக் குவிப்பு—

●● எல். கே. அத்வானியின் திறமை வாய்ந்த தலைமைப் பொறுப்பில்தான் நீங்கள் சமீபத்திய தேர்தல்களில் வடக்கில் பெருமளவு இடங்களைப் பிடிக்க முடிந்தது என்று கூறலாமா?

ப: அத்வானி பலதரப்பட்ட கட்சிகளின் தலைவர்களையும் கவர்ந்திருக்கிறார்; அவரை மிக மோசமாக விமர்சிப்பவர்கள் கூட அவரது திறமையை ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆனால் எங்கள் வெற்றிகளுக்குத் தனியொருவரின் தலைமை மட்டுமே காரணம் அல்ல... வேட்பாளரின் தகுதி, கட்சி ஊழியர்களின் செயல்திறன், கட்சியின் தெளிவான கொள்கை இவை அமைப்பு ரீதியாக பலம் தருவதால்தான் மக்களின் ஆதரவு கிட்டியது. தனிநபர் பிரபையை மட்டும் நம்பி நாங்கள் அரசியல் நடத்துவதில்லை.

●● ராமஜன்ம பூமி; காஷ்மீர் ஆகிய இரண்டு விவகாரங்களிலும், நீங்கள் எடுத்து வந்திருக்கும் நிலை கடுமையானதாக இல்லையா?

ப: எதைக் கடுமை என்கிறீர்கள்? காஷ்மீர்ப் பிரச்னை நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் விடப்பட்டிருக்கும் ஒரு சவால். இதில் எப்படிச் சமரசம் செய்து கொள்ள முடியும்? யாருடன் செய்து கொள்வது? பாகிஸ்தானிய ஊடுருவல் இருக்கிறது அங்கே; நிர்வாகம் சீர்குலைந்து கிடக்கிறது. நிர்வாகத்தை ஸ்திரப்படுத்த வேண்டாமா? அரசாங்கத்தின் சட்ட ஒழுங்கு முறையை அமல்படுத்த வேண்டாமா? பிரிவினை வாதச் சக்திகளைத் தடுத்து நிறுத்த வேண்டாமா? இதற்கெல்லாம் குறைந்தபட்ச நடவடிக்கைகளாவது எடுக்கும் போது கடுமையாகத்தான் தோன்றும்.

காஷ்மீர் ஆளுனர் பதவிக்குப் பெயர்களைச் சிபாரிசு செய்யச் சொல்லிப் பிரதமர் பலரையும் கேட்டார். நாங்கள் சிபாரிசு செய்த ஒருவர் ஜக்மோகன். காஷ்மீர் நிர்வாகத்தில் முன் அனுபவம் உள்ளவர். ஆனால் வி. பி. சிங் அவரை நியமித்த கையோடு சில சக்திகளின் நிர்ப்பந்தத்துக்குக் கட்டுப்பட்டு அவரை நீக்கி விட்டார். எங்கள் வருத்தம் எல்லாம் பிரதமர் இவ்வாறு நிர்ப்பந்திக்கும் சக்திகளுக்குக் கட்டுப்படுகிறாரே என்பதுதான். மற்றபடி ஜக்மோகன்

சி.பி.ஐ. விசாரணை தேவை!"



— பாரதீய ஜனதா துணைத் தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி பேட்டி.

ஒரு பிரச்னை அல்ல. காஷ்மீர்தான் பிரச்னை.

ராம ஜன்ம பூமியை எடுத்துக் கொண்டால், அயோத்தியில் ராமர் கோயில் இருந்ததற்குச் சரித்திரத்திலும் அகழ்வாராய்ச்சியிலும் ஆதாரம் இருக்கிறது. பாபர் காலத்தில் இந்தக் கோயில் இடிக்கப்பட்டு மசூதி கட்டப்பட்டிருக்கிறது. அந்த மசூதியை அப்படியே கல்லுக்குக் கல் பெயர்த்து எடுத்துக் கொண்டு போய் வேறு இடத்தில் சிதையாமல் நிர்மாணித்து விடலாம் என்றுதான் சொல்லுகிறோம்.

●● அப்படி என்றால் சரித்திரத்தில் எத்தனையோ மாறுதல்கள் அவ்வப்போது நடந்து வந்திருக்கின்றன... அவற்றையெல்லாம் நாம் மீண்டும் தலையிட்டு மாற்றுவதா?

ப: அப்படிச் சொல்லாதீர்கள். ராம ஜன்ம பூமிக்குச் சிறப்பு அந்தஸ்து உண்டு. ராமருக்கு இந்த நாட்டில் ஒரு விசேஷ இடம் இருக்கிறது. ராஜீவ் கூட தமது தேர்தல் பிரசாரத்தை அயோத்தியில்தானே ஆரம்பித்தார்! நான் ராமராஜ்யத்தைக் கொண்டு வருவேன் என்றார். ராமர் சாமானிய மனிதரில்லை. சரித்திர புருஷர்... பல முஸ்லிம்களே கூட எங்கள் நிலைக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். 1947ல் சோம்நாத்தில் சர்தார் படேலின் ஆதரவுடன் மறுபடி கோயிலை நிர்மாணித்தார்கள். நேரு கூட அப்போது மறுப்புத்தான் தெரிவித்தார்.

●● இப்போதும் பலர் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்களே?

ப: சில பேர் அப்படித்தான் எதிர்ப்பார்கள். இது மாதிரி விஷயங்களில் நூறு சதவிகித ஆதரவு இருக்காதுதான்.

●● பாரதீய ஜனதாவுக்கு முஸ்லிம்களுக்கு எதிரான கட்சி என்றொரு இமேஜ் இருக்கிறதே?

ப: இதற்கு ஆரம்ப காரணகர்த்தா, பண்டித ஜவகர்லால் நேருதான். எங்களது எந்தக் கொள்கையிலும், திட்டத்திலும் அவரால் குறைகள் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் இந்த விதத்தில் எங்களைத் தூஷணை செய்ய ஆரம்பித்தார். அப்போது ஜனசங் ஆக இருந்த கட்சியின் சக்தி வாய்ந்த தலைவராக இருந்தவர் சியாம பிரசாத் முகர்ஜி. ஆனால் அன்றைக்கு நேருவின் பெர்சனாலிடிக்கு இருந்த கவர்ச்சி, மதிப்பு காரணமாக, எங்கள் மறுப்புப் பிரசாரம் அவ்வளவாக எடுபடவில்லை.

முஸ்லிம்கள் உண்மையில் எங்களுக்கு எதிரிகளல்ல; தில்லியில் முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் போட்டியிட்ட,

வி. கே. மல்ஹோத்ரா, மதன்லால் குரானா, அத்வானி போன்ற பாரதீய ஜனதாக்காரர்கள்தானே வெற்றி பெற்றிருக்கிறார்கள்! அரிஃப் பெக்கை எதிர்த்து நின்றவரும் முஸ்லிம்தான். ஆனால் பாரதீய ஜனதாவைச் சேர்ந்த அரிஃப் பெக்தானே வெற்றி பெற்றார்? நாங்கள் முஸ்லிம்களுக்கு எதிரானவர்களாக இருந்தால் கேரள, ஆந்திர மாநிலத் துணைத் தலைவர்களாக ரெஹ்மானையும், ஷாகிரையும் வைத்திருப்போமா? ராம ஜன்ம பூமி விஷயத்தில் கூட பல முஸ்லிம்கள் எங்கள் நிலையை ஏற்று ஆதரிக்கிறார்கள். உதாரணமாக — சிக்கந்தர் பக்த்...

●● தற்போதைய, தமிழக அரசியல் பற்றி...?

தமிழ் நாட்டில் ஆயுதக் கிடங்குகள் நிறைய இருக்கின்றன. ராமநாதபுரம், மதுரை, திருச்சி, தஞ்சாவூர், கோயமுத்தூர் ஆகிய மாவட்டங்களில் ஏராளமான ஆயுதங்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் AK-47 முதலிய நவீன ரக ஆயுதங்களும் உண்டு. எனக்குக் கிடைத்த தகவல்படி, கடற்கரைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட ஐந்து கோடி ரூபாய் பெறுமான ஆயுதங்களுடன் தொடர்புடையவர் யார் என்பது போலீசுக்கு ஏற்கெனவே தெரியும். போலீஸ் கண்டும் காணாமல் இருக்கிறது என்பது என் குற்றச்சாட்டு. தவிர, பிரிவினை வாதக் கோரிக்கையின் வேறுபட்ட வடிவங்கள் இங்கு உருவாகி வருகின்றன. மாநில அரசு இவற்றை எல்லாம் கண்டுகொள்ளாத மாதிரி இருக்கிறது; சி. பி. ஐ. விசாரணை நடைபெற வேண்டும் என்று கேட்கிறேன்.

●● அத்வானி என்ற மனிதர் பற்றி ஏதாவது சொல்ல முடியுமா?

இந்திரா காந்தி சிக்மகளூரில் போட்டியிட்ட போது, கர்நாடகப் பத்திரிகைகள் அனைத்திலும் பெரிய பெரிய விளம்பரங்களை வெளியிட்டது, அப்போதைய தேவராஜ் அர்ஸ் அரசு. தேர்தல் விஷயங்களைக் கவனித்துக் கொண்ட ஜார்ஜ் பெர்னாண்டஸ், அதுபோலவே எல்லாப் பத்திரிகைகளிலும் ஜனதா அரசு சார்பிலும் விளம்பரம் வெளியிட வேண்டும் என்று செய்தி — ஒலிபரப்புத் துறை அமைச்சராக இருந்த அத்வானியிடம் கேட்டுக் கொண்டார். "கட்சிக்கும், ஆட்சிக்கும் இடையே தெளிவான கோடு இருக்கிறது. நான் அதை மீற மாட்டேன்!" என்று உறுதியாகக் கூறிவிட்டார் அத்வானிஜி. இது போல் எத்தனையோ உதாரணங்கள் கூறலாம். மிக மிக நேர்மையும் கொள்கையில் உறுதியும் படைத்தவர் அத்வானி.

பேட்டி: **சாருகேசி.**

படம்: **ரமணன்.**



• வீராச்சாமி

• ஜெயவேலு

• வேங்கடராமன்

• மீனாட்சி

கல்வி பெற நடக்கும் போராட்டங்கள்

வீராச்சாமியின் தந்தை காலமாகி விட இவரையும் இவரது சகோதரர் — சகோதரியையும் வளர்த்து ஆளாக்க வேண்டிய பொறுப்பு இவர்கள் தாயின் தலையில் விழுந்தது. தாய் அஞ்சவில்லை. வயல்களில் நாள் முழுவதும் இடுப்பொடிய வேலை செய்து குழந்தைகளைக் காப்பாற்றியது மட்டுமல்ல; வீராச்சாமியைப் பட்டம் பெறுமளவுக்குப் படிக்கவும் வைத்தார்! 83 சதம் பெற்று பி. எஸ். ஸி. தேறிய வீராச்சாமி, தற்போது எம். எஸ். ஸி., படிக்கிறார். வேலையில் அமர்ந்து தன் தாயை வசதியாக வைத்துக் காப்பாற்றப் போகிற நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். வீராச்சாமியின் பட்ட மேற்படிப்புக்குப் பொருளுதவி செய்தது கல்கி நினைவு அறக்கட்டளை.

ஜெயவேலுவுக்குப் படிப்பில் இருந்த ஆர்வம் காரணமாகத் தினசரி பத்து கி.மீ. நடந்து பள்ளி சென்று வருவது சிரமமாகவே தோன்றவில்லை. ஆனால் வறுமை காரணமாகத் தகப்பனார் இவர் படிப்பைப் பள்ளி இறுதி ஆண்டுடன் நிறுத்தி விட எண்ணிய போதுதான் துடித்துப் போனார். இங்குமங்குமாகப் பலரிடம் கெஞ்சிக் கேட்டுக் கல்லூரிக் கட்டணம் கட்டிச் சேர்ந்தார். நோட்டுப் புத்தகம் வாங்க இவர் சகோதரி விறகு வெட்டிச் சேகரித்து வந்து விற்றுக் காசாக்கிக் கொடுத்தார்! அந்தக் குடும்பத்தில் முதன் முதலாகக் கல்லூரிப் படி ஏறியிருக்கும் ஜெயவேலுவின் பொருளாதாரக் கஷ்டத்தைக் குறைத்துக் கைகொடுக்க முன் வந்தது கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை.

பிளஸ் டு வகுப்பில் வேதியியல் ஆய்வு செய்கையில் வேங்கடராமனுக்குக் கண்ணில் ஆசிட் துளி பட்டு விட்டது. பல மாத சிகிச்சை பெற்று, கண் பார்வை திரும்பியது. ஆனாலும் நீர் வடிதல் தொடர்கிறது. வேங்கடராமனின் தந்தை விவசாயக் கூலி வேலை செய்கிறார். வருட வருமானமே ரூ 2500 தான். ஆயினும் முற்பட்ட வகுப்பினர் என்பதால் அரசு உதவித் தொகை கிடைக்காது. மிக நன்றாகப் படிக்கும் வேங்கடராமன் கல்வியைத் தொடர, கல்கி நினைவு அறக்கட்டளை உதவி புரிந்தது.

ஆலம்பட்டி கிராமத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த பண்டாரத்தின் பெண் மீனாட்சி. பாவம், இவருக்கு இரு கண்களும் தெரியாது. பார்வையற்றவர் ஆனாலும் பள்ளிப் படிப்பு முடித்து, பட்டப் படிப்புக்காக லேடி டோக் கல்லூரியில் சேர்ந்தும் விட்டார். ஆனால் கல்விக்கான கட்டணம் செலுத்த என்ன செய்வது? மீனாட்சியின் கல்விக் கண்கள் திறக்க உதவியது கல்கி நினைவு அறக்கட்டளை.


கடந்த மூன்று ஆண்டுகளாகக் கல்கி நினைவு அறக்கட்டளைக்கு வருகின்ற விண்ணப்பங்களில் இது போன்ற உண்மைக் கதைகள் ஏராளம். ஒவ்வொன்றும் ஒரு போராட்டக் கதை. போராட்டத்தில் வெற்றி பெறத் துடிக்கின்ற நிலை.


இப்படிப்பட்ட வீரம் மிக்க மாணவ இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் உதவ வேண்டும் என்ற ஆர்வம் உங்கள் உள்ளத்தில் பொங்கி எழவில்லையா? அவ்வாறு எண்ணம் தோன்றினால் தாமதிக்காதீர்கள். உடனடியாக உங்களால் இயன்ற பொருளுதவியை அறக் கட்டளைக்கு அனுப்பி வையுங்கள். தொகை பெரிதோ சிறிதோ நிச்சயமாக அது நல்ல காரியத்துக்குப் பயன்படும் என்ற மகிழ்ச்சி உங்களுக்கு உண்டு. படிப்பில் சிறந்து, பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மாணவ மணிகளுக்கு உதவ நீங்கள் அனுப்பும் நன்கொடை கைகொடுக்கும்.


நன்கொடைகளை டிராஃப்ட் அல்லது எம். ஓ. அல்லது க்ராசோலை மூலம் **KALKI KRISHNAMURTHY MEMORIAL TRUST** என்ற பெயருக்கு அனுப்பலாம். நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

விலாசம்: நெ 1, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை — 600 034.

கி. ராஜேந்திரன்,
(ஆசிரியர், கல்கி)
நிர்வாக அறங்காவலர்.


விடுதலைப் புலிகள்
இலங்கை ராணுவம் மீது தாக்குதல்
பேச்சு வார்த்தை


தி.மு.க.
கப்புனு புடிச்சிட்டேன்...
ஜெயலலிதா
அடடா, நழுவிடுச்சே
சட்ட நுணுக்கம் காரணமாக வழக்கு தள்ளுபடி – செய்தி


குறுவைச் சாகுபடிக்கு இடைக்கால ஏற்பாடா தண்ணி வுடச் சொல்லுங்க...
தஞ்சை விவசாயி
கவலைப் படாதே... நடுவர் தீர்ப்புக்கு விட்டாச்சு... இனிமே பேச்சு வார்த்தை கிடையாது... பத்தாயிரம் கம்யூனிஸ்டுகளை உள்ளே தள்ளிட்டேன்... எல்லாம் சரியாப்பூடும்!



கல்கி

1990 ஜூன் 24
மலர் : 48 இதழ் 47
பிரமோதூத ஆனி 10



விடுதலைப் புலிகளும் தமிழக அரசும்

இரண்டு நாள் சண்டையில் 85 பேர் பலியான பிறகு சிங்கள ராணுவமும் விடுதலைப்புலிகளும் போர் நிறுத்தத்துக்கு உடன்பட்டிருப்பதாகச் செய்தி. 'இந்தப் போர் நிறுத்தம் நீடிக்குமா?' என்றால், 'மறுபடி யுத்தம் வெடிக்கவே வாய்ப்பு அதிகம்' என்பதே பதில்.

அமைதிப்படையை வெளியேற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கில் விடுதலைப் புலிகளுடன் குலாவிய இலங்கை அரசு, இப்போது இரண்டும் கெட்டான் நிலையில் கிடந்து தவிக்கிறது. புலிகள் தங்கள் சுதந்திரத் தமிழீழக் கோரிக்கையை விடவும் இல்லை, ஆயுதங்களை ஒப்படைக்கவுமில்லை. இலங்கை அரசியல் சட்டம் விதிப்பது போல், 'பிரிவினை கோர மாட்டோம்' என்ற வாக்குறுதியை அளித்து விட்டுத் தேர்தல் களத்தில் இறங்கவும் அவர்கள் தயாராயில்லை.

பிணைக் கைதிகளாக விடுதலைப் புலிகள் பிடித்து வைத்திருக்கும் 600 போலீஸ்காரர்களின் கதி என்ன ஆயிற்றோ தெரியாது! பிரபாகரனுக்கு இலங்கை அரசு எச்சரிக்கை விடுத்த கையோடு, நீதித்துறை அமைச்சரைப் பேச்சு வார்த்தைக்கும் விரைந்து அனுப்பியது. விடுதலைப்புலிகளோ, 'வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து இலங்கை ராணுவம் முழுமையாக வெளியேற வேண்டும்' என்று பகிரங்கமாகப் பேசி வருகின்றனர். ஆகமொத்தம், சராசரி ஈழத் தமிழனுக்கு நிம்மதியோ, அமைதியோ, ஜனநாயக உரிமைகளோ அண்மைக் காலத்தில் கிடைக்கப் போவதில்லை.

இத்தகைய சூழ்நிலையில் தமிழக அரசின் பொறுப்பு மிகவும் அதிமாகிறது. தமிழக மீனவர்களைப் புலிகள் அடிக்கடி பிடிப்பதும் காவலில் வைத்திருந்து விடுவிப்பதும் உள்நோக்குடன்தான் என்பது இன்று பகிரங்க ரகசியம். கள்ளக்கடத்தலில் பல அத்தியாவசியப் பொருள்களை இங்கிருந்து கொண்டு போவதற்கு மட்டுமின்றி, நவீன போர் ஆயுதங்களைக் கடத்துவதற்குப் புலிகள் நம் மீனவர்களின் படகுகளைப் பயன்படுத்துகிறார்கள். தங்களுக்கு உதவுமாறு மீனவர்களை மிரட்டிப் பணிய வைக்கிறார்கள். தமிழகக் கடற்கரை ஓரப் பகுதிகளில், போராளிகள் நடமாட்டமும் ஆயுதங்கள் பதுக்கலும் பல காலமாகவே இருந்து வருகின்றன. பயிற்சி முகாம்கள் இங்கு உள்ளனவோ இல்லையோ, தமிழீழத்தில் தங்கள் நிலையைப் பலப்படுத்திக் கொள்ளும் முயற்சியில், தமிழகத்தின் கடற்கரையோரப் பகுதிகளைப் புலிகள் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

கடற்படைக் கப்பல் ஒன்றைக் கடலோரப் பகுதியில் நிறுத்தி வைக்கச் சொல்லியிருக்கிறார் முதல்வர். தமிழகப் போலீஸாருக்கு நவீன ஆயுதங்களில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறார். நெடுமாறன் இயக்கத்துக்கு இடம் தராமல் தடை விதித்துச் செயல்பட்டிருக்கிறார். 'தி. மு. க. பிரிவினை வாதத்தை விட்டொழித்து நீண்ட காலம் ஆகிவிட்டது' என்பதை மீண்டும் ஒருமுறை நினைவூட்டியிருக்கிறார்.

எல்லாம் சரிதான். ஆனால் புலிகளுக்கு அவர் வீர வணக்கம் செலுத்தியதும். அமைதிப்படையை அவமதித்ததும் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தை எழுப்பியுள்ளன. தி. மு. க. தீவிர நடவடிக்கை எடுக்காமல் மெத்தனமாக இருப்பதன்மூலமே, புலிகளுக்கு மறைமுக ஆதரவு தரும் என்ற ஐயப்பாடு மக்கள் மத்தியிலிருந்து நீங்க வேண்டுமானால் கலைஞர் ஒன்று சொல்ல வேண்டும்.

அதாவது, புலிகளின் வீரத்தைத் தாம் போற்றினாலும் அவர்களது வன்முறை — பிரிவினை கொள்கைகளைத் தாம் ஏற்கவில்லை என்பதைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். ஏனெனில், இன்று இலங்கை, வடக்கு கிழக்கு மாகாணத்தில் நடப்பது, நாளை தமிழகத்தில் நடக்காது என்பதற்கு உத்தரவாதமில்லை.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிட்டி பாப்பா. — பாரதியார்.

வீடு நிறைய விதவிதமான ஆந்தைகள்!





சரிவான கூரையுடைய அழகான வீடு. "வாருங்கள்" என்று பத்மினி யேசுதாஸன் நம்மை உள்ளே அழைக்கிறார். வீட்டினுள் நுழைந்ததுமே இடது பக்கத்தில் பெரிய, பிரம்பு ஸ்டாண்ட். அது நிறையச் சின்னதும் பெரிதுமாக ஆந்தைப் பொம்மைகள். வலது பக்கச் சுவரில் ஒரு சின்ன அலமாரி, அதிலும் ஆந்தைப் பொம்மைகள். பத்தடி நடந்து ஒரு பாதையைக் கடந்து வரவேற்பறைக்குள் நுழைவதற்குள், ஓர் ஆணியில் தொங்கும் சணலால் செய்த ஆந்தை வடிவ பொம்மை, மற்றொரு புறம் சின்னக் கூடைக்குள் அமர்ந்தபடி காதைப் பொத்திக் கொண்டு 'தலையில் இடி விழப் போகிறதே!' என்ற கவலையான முகபாவத்துடன் ஒரு துணி ஆந்தை, இரும்புக் கம்பியை வளைத்துச் செய்த 'வால் ஹாங்கிங்' ஆந்தை என்று ஒரே ஆந்தைகள் மயம்!

வரவேற்பறைக்குள்ளும் வீட்டின் இதர பகுதிகளிலும் ஆங்காங்கே அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் விதவிதமான ஆந்தைகளைக் கண்டு அசந்து போகிறோம்.

சில முறைக்கின்றன, சில சிரிக்கின்றன, சில ஆந்தைகள் 'திரு திரு' வென்று விழிக்கின்றன. வேறு சில டிடார் வாசித்தல், காப்பி குடித்தல், ஸ்வெட்டர் பின்னுதல் போன்ற 'மானுட' காரியங்களில் ஈடுபட்டிருக்கின்றன......

எம்பிராய்டரி செய்யப்பட்ட ஆந்தை ஜோடி; கடிகாரத்தின் பெண்டுலத்தில் குட்டி ஆந்தைகள்; டி.வி. யின் மேல் துணி விரிப்பில் ஆந்தை; சோபா குஷன்களில் ஆந்தைகள், தரைவிரிப்பில் பட்டாம்பூச்சிகளுக்கு நடுவே ஆந்தை; உயரமான அலமாரி நிறைய பீங்கான், கண்ணாடி ஆந்தைகள்; மர ஸ்டாண்டின் எல்லாதட்டுகளிலும் சின்னதும் பெரிதுமாக ஆந்தைகள்; மேஜையில் வெண்கலத்தில் வடித்த, கல்லில் செதுக்கிய ஆந்தைகள்......

வியப்புடன் இவ்வளவு ஆந்தைகளையும் நாம் பார்த்து முடிப்பதற்குள் சமையலறை பக்கம் அழைக்கிறார் பத்மினி. அங்கே ஜன்னலில் சாரி சாரியாக ஆந்தைப் பொம்மைகள்!


அதுமட்டுமா? அடுக்கி வைத்துள்ள மகோப்பைகள், முட்டை கிண்ணங்கள், உப்பு மிளகு டப்பாக்கள், காய்கறிவெட்டும் பலகை ஆகிய எல்லாமே ஆந்தை வடிவில் தான்!

மாடிப்படியின் திருப்பத்தில் உள்ள சிறிய இடத்தைக் கூட விட்டு வைக்கவில்லை பத்மினி. அங்கே பழங்கால மேஜை ஒன்றைப் போட்டு அதில் சில ஆந்தைப் பொம்மைகளை அடுக்கி வைத்திருக்கிறார். அதற்கு மேல் சுவரில் அலமாரி பொருத்தி ஆந்தைக் குஞ்சுகளின் வடிவம் பதித்த பீங்கான் தட்டுகளை அடுக்கி வைத்திருக்கிறார்.


"இந்தத் தட்டுகள் இங்கிலாந்தில் பிரத்யேகமாக 'ஆர்டர்' செய்து வாங்கியவை — ஒவ்வொன்றும் சுமார் நானூற்றைம்பது ரூபாய். உலகெங்கிலும் இருந்து ஆந்தைப் பொம்மைகள் வாங்கி வந்துள்ளேன்" என்கிறார் பத்மினி.

கண்ணாடி ஆந்தைகள்; ஆந்தை வடிவ செண்ட் பாட்டில்; பளிங்கு ஆந்தை; பிகாஸோ பாணி மாடர்ன் ஆந்தைகள்... தேடித் தேடி வாங்கி, பார்த்துப் பார்த்து அடுக்கி வைத்துள்ள பத்மினியின் ரசனை தெரிகிறது.

அழுக்குத் துணிக் கூடையைக் கூட ஸ்பெஷலாக ஆர்டர் செய்து ஆந்தை வடிவில் செய்யச் சொல்லி வாங்கியிருக்கிறார். நிலக்கரி, மாக்கல், இளிஞ்சல்,







ஆந்தைகள் அணிவகுத்து நிற்கின்றன.


"பொழுதுபோக்காக ஆரம்பித்த பழக்கம் இப்படி மியூசியம் போல் வளர்ந்து விட்டது. உறவினர்கள், நண்பர்கள் என்று எல்லோரும் எனக்கு ஆந்தைப் பொம்மை களையே பரிசு அளிக்கிறார்கள். சுமார் நானூற்றைம்பது பொம்மைகள் உள்ளன. இப்போது பம்பாய்க்கு மாற்றலாகிவிட்டது என் கணவருக்கு... எல்லாவற்றையும் பத்திர மாக எடுத்துச் செல்ல வேண்டும்..." — கவலையுடன் சொல்கிறார் பத்மினி.

"இவ்வளவு பொம்மை ஆந்தைகள் வைத்திருக்கிறீர்கள். நிஜ ஆந்தை வளர்க்க ஆசையில்லையா?" என்கிறோம்.

"அவற்றை எப்படிப் பராமரிப்பது என்று தெரியவில்லையே! ஒருமுறை அடிபட்ட ஆந்தை ஒன்றைக் கண்டெடுத்து ப்ளூ கிராஸில் கொடுத்து விட்டேன்."

"சரி, அடிப்படையான விஷயத்துக்கு வரு வோம். நீங்கள் ஏன் ஆந்தைப் பொம்மை களைச் சேகரிக்கிறீர்கள்?"


"எனக்கு ஆந்தைகளைப் பிடிக்கும். **I think they are cute!**" என்கிறார் பத்மினி யேசுதாஸன். அவர் சிரிக்கும்போது காதுகளில ஆந்தை வடிவத் தொங்கட்டான்கள் ஊசலாடுகின்றன!




— கலாமூர்த்தி.

புகைப்படங்கள்: **ரமணன்.**







• 'பொம்மை'க் கட்டுரையில் சைக்காலஜி, இலங்கை விஷயத்தில் சைக்காலஜி, பெண்களின் கண்ணீரை நம்பும் சினிமா ம.வி.யினர் சைக்காலஜி, மத்யமர் விமர்சனத்தில் சைக்காலஜி, நாட்டுக்கு விசுவாசமாயில்லாத மாப்பிள்ளையை மறுக்கும் 'சொர்ணா'வின் சைக்காலஜி, 'இடைவெளி' கதையில் 'வயது' சைக்காலஜி. இந்த இதழ் என்ன சைக்காலஜி ஸ்பெஷலா?

தஞ்சாவூர். ஜி. கே. ராம்.

• குழந்தைகளுக்கான விளையாட்டுச் சாமான்களை வாங்கும் போது கூட விளையாட்டுத்தனமாகத் தேர்வு செய்து விடக் கூடாது. பொம்மைகள் அவர்களின் ஆரோக்கியமான அறிவு வளர்ச்சிக்குத் துணை போகுமா என்பதைச் சிந்தித்து எச்சரிக்கையுடன் தேர்வு செய்ய வேண்டும் என்பது மனத்தில் பதியும்படி அழுத்தமாக, விளக்கமாகக் கூறப்பட்டிருந்தது அட்டைப் படக் கட்டுரையில். இப்போதுள்ள சூழ்நிலையில் நாட்டின் எதிர்காலச் சிற்பிகளை உருவாக்குவதில் பொம்மைகளின் பங்கும் உள்ளது என்பதை இக் கட்டுரை அழகாக உணர்த்தியது!

திருப்பரங்குன்றம். டி. கே. சுப்பிரமணியன்.

'நந்தவனத்து ஆண்டிதான் நினைவுக்கு வருகிறார்!'

• **ATM** என்பதன் செயல்பாட்டைப் பற்றி எழுதியிருந்தது மிகவும் உபயோகமானது. ஆனால் **ATM** என்பதற்கு **ANY TIME MONEY** என்பதல்ல உண்மையான விளக்கம். **AUTOMATIC TELLER MACHINES** என்பதே சரியானது.

மதுரை. ஓ. பாண்டிராஜன்.

• திருமணத்தில் மாப்பிள்ளையிடம் பத்து ரூபாய் கைமாத்து வாங்கி, அதையே அவருக்கு மொய் எழுதும் பரந்தாமனை (நகைச்சுவைத் துணுக்கில் குறிப்பிடப்பட்டவர்) எவ்வளவோ பாராட்டலாம். எங்கள் அலுவலகத்தில் இவ்வாறு இருபது ரூபாய் கடன் வாங்கி, பத்து ரூபாய் மொய் எழுதி விட்டு, விருந்து சாப்பிட்டு விட்டு, மீதி பத்து ரூபாயுடன் சீட்டாடும் கிளப்புக்கு விரைந்த மாப்பிள்ளையின் உயிர் நண்பர் ஒருவர் உண்மையாகவே இருந்திருக்கிறார்!

சிட்லபாக்கம். அ. ஷண்முக சுந்தரம்.

• 'முடிவல்ல துவக்கம்' — கதை படித்தேன். நேரிலே நடந்த நிகழ்ச்சியைக் கண்ட மாதிரி இருந்தது. தாழ்ப்பாள் திறந்து கொள்ளும் வரை படிப்பவர்களது மனமும் பரபரத்துக் கொண்டிருந்தது கதாசிரியருக்குக் கிடைத்த வெற்றி!

திருச்சி — 16. ஞானமைந்தன் எஸ். ராஜகோபால்.

• 'அவரவர் கணக்கு' சிறுகதை 'பதவியிருந்தா பத்து பேரு' என்ற பாடல் வரிகளை உண்மையாக்கியது.

தஞ்சாவூர். மா. அதிராமவிஜயன்.

• 'இடைவெளி' சிறுகதையில் ஆலையின் மேனேஜர் தம்மிடம் வேலை பார்க்கும் இருவருக்கிடையே ஏற்படவிருந்த விரிசலைத் தவிர்த்த விதம் அசர வைத்து விட்டது. கோபத்தில் கொட்டியவற்றைப் புறக்கணித்து நல்ல வார்த்தைகளை மட்டும் மற்றவர் காதில் போட்டு அவர்கள் மனத்தைக் கோதிச் சிக்கு எடுத்துக் கோபத்தைக் குளிரக் குளிர ஆற்றி விட்டாரே! படிப்பறிவும், அனுபவ அறிவும் இணைந்தால் ஆக்க பலன் முழுமையாகக் கிடைக்கும் என்பதை உணர்த்தும் இக் கதை, என்னை மிகவும் கவர்ந்தது.

சிறுமுகை. ஜெகதாம்பாள்.

• நானறிந்த வரையில் ஏன் இந்த நாடறிந்த வரையில் மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்குத் தமிழகம் ஒட்டுமொத்தமாகத் தருகின்ற மரியாதையில், மதிப்பில் கடுகளவும் குறையாமல் முதல்வர் கலைஞர் தந்தே வந்துள்ளார். தொடர்ந்து தருவார் என்கிற போது "அந்தக் கார்ட்டூன்" அவசியம் தானா?

பெங்களூர். ப. மூர்த்தி.

• ஆரணி தொகுதியைக் கண் முன்னே நிறுத்தி, குறைகளை அலசிய விதம் அருமை. எங்கள் தொகுதிக்கு எப்பொழுது விசிட் வருவீர்கள் என்று மனம் அலைபாய்கிறது!

கடலூர் — 1. சாந்தன்.

• காஷ்மீர்ப் பிரச்னையில் அரசும், அனைத்து அரசியல் கட்சிகளும் அரசியல் ஆதாயம் தேடும் நோக்கில் செயல்படுவதை நிறுத்தாத வரையில், (தலையங்கம்) ஜக்மோகன்களோ, ஸாக்ஸேனாக்களோ ஒன்றுமே செய்து விட முடியாது. ஒற்றுமைதான் இப் பிரச்னையைக் கட்டுக்குள் வைக்கக் கூடிய ஒரே வழி.

வேலூர். கே. ஆர். தேவேந்திரன்.

• காஷ்மீரைப் பற்றிய தங்கள் தலையங்கம் சிறப்பாக இருந்தது. தற்போதைய நிலை தெளிவாகக் காணப்படுகிறது. ஆட்சியாளர்கள் எப்படி நடந்து கொண்டு இருந்தார்கள், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது விளக்கப்பட்டுள்ளது. இன்றைய நிலையைப் பார்த்தால் 'நந்தவனத்தில் ஓர் ஆண்டி...' பாட்டுத்தான் நினைவுக்கு வருகிறது!

போரூர். பா. வெங்கடேசன்.

கல்கி 17.6.90 அட்டைப் படத்தில் இடம் பெற்றவர்கள் 'டிஜிகான்' கம்ப்யூட்டர் நிறுவனத்தில் வேலை பார்க்கும் குமாரி விஜயலட்சுமி, குமாரி சல்மா.

— ஆசிரியர்.

நேயர்கள் ஜெயிக்கட்டும்

அன்புள்ள சிவச்சந்திரன் அவர்களுக்கு......

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம், ஆகிய பொறுப்புக்களைச் சுமந்திருக்கும் உங்களுக்குச் சில பாராட்டுக்களையும் சில சந்தேகங்களையும் தெரிவித்துக் கொள்ள விரும்பும் ஒரு திரைப்பட ரசிகனின் கடிதம்.

முதலில் சில பாராட்டுக்கள்:

1. குடும்பப்பாங்காகவும், தேவைப்படும் போது குமுறிக் கொந்தளித்தும் தம்முடைய நடிப்பு அனுபவம் மெருகேற்றித் தந்துள்ள ஆற்றலைப் புலப்படுத்துகிறார் லட்சுமி.

2. நெஞ்சுக்குள் வெடிக்கும் எரிமலையை வெளிப்படுத்தவும் வழியில்லாமல், உள்ளுக்குள்ளேயே கட்டுப்படுத்தி வைத்திருக்கவும் முடியாமல் தவித்து, கண்கள் கலங்க, உதடுகள் சுழிக்க, கன்னங்கள் துடிக்கத் தம்முடைய பண்பட்ட நடிப்பை வெளிப்படுத்துகிறார் சிவகுமார்.

3. முதல் படமேயானாலும் சரளமாக நடித்து, ஆடிப் பாடி, கண்ணீர் வசனம் பேசித் தம்முடைய வருங்கால வெற்றிகளுக்கு வலுவான அடித்தளம் அமைத்துக் கொள்கிறார் ஐஸ்வர்யா.

4. அடக்கி வாசித்தே ஆணவத்தையும் குரூரத்தையும் வெளிப்படுத்தி வித்தியாசம் காண்பிக்கும் விஷம் நிறைந்த வில்லனாகத் திகழ்கிறார் கிட்டி.

மகிழ்ச்சி. இனி சில சந்தேகங்கள்:

"ஆதாரம் இல்லாமல் எந்தச் செய்தியையும் வெளியிட முடியாது. அப்படி வெளியிடுவதும் கூடாது'' என்று பத்திரிகை ஆசிரியர் லட்சுமி மறுத்து விடுவது சரி. ஆனால், அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல், 'சிலர் அப்படிச் செய்கிறார்கள் — சிலர் இப்படிச் செய்கிறார்கள்' என்று ஆவேசமாகப் பிரசங்கம் செய்கிறாரே, அவசியமா?

கடற்கரையில் காத்திருக்கும் காதலனை இரண்டு அலிகள் நெருங்கி விரசமான விவகாரங்களில் ஈடுபடுவதும், அந்த நிகழ்ச்சியைக் காதலியே ஏற்படுத்தி அவனுடைய அவதியைக் கண்டு சிரிப்பது போலக் காண்பித்திருப்பதும் எந்த வகையான ரசனையில் சேரும்?

வக்கீலுக்குப் படித்த பெண் என்று மட்டுமே அறிமுகமாகும் அமைச்சரின் மகள் திடீரென்று பப்ளிக் பிராசிக்யூட்டராக மாறி அவருக்கெதிராக நீதிமன்றத்தில் வாதாடுவது எப்படி?

"ரம்பா... ரம்பா'' என்று எஸ். எஸ். சந்திரன் ரம்பையையும் இந்திரனையும் தேடித் திரியும் அந்த ரம்பமான நகைச்சுவை யாருடைய கற்பனை?

அண்மையில் ஓர் ஆங்கில நாளிதழுக்கு அளித்துள்ள பேட்டியில் பிரபல தமிழ்ப்பட இயக்குனர் ஒருவர் இவ்வாறு கூறியிருக்கிறார்: ''ஒரு கோயிலுக்குத் தெய்வத் திருவுரு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் ஒரு திரைப்படத்துக்கு நல்லதொரு கதை.

இன்றையத் திரையுலகப் பிரமுகர்கள் இந்த எளிய உண்மையில் தங்கள் கருத்தைச் செலுத்துவதில்லை என்பதுதான் வருத்தமான விஷயம்.

இப்படிக்கு,

திரைப்பட ரசிகன்

— சி. ஆர். கே.



யூரேகா ஃபோர்ப்ஸ் நிறுவனத்திலிருந்து வரும் நண்பர், உங்கள் வீட்டிலுள்ள தூசையும் அழுக்கையும் மிக எளிதாக அகற்றும் வழியை செய்து காட்டப் போகிறார்.

வரும் நாட்கள் ஏதேனும் ஒன்றில் யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் உங்கள் வீட்டுக் கதவைத் தட்டி, அடையாளச் சீட்டுடன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வார்

அவர் பேச்சில் தன்னம்பிக்கை தொனிக்கும்—இதில் வியப்பேதும் இல்லை. ஏனெனில், இவர் இந்தியாவிலேயே இது போன்ற நிறுவனங்களில் மிகப் பெரியதும் வெற்றிவாகை சூடியதுமாகிய விற்பனை நிறுவனத்தின் அங்கத்தினர் ஆவார். இந்நிறுவனம் விற்பனைக்குப்பின் நம்பகமான சேவை புரியும் பின்னணி கொண்டது.

தூசு, சூழ்நிலை அசுத்தம், அசுத்தமான நீர் மற்றும் வீட்டு வேலைகளில் உதவியின்மை போன்ற இன்றைய பிரச்சினைகளை சமாளிப்பதற்கென நவீன வீட்டுபயோக சாதனங்களை அவர் உங்களுக்கு அறிமுகப்படுத்துவார்.



செயல்முறை விளக்கத்திற்கு இவரிடம் இரண்டு இணையற்ற தயாரிப்புகள் உள்ளன. யூரோக்ளீன்: அனைத்துபயோக சுத்தம் செய்யும் சாதனம். இது வேக்வம் கிளீனரை விடச் சிறந்தது. மற்றும் அக்வாகார்ட்: நீர் பைப்பில் பொருத்தக்கூடிய வாட்டர் ஃபில்டர் கம்-ப்யூரிஃபையர்.


யூரோக்ளீன்: உங்கள் வீட்டில் உள்ள தூசு மற்றும் சிறு துரும்புகளையும்கூட சிரமமின்றி எளிதில் அகற்றுகிறது. கண்ணிற்கு புலப்படாத தூசுகள்கூட அகன்றுவிடும்.

அக்வாகார்ட்: ஒரு ஸ்விட்சை இயக்கி, குழாயைத் திறந்தால் கிருமிகள் அற்ற, பாதுகாப்பான சுத்தமான குடிநீரை உங்கள் குழாயிலேயே நீங்கள் பெறலாம்.

உங்கள் குடும்பத்திற்கு சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கான நவீன முறைகளை இத்தயாரிப்புகள் எவ்விதம் வழங்குகின்றன என்பதை யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் உங்கள் வீட்டிலேயே உபயோகித்து விளக்குவார். அதன் மூலம் உங்களைச் சுற்றிலும் சுத்தமும், சுகாதாரமும் நிறைந்த உலகம் உருவாகும்.

அவர் உங்கள் வீட்டிற்கு வரும் நாள்வரை நீங்கள் காத்திருக்க வேண்டாம். விரைவில் வருகை புரிய கீழ்க்காணும் யூரேகா ஃபோர்ப்ஸ் அலுவலகங்கள் ஏதேனும் ஒன்றில் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது இம்முகவரிக்கு எழுதுங்கள்: யூரேகா ஃபோர்ப்ஸ் லிமிடெட், பி.ஒ. பாக்ஸ் 936, ஜி.பி.ஒ. பம்பாய்-400 001.







24

மணல்வெளி மான்கள்

மீண்டும் வேலூர். மீண்டும் வக்கீல். மீண்டும் தொரப்பாடி ஜெயில். மீண்டும் ஆதி இளைத்திருந்தான். நிறம் திரும்பியது போல் முகத்தில் ஒரு வெளுப்பு. ஆதியின் கண்களில் எப்போதும் ஒரு ஜீவத் துடிப்பு இருக்கும். ஒரு நிலை கொள்ளாமை அதே சமயம் ஓர் உற்சாகம்.

அவை இல்லை. வெறிச்சிட்டு. ஒரு தீர்மானத்துக்கு வந்து, அதிலேயே எரிந்து கருகி விடச் சித்தமானது போல் ஒரு பார்வை.

''தம்பி உன்னை அடிச்சிட்டானுங்களாமே?''

கௌதமைப் பார்த்ததும் ஆதி கேட்டான்.

''யார் சொன்னது?''

''ஜெயில் வார்டரு ஒரு கண்ணாலத்துக்கு ஊருக்குப் போயிருந்தாரு.''

வக்கீல் இருவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

''நான் துடிச்சுப் பூட்டேன்.''

கௌதம் அவன் தோளைத் தொட்டான்.

''எனக்கோசரம் கண்ட கயிலாத்துங்ககிட்டே எல்லாம் நீ அடி வாங்கணுமா?''

அவன் தோளைக் கௌதமின் விரல்கள் மெதுவாய்த் தட்டின.

''இந்த ரொணத்தை எல்லாம் நான் எப்படித் தீர்க்கப் போறேன்! வாணாம் வுட்டுரு தம்பி. வக்கீல் சார், நீங்களும் இவரோட சேந்துக்கினு எதுக்குப் பேஜார் படறீங்க... வாணாம்.''

கௌதம் அவன் தோளை இறுக்கிப் பிடித்தான்.

''நான் இன்னா சார் பிசாத்து. நான் வெளியிலே வந்து என்னா சாதிக்கடப் போறேன். என்னை மாதிரி அநாமத்துக்காக இவ்ளோ பாடுபடணுமா? கௌதம் தம்பி இன்னும் எவ்வளவோ பார்க்க வேண்டி இருக்கு. சாதிக்கணும். ஒண்ணும் வாணாம் சார். இத்தோட வுட்டுருங்க. அவனுங்க பொய்க் கேஸு போட்டா போட்டுனு போவட்டும். என்னமோ தீர்ப்பு கெடைக்கட்டும். தண்டனையை அனுபவிச்சிக்கிறேன்.''

வக்கீல் அவன் உணர்ச்சிப்பெருக்கில் தலையிட்டார்.

''விஷயம் நீ ஜெயிலுக்குப் போறியா தண்டனை அனுபவிக்கிறியாங்கறதில்லே ஆதி!''

அவர் வார்த்தைகள் உஷ்ணமாக வந்தன. ஆதி சூடுபட்டவன் போல் நிமிர்ந்தான்.

''கௌதம் அடி வாங்கினது கூடப் பெரிசு இல்லே. இந்த அக்கிரமம் ஒங்க ஊர்லே.

தொடர்ந்து நடந்துக்கிட்டே இருக்கலாமா?"

ஆதி அவரைப் பார்க்க விரும்பாமல் தரையைப் பார்த்தான்.

''தலை குனிஞ்சிக்கினியே... சொல்லு! போன தடவை தொளசிங்கத்தைத் தீத்துக் கட்டிட்டு நெஜமாவே ஜெயில் தண்டனை அனுபவிக்கிறேன்னே. இப்ப ஒண்ணுமே வேணாம். என்னை விட்டுடுங்கிறே. வேற வேலை வெட்டியில்லாம நாங்க அலைய றோம்னு நெனக்கிறியா?''

வக்கீலின் வார்த்தைகளுக்குப் பலனிருந்தது. ஆதி மௌனமாகி விட்டான்.

''நான் கோபமாய்ப் பேசறேன்னு நெனக்காதே ஆதி! உன்னை ஒரு குற்றமும் செய்யாத நிரபராதியாச்சேன்னு விடுதலை வாங்கித் தர்றதுக்காக மட்டும் இவ்வளவு மெனக்கெடறோம்னு நீ நெனச்சுக்கிட்டிருக்கியா?''

''சார்... ப்ளீஸ்'' என்று அவரைத் தணிவிக்க முயன்றான் கௌதம்.

''நீ சும்மா இரு கௌதம்! ஆதிக்கு ரெண்டொரு விஷயம் புரியணும்.''

கௌதம் பேசவில்லை. அவர் மீண்டும் ஆதியிடம் தொடங்கினார்.

''அநியாயம் ஒனக்கு நடந்ததா இன்னொருத்தனுக்கு நடந்ததான்றது முக்கியமில்லேய்யா. அது எவனுக்கும் நடக்கக் கூடாது. நீ பரவால்லே. ராமா கோவிந்தான்னு தர்ற தண்டனையை வாங்கித் தோளிலே போட்டுக்கிட்டு ஜெயிலுக்குப் பூடுவே.''

நீதியின் சீற்றத்தின் முன் நிற்கும் உணர்வு அவனுக்கு வந்தது.

''இந்த ஆளு உன்னை ரிலீஸ் பண்ண ஊராறியப் பாடுபட்டிருக்காரு. ஒதை வாங்கியிருக்காரு. கடைசியிலே எல்லாம் உப்புக்கு ஒதவாத சமாசாரம்னு ஆய்ட்டா தலை தூக்க முடியுமா இவரு?''

ஆதி தலை நிமிரவில்லை.

''ஊர்ல ஒவ்வொருத்தனும் எனக்கு என்ன வந்ததுன்னு ஒதுங்கிட்டான். இப்ப இந்த ஆளும் ஒதுங்கிட்டா எவன் அந்தக் கொலையைச் செஞ்சானோ அவன் கொடி கட்டிப் பறப்பான். சரிதாங்கிறியா?''

இன்னும் ஆதியால் பேச முடியவில்லை.

''அப்புறம் அவனை எவன் தட்டிக் கேக்கறது? நீதி எதுக்கு.. நியாயம் எதுக்கு.. போலீஸு கோர்ட்டு, சட்டம் எல்லாம் எதுக்கு.. சும்மா பாவ்லாவுக்கு இருக்குன்னு நெனச்சியா?''

ஆதி கண்கள் தளதளக்க நிமிர்ந்தான்.

''நான் என்ன சார் பண்ணட்டும்?''

''அப்படி வா வழிக்கு. நாங்க ஒன்னை பெய்ல்ல எடுக்கணும்னு நெனக்கிறோம்.''

ஆதியின் முகம் சட்டென்று கருங்கிற்று.

''தாராளமா எடுங்க சார். ஆனா இவ்வளவு நடந்தப்புறம் நான் வெளியே வந்து என்ன பண்ணுவேன்னு என்னால சொல்ல முடியாது.''

''என்னாய்யா சொல்றே?''

''இப்போ சொன்னீங்களே.. கோர்ட்டு போலீஸுன்னு இதுலே எத்தினி ஓட்டை இருக்குதுன்னு எனக்கும் தெரியும் சார். துளசிங்கம் இல்லாடி. ஒரு சின்ன ஓட்டை இருந்தாலேயே அவனுக்குப் போதும். தப்பிச்சுடுவான்.''

''அதனாலே...?''

''காலம் பூரா ஒழைச்சிட்டு எவனோ எரிஞ்சு சாவறது. யாரோ ஒதை வாங்கறது. இவனுங்க மறுபடியும் ஊர்ல பெரிய மனுஷனாத் திரியறது. இதெல்லாம் பார்த்துக்கினு பொழைக்கிறதை விட அவனை ஒரே சீவு சீவிட்டு மறுபடியும் அட தூக்கோ ஆயுளோ வாங்கினு போனா இன்னா பூடப் போவுது?''

ஆதியின் கண் ஜொலித்தது.

''லீவ் ஹிம்'' என்றான் கௌதம்.

ஆதி கொதிப்புற்றிருக்கிறான். சிறை அவனது அச்சங்களைத் தண்ணீர் தெளித்து நீக்கியிருக்கிறது. வாழ்வின் விளிம்புக்கு வந்தவனின் மூர்க்கம் அது. இங்கே சோதிக்கக் கூடாது.

வக்கீல் தம் கண்ணாடியைக் கழற்றி ஒரு முறை துடைத்து மாட்டிக் கொண்டார்.

''சரி... ஒன்னைப் பெய்ல்லே எடுக்கிற விஷயத்தை அப்புறமா பேசலாம்! சம்பவம் நடந்த அன்னிக்குச் சாயங்காலம் நடந்ததை மட்டும் சாந்தமா ஒன்னால சொல்ல முடியுமா?''

''சார்...'' என்று ஆதி குறுக்கிட முயற்சி செய்தான்.

''நீ சட்டம் போலீஸ், கோர்ட்டுன்னு எல்லாத்தையும் ஒரே தாவா தாவிட்டேப்பா. புரியுது.. நாங்க இன்னும் ஒரு பவுண்டரிலே நிக்கறோம். அதை நம்பறோம். புரியல்லே...? அட்லீஸ்ட் நாங்க மெனக் கெடறதுக்கு நீ இந்த உதவியாவது செய்ய விரும்பினாச் சொல்லு.. இல்லே முடியாதுன்னா விட்டுடு.''

''கேளுங்க சார்.''

''சாயங்காலம் நீ எங்கே போனே?''

''ரேஷன் கார்டுலே கிஷ்ணாயில் வாங்கியாரப் போனேன்.''

''எத்தனை மணிக்கு?''

''ஆறு மணிக்கு.''

''வாங்கிட்டு அப்புறம்?''

''தெரிஞ்சவர் சைக்கிள்ளே டபிள்ஸ் உட்கார்ந்துட்டுப் பேசிக்கினே வந்தேன்.''

''எது வரைக்கும்?''

''ப்ரிட்ஜ் வரைக்கும்.''

''கையிலே கெரஸின் டின் இருக்கு?''

''ஆமா சார்.''

''யாரு உன்னை டபிள்ஸ் கூட்டினு

வையவன்

வந்தது?''

''அன்னவாசல்கார ஆளு. பேரு நடேசன்.''

''பிரிட்ஜ் வந்ததும் என்ன பண்ணே?''

''எறங்கிட்டேன்.. அந்த ஆளு எறங்கினாரு. ரெண்டு பேரும் அஞ்சு நிமிஷம் பேசினோம்.''

''அப்புறம் அவரு போய்ட்டாரா?''

''ஆமா.''

''நீ எவ்வளவு நேரம் தனியா உட்கார்ந்திருந்தே?''

''அஞ்சு நிமிஷமோ பத்து நிமிஷமோ இருக்கும். ஒரு பூந்துறை போச்சு. அது என்னைக் கிராஸ் ஆவற வரைக்கும் அங்கே குந்திக்கினு இருந்தேன். அது போனதும் ஒரு சிகரெட்டு பிடிக்கணும்னு பாக்கெட்லருந்து ஒண்ணு எடுத்தேன். தீப்பெட்டி இல்லே. வழியிலே அன்னவாசல்கார ஆளு ஒருத்தர் வந்தாரு. அவர்கிட்டே கேட்டேன்.''

''குடுத்தாரா?''

''குடுத்தாரு.''

''சிகரெட் பத்த வச்சுட்டு நீ தீப்பெட்டியைத் திருப்பிக் குடுத்தியா?''

''குடுத்தேன். அவரு வேண்டாம்னுட்டாரு.''

''ஏன்?''

''அதிலே ரெண்டே குச்சி இருந்தது. நான் வேற வாங்கிக்கிறேன் ஆதின்னு பூட்டாரு.''

''அப்புறம்?''

''தூரத்திலே துளசிங்கம் மோட்டார் சைக்கிள்ளே வந்துட்டிருந்தான். எனக்கு அவன் மூஞ்சியைப் பார்க்கவே புடிக்கலே. எழுந்து வந்துட்டேன்.''

''ஏன் புடிக்கலே?''

ஆதி மௌனமானான்.

''சொல்லு ஏன் புடிக்கலே?''

அவன் அவரை எரிச்சலோடு நிமிர்ந்து பார்த்தான்.

''சார் அவன் ஊரான் பொண்டாட்டியோட பப்ளிக்கா கொலாவுவான். எனக்கு எரிச்சல்னா எரிச்சல். என் நெலத்து மேல் வண்டியை ஓட்டிக்கிட்டுத்தான் மாசிலா பொண்டாட்டியைப் பார்க்க அவன் போவணும். நெலத்து மேல வராதேன்னு சத்தம் போட்டேன். ரெண்டு நாள்ல அந்த சிறுக்கியே அவன்கிட்டே போய்ட்டா. அதிலருந்து அவன் என்னைத் தெனாவுட்டாப் பார்ப்பான். அதான் எனக்குப் புடிக்கலே.''

''சரி.. எழுந்துட்டே. எங்கே போனே?''

''வீட்டுக்குப் போய்ப் படுத்துட்டேன்.''

''தட்ஸ் ஆல் போதும்...''

அவர்களிருவரும் ஜெயிலை விட்டுப் புறப்பட்டனர்.

வழியில் கௌதம் அவரிடம் பேச்சுக் கொடுத்தான்.

''வழக்கு விசாரணைக்கு வர்ற வரைக்கும் காத்திருக்கறது தான் ஒரே வழியா சார்?''

வக்கீல் ஸ்டீரிங் வீலைத் திருப்பியவாறே அவன் பக்கம் திரும்பினார்.

''இன்னும் கூட உன் டயத்தை இவனுக்காக நீ வேஸ்ட் பண்ணப் போறியா கௌதம்?'' என்றார்.

அவன் திடுக்கிட்டான்.

''என்ன சார் சொல்றீங்க?''

''இட்ஸ் எ வேஸ்ட் ஆஃப் டைம்.''

''சார்!''

''இவன் டோட்டலா, கூடிய சீக்கிரம் ஒரு சமூக விரோதியாயிடுவான்.''

அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''எப்படிச் சொல்றீங்க?''

''இவனுக்குக் கல்யாணம் ஆகல்லே இல்லே?''

''இல்லே. இன்னும் ஆகல்லே.''

''அண்ட் ஒரே ஒரு ஊமைத்தாய்தான் இருக்கா இல்லே?''

''ஆமாம்.''

''ஜெயில் இப்படிப்பட்ட ஆசாமிங்களைச் சுலபமா கரப்ட் பண்ணிடும். இப்ப இவனுக்கு வெஞ்சென்ஸ் வேற இருக்கா.. ம்ஹூம் லகுவா எரையாயிடுவான்.''

ஆதி விஷயத்தில் அது நடக்காது. கௌதம் தன் நம்பிக்கை சுஸ்வரமாவதை உணர்ந்தான். நடக்க விடக் கூடாது. இப்போது தெம்பு வந்தது.

கோர்ட் அருகே அவனை இறக்கி விட்டு விட்டு விடைபெறும் போது வக்கீல் கை குலுக்குவதற்காகத் தம் கையை நீட்டினார்.

''எதுக்கு சார்?''

''உன்னுடைய உண்மையான ஈடுபாட்டிற்காக.''

''சார்... கேஸ்?''

''கவலைப்படாதே. நான் சொன்னது வெறும் கமெண்ட். ஒரு ப்ரிகாஷன்னு வேணா எடுத்துக்க. அவ்வளவு சுலபத்திலே விட்டுடுவமா என்ன? எப். ஐ. ஆர். காப்பி வாங்கிப் பாத்துட்டு உனக்கு ஆள் அனுப்ப



— வேதபுரி எஸ். இரமேஷ்.



ஹார்லிக்ஸ்
கூடுதல் கால்ஷியத்துடன்
Great Nourisher
"வளரும் குழந்தைகளுக்கு கூடுதல் கால்ஷியம் தேவைப்படுகிறது"
ஹார்லிக்ஸ் கூடுதல் கால்ஷியத்துடன் செறிவூட்டப்பட்டிருக்கிறது– வளரும் குழந்தைகளின் வலுவான பற்களுக்கும், ஆரோக்யமான எலும்புகளுக்கும், குடும்பத்தினர் அனைவரின் ஆரோக்யத்திற்கும் மிகவும் முக்கியமானது.
ஹார்லிக்ஸ் முழுவதும் இயற்கை ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது–புரோட்டீன்கள், விட்டமின்கள், மினரல்கள் மற்றும் கார்போ ஹைட்ரேட்டுகள்–இவை சக்தியும், ஊட்டமும் அளிக்கின்றன. கூடுதல் கால்ஷியத்தினால், கூடுதல் ஆரோக்யம்!
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்
Horlicks
WITH EXTRA CALCIUM
The Great Nourisher
HTA6751TAM



இந்தியாவின் இதயம் பம்பாய்: எப்படி?

1. மொத்த வருமான வரியில் மூன்றில் ஒரு பகுதி; 2. மொத்த சுங்க வரியில் 60 சதவீதம்; 3. மொத்த எக்ஸைஸ் வரியில் 20 சதவீதம் அரசுக்கு அளிப்பது பம்பாய்தான்.

இதன் துறைமுகம் மொத்தக் கப்பல் சரக்கில் 40 சதவீதத்தைக் கையாள்கிறது. நாட்டின் மிகப் பெரிய எண்ணெய் எடுப்பும், எரிவாயு உற்பத்தியும், அணு ஆலையும், கப்பல் தொழிற்சாலையும் பம்பாயில்தான்.

— ராஜீவி நரசிம்மன்.

றேன்.''

கோட்டை வாசலைத் தாண்டும் போது யாரோ பின்னால் அவன் தோளைத் தொட்டார். ஒரு வழிப்போக்கர். சற்றுத் தூரத்தில் பின்னால் மோட்டார் சைக்கிளில் அமர்ந்திருக்கும் இன்ஸ்பெக்டர் இருதயராஜ் கூப்பிடுவதை அவனுக்கு அஞ்சல் செய்தார்.

எங்கே போனாலும் இவர் எதிர்ப்பட்டுக் கொண்டிருக்கிறாரே, என்று நினைத்துக் கொண்டே திரும்பி நடந்தான் கௌதம்.

''எங்கே கௌதம்?''

''வக்கீலைப் பார்க்க வந்தேன்.''

''என்ன சொல்றாரு?''

இனி இவரிடம் மறைக்க வேண்டிய அவசியமில்லை.

''ரெண்டு பேரும் ஜெயிலுக்குப் போய்ட்டு வந்தோம்.''

''ஆதிக்குப் பெய்ல் வாங்கவா?''

''ஆமாம்.''

''என்ன இம்ப்ரூவ்மெண்ட்?''

''தமாஷ் பண்றீங்களா சார்?''

அவர் முகம் மாறியது.

''ஒய் ஷுட் ஐ?'' என்றார்.

''நீங்கதான் செக்‌ஷன் போட்டீங்க. நீங்க தான் அரெஸ்ட் பண்ணி எப். ஐ. ஆர். எழுதினீங்க. உங்களுக்கே கூட ஆதி நிரபராதின்னும் தெரிஞ்சிருக்கலாம். நிரபராதிகள்னாம் அவன் மாதிரி ஏழைகளா இருந்தா வெளியே வர முடியாதுன்னும் ஒங்களுக்குத் தெரிஞ்சிருக்கு...''

கௌதம் குரலை உயர்த்தாமல் பணிவின் வரம்புகள் மீறாத நிதானத்தோடு சொன்னான்.

''நீ ஒரு ஸ்போர்ட்ஸ்மன் கௌதம். கம் ஆன் பி ஸ்போர்டிவ். இவ்வளவு வருத்தப் படக் கூடாது.'' இன்ஸ்பெக்டர் சிரிக்க முயன்றார்.

''என் தோல்வியை நான் சந்தோஷமா எத்துக்குவேன் சார். இது என் தோல்வியில்லே?''

''அப்போ?''

கௌதம் ஒன்றும் சொல்லாமல் அவரைப் புண்பட்டது போல் பார்த்தான்.

''இது யார் தோல்விங்கறே?''

மீண்டும் மௌனமாகவே இருந்தான்.

''ம்ம்.. தென் லீவ் இட்.. ஆதி என்ன சொல்றான்?''

அவனால் அதற்கும் பதிலளிக்க முடியவில்லை. எனினும் இன்ஸ்பெக்டரைத் தன் தொடர்ச்சியான மௌனம் அவமானப் படுத்தும் என்பதை மட்டும் உணர முடிந்தது. அது கூடாது. அது அவன் நோக்கமில்லை. இருதயராஜ் அவனைத் தமாஷ் செய்வதற்காகக் கேட்கவில்லை என்று புரிந்த பின்பும் மனம் நோகடிக்கக் கூடாது.

''எல்லாருமே ஒரு பிரஷரின் கீழ்தான் இருக்காங்க.''

''நான் ஆதியைத்தானே கேட்டேன்.'' இருதயராஜ் மீண்டும் இன்ஸ்பெக்டரானார்.

''நானும் அவனைப் பத்தித்தான் சார் சொல்றேன். என்னை விட வக்கீல் ஒரு தெளிவான முடிவுக்கு வந்திருக்காரு. கூடிய சீக்கிரம் ஆதி ஒரு சமூக விரோதியாயிடுவான்னு அபிப்பிராயப்பட்டார். அவன் இப்போ அந்த அளவு மனம் முறிஞ்சிருக்கான்.''

இன்ஸ்பெக்டர் ஒன்றும்சொல்லவில்லை. மோட்டார் சைக்கிளின் பின்னாலிருந்த ஒரு பெட்டியைத் திறந்து ஓர் அழைப்பிதழை எடுத்து நீட்டினார். அவன் வாங்கிக்கொண்டான். அது அநாதைக் குழந்தைகளின் காப்பு விடுதி ஒன்றின் ஆண்டு விழா அழைப்பிதழ்.

''சிஸ்டர் பிலோமினா கொடுத்தது'' என்றார் இன்ஸ்பெக்டர்.

(தொடரும்)



"ஜானி..."

ரங்கதுரை உற்சாக மிகுதியால் மனைவியை அப்படி அழைத்த போது, அடுக்களைக்குள் வேலையாய் இருந்த ஜானகி, கை வேலையை அப்படியே நிறுத்தி விட்டு, கையைச் சேலை முந்தானையில் துடைத்தபடி ஹாலுக்கு வந்தாள்.

அவளைக் கண்ட ரங்கதுரைக்கு முகம் கோணலாய் விரிந்தது.

"ஈரக்கையை இப்படிச் சேலையில் துடைக்காதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது? இடுப்பிலே ஒரு டவலைச் செருகிக்கோ. அதிலே துடைச்சுக்கோ. கொஞ்சம் கூட நாகரிகம் இல்லாமல் இருக்கியே!"

"சரி, எதுக்குக் கூப்பிட்டீங்க?"

"இப்போ உள்ளே என்ன செய்துக்கிட்டிருக்கே?"

"மாடி வீட்டு அம்மா 'தோட்டத்துப் பழம்'னு சொல்லி ஒரு டஜன் எலுமிச்சம் பழம் கொடுத்தாங்க. அதிலே ஊறுகாய் போட்டுக்கிட்டிருந்தேன்."

"கர்மம்! கர்மம்!"

"தலையிலே மெதுவா அடிச்சுக்குங்க. தயிர் சாதத்துக்கு ஊறுகாய் ஊறுகாய்ன்னு நீங்கதானே அதுக்கும் அடிச்சுக்கிறீங்க."

"பேச்சுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை. நாம இரண்டு பேருக்காக, வீட்டிலே ஊறுகாய் போடணுமா என்ன? கடைகளில் எத்தனை விதமான ஊறுகாய் கிடைக்குது! அதிலே ஒரு பாட்டில் வாங்கினால் போச்சு. நானும் தினமும் தலையிலே தலையிலே அடிச்சுக்கறேன், பக்கத்துத் தெருவிலே ஜூஸ் கிளாஸ் நடக்குது. அங்கே போய் இரண்டு வாரத்துக்கு டிரெயினிங் எடு'ன்னு. அதுக்குக் கை வரலை, உனக்கு. நான் போற வீடுகளில் ரொட்டிக்கு ஜாம் இருக்கு. ஆம்லெட்டுக்கு கெச்—அப் இருக்கு. விதவிதமா பாட்டில்களில் ஸ்குவாஷ் இருக்கு. இதை எல்லாம் வீட்டிலேயே தயார் செய்யறாங்க. நீ என்னடான்னா இன்னும் பாட்டி மாதிரி ஊறுகாய்க்குள்ளேயே ஊறிக்கிட்டிருக்கே."

"என்ன நீங்க, வர வர நான் எது செய்தாலும் தப்புக் கண்டுபிடிச்சுக்கிட்டு."

கண்களில் நீர் முட்டிக் கொண்டு வந்தது ஜானகிக்கு.

"நான் ஏதாவது சொன்னால் உடனே கண்ணைக் கசக்க வேண்டியது. என் பேச்சுக்கு மதிப்புக் கொடுத்து நான் சொன்னதைக் கேட்டால், நான் ஏன் உன்னைப் பேசப் போறேன்."

"நீங்க என்ன சொல்லி, நான் கேட்கலை?"

"முன்னே மாதிரி ஸ்லிம்மா இல்லை. வெயிட் போட்டுக் கொண்டே வர்றே. காலையில் தினமும் நான் வாக் போகும் போது என் கூட நீயும் வான்னு சொன்னேன். ஒரு நாளாவது வந்தியா?"

"நான் எப்படிங்க காலங்கார்த்தாலே அப்படிப் பொறுப்பில்லாமல் வீட்டைப் போட்டுட்டு, தெருவிலே நடக்க முடியும்? ரேகாவை யார் கவனிக்கிறது? அவளுக்குத் தூங்கி முழிச்சதும் என் முகத்தைப் பார்க்கணும். இல்லேன்னா அன்றைய நாள் பூரா அழுது தீர்ப்பாள். அதையும் தவிர நீங்க வாக் போயிட்டு வந்ததும் சூடா காப்பி தர்றேனே. அது எப்படி டக்குன்னு உடனே கிடைக்கும்?"

"எதையாவது சாக்குப் போக்கு சொல்லு. எப்படியோ என் பேச்சை நீ கேட்கறதில்லை."

"நீங்களும்தான் நான் எது சொன்னாலும் அதைக் காதிலே வாங்கிக்கிறதில்லை. நான் உங்கள் நல்லதுக்குத்தான் சொல்றேன். அதையும் நீங்க புரிஞ்சுக்கிறதில்லை."

லீலா கிருஷ்ணன்

அது என்ன என்கிற மாதிரி ரங்கதுரை ஜானகியைப் பார்த்தார்.

"இந்த சிகரெட் பழக்கத்தை ஒழிங்க'ன்னு நானும் நயமாவும் சொல்லிப் பார்த்துட்டேன். பயமுறுத்தியும் பார்த்துட்டேன். நீங்க அதை விடலை."

"பயமுறுத்திப் பார்த்தியா? அது என்ன?"

"அந்தச் சனியனைத் தொட்டால் என்னைத் தொடாதீங்கன்னு சொல்லலையா? நீங்க என்ன செய்யறீங்க. வெளியிலே எனக்குத் தெரியாமல் அதைத் தொடறீங்க."

"வீட்டுக்குள்ளே உனக்குத் தெரிஞ்சு உன்னைத் தொடறேன்."

"அடச்சே. பேச்சைப் பார். இப்படி ஏதாவது ஜோக் அடிச்சு, பேச்சை மாத்தறீங்க. நீங்க வீட்டுக்குள்ளே நுழையும் போது சிகரெட் நாற்றமும், பாக்கு வாசனையும் சேர்ந்து வர்றது எனக்குத் தெரியாமல் இல்லை."

"ஜானி, இப்படி வந்து பக்கத்திலே உட்கார். நீ கோபமா பேசும் போதுதான் ரொம்பவும் அழகா இருக்கே. எங்கே உள்ளே போறே?"

"ரேகா கூப்பிடறது உங்க காதிலே விழலையா? தூங்கி எழுந்துட்டாள் போல இருக்கு."

உள்ளே போன ஜானகி ரேகாவை அழைத்துக் கொண்டு மறுபடியும் அங்கே வந்தாள்.

மூன்று வயது ரேகாவிற்குக் குண்டு முகம். துருதுருன்னு அப்படி ஒரு பார்வை.

"ரேகா கண்ணு, என்கிட்டே ஓடி வா."

அவள் ஓடி வந்து ரங்கதுரையின் காலைக் கட்டிக் கொண்டாள்.

"கொஞ்சம் இவளைப் பார்த்துக்குங்க. நான் சமையலை முடிச்சுட்டு வந்துடறேன்."

"என்ன சமையல் மகா சமையல். ஒரு சேஞ்சுக்காக இன்னைக்கு ஹோட்டலில் சாப்பிட்டால் என்ன? தினம் தினம் நீ செய்கிற பொரியலையும் கூட்டையும் சாப்பிட்டு நாக்கு செத்துப் போச்சு."

ஜானகி கோபமாய்ப் பார்க்க,

"இந்தக் கோபத்துக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை. இப்போ பத்திரிகைகளில் எத்தனை விதமான ரெஸிப்பிகள் வருது. புதுப் புதுப் பேரிலே. அதுகளையெல்லாம் படிச்சுட்டுப் புதுசா ஏதாவது செய்து பார்க்கணும்கிற நினைப்பாவது உன்கிட்டே இருக்கா. எப்போ பார் வத்தல் குழம்பு, புடலங்காய் கூட்டு, கோஸ் பொரியல்" என்றார் ரங்கதுரை.

"இதோ பாருங்க. எப்போதும் பழக்கத்திலே உள்ள பதார்த்தங்களைச் சாப்பிட்டால்தான் உடம்புக்கு ஒண்ணும் வராது. புதுசா சாப்பிடணும்னு கண்ட கண்ட சங்கதிகளைத் தின்னு வச்சால் செரிக்காது. உள்ளே வாயு பகவான் உட்கார்ந்து கொண்டு கலாட்டா பண்ணுவார்."

"இப்படி எதையாவது உளறு. அது சரி இவள் முகத்தை ஏன் இப்படிக் கெடுத்து வச்சிருக்கே. இப்படியா ஒரு குழந்தைக்குத் தூக்கி வாரி, மாட்டுக்கு 'இரண்டு கொம்பு முளைச்ச மாதிரி, பின்னல் போட்டு அதைத் தூக்கியும் கட்டி, ரிப்பன் வைத்து. நான் அன்னைக்கே சொன்னேன். இவளை ப்யூட்டி பார்லருக்கு அழைத்துப் போ. 'ஷாலினி கிராப்' இவள் முகத்துக்கு நல்லா இருக்கும்ன்னு. அதையாவது கேட்டியா?"

"இவளுக்குக் கிராப் வெட்டி விடணும். வெட்டினால் போச்சு. அதற்காக ஏன் என்னை இப்படித் துர்வாசர் மாதிரி பார்க்கிறீங்க?"

"பின்னே என்ன நான் எது சொன்னாலும் கேட்கிறதில்லை. அப்படி ப்யூட்டி பார்லர் போகும் போது அங்கே வர்ற பெண்கள் எப்படி எல்லாம் தங்கள் முகத்தை அழகா வச்சுக்கிறாங்கங்கிறதைக் கவனி. இதைக் கூடவா நான் சொல்லித் தரணும். உனக்கு ரொம்ப அடர்த்தியான புருவம். அதை வில் மாதிரி ட்ரிம் பண்ணி விட்டால் இன்னும் அழகா இருப்பே. முகத்தை 'ப்ளீச்' பண்ணிக்கிறாங்க. அப்புறம் மசாஜ் எல்லாம் கூட இருக்கு. முகத்திலே வேண்டாத சதையைக் குறைச்சு, அதையெல்லாம் செய்துக்கிட்டே, இன்னும் பளிச்சின்னு இருப்பே. முகத்திலே ஒரு தனிக் களையே இருக்கும். நேரத்தை இப்படி எல்லாம் பயனுள்ள முறையிலே கழிக்கணும். எப்பப் பார் ஊறுகாய் போடறேன், வடாம் போடறேன்'னு வெய்யில்லே காயறே."

"ஆமாம். ப்யூட்டி பார்லர் பற்றி இத்தனை விஷயங்கள் உங்களுக்கு எப்படித் தெரிந்தது? எங்கேயாவது போய் எட்டிப் பார்த்தீங்களா?"

"உன் புத்தி உன்னை விட்டு எங்கே போகும்? எல்லாம் பத்திரிகையில் படிக்கிறதுதான். எங்கே காலைக் காட்டு."

"எதுக்கு?"

காலைப் பார்த்து விட்டு நிமிர்ந்து அவளைப் பார்த்து, "இப்படியா பித்த வெடிப்போட பாதத்தை வச்சிருப்பே. ரேகாவுக்குக் கிராப் வெட்டப் போகும் போது உன் பாதத்தையும் சுத்தம் பண்ணிக்கோ." என்றார்.

"ஏன் துவைக்கிற கல்லில் போட்டுத்

பத்தாம்பசலி



"மாப்பிள்ளையோட தாயார் மாதர் சங்கத்தில் தீவிரமோ?"

"எப்படிச் சொல்றே?"

"சீர்வரிசை லிஸ்டுல மாதர் சங்க நிதிக்கு ஐயாயிரம்னு எழுதியிருக்கே?"

— கஸ்தூரி குரலோன்.

தேய்த்தால் சுத்தமாகாதா?"

"உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. இப்படி ஒரு தற்குறியைப் பெற்று என் தலையில் கட்டினார் பார் உன் அப்பா. அவரைச் சொல்லணும்."

"என் அப்பாவைத் தினமும் ஒரு மூச்சு கரிச்சுக் கொட்டணும் உங்களுக்கு. அவர் இல்லைன்னா நான் இல்லை உங்களுக்கு. அதைப் புரிஞ்சுக்குங்க."

"அதனாலேதான் கரிச்சுக் கொட்டறேன்."

அவள் அழத் தயாராய்க் கண்களைக் கசக்கினாள்.

"ஏ அசடே கண்ணைத் துடைச்சுக்கோ. இப்படி வாய் பேச்சுக்கெல்லாம் அழ ஆரம்பிக்கிறது எனக்குச் சுத்தமாப் பிடிக்காது. உனக்கு ஒரு குட் நியூஸ் சொல்லப் போறேன். அதைக் கேட்டதும் என் ஜானம்மா சிரிக்கணும்."

அதைக் கேட்காமலேயே சிரித்தாள் ஜானகி.

"சொல்லுங்க."

"கெயிட்டியிலே இரண்டு டிக்கெட் ரிசர்வ் பண்ணி இருக்கேன். செகண்ட் ஷோ போறோம். எதுவும் சாக்குப் போக்கு சொல்லாமல் ஜில்லுன்னு கிளம்பணும்."

"ஐயோ! ரேகாவை என்ன செய்யறது?"


"என்ன புதுசா கேட்கறே? வழக்கம் போல மாடி வீட்டு அம்மாகிட்டே விட்டுட்டுப் போக வேண்டியதுதான். திரும்பினதும் அர்த்த ராத்திரியிலே அவங்களை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம். காலையில் போய் ரேகாவை அழைச்சுக்கலாம்."

"ரொம்ப அழகுதான்."

"ரேஷன் வாங்கப் போயிருந்த இடத்துல மயங்கி விழுந்துட்டீங்களாமே... கியூவுல ரொம்ப நேரம் நின்னீங்களா?"

"பாமாயில், நிறைய இருக்கு... எல்லோருக்கும் தர்றேன்னு கடைக்காரர் சொன்னார்... அதிலேதான் அதிர்ச்சியாயிட்டேன்!"

வி. ரேவதி.



"இதுக்கு நாம பேசறது புரியறது. அது தான் இப்படி மிரள மிரளப் பார்க்கிறாள்."

"இதுக்கு எல்லாமே தெரியும். இப்போ தான் கொஞ்சம் பேச்சே வருது. அதுக்குள்ளே நான் இவளுக்கு 'வாக்குண்டாம்' சொல்லிக் கொடுத்தேன். சொல்றா கேளுங்க. ரேகா, 'வாக்குண்டாம்' சொல்லும்மா."

"வாத்துண்டாம்."

"இதென்ன கூத்து. வாத்து கோழி எல்லாம் சொல்றது. உனக்கு மூளை இருக்கா? மண்டையிலே ஏதாவது மசாலா இருக்கா?"

"ஏன் இப்படி கழுத்து நரம்பு புடைக்கக் கத்துறீங்க?"

"பின்னே என்ன! நர்ஸரி ரைம்ஸ் எவ்வளவு இருக்கு. அதைச் சொல்லிக் கொடுக்காமல்... இப்போ கடைகளில் நர்ஸரி ரைம் காஸெட் கிடைக்குது. அதுகளை இவளுக்குப் போட்டுக் காட்டி, சொல்லித் தரலாம். அதையெல்லாம் விட்டுட்டு வாக்குண்டாம்கிறியே."

"அய்யய்யோ. அந்தப் பாட்டைப் பற்றி இப்படியெல்லாம் பேசாதீங்க. அது விநாயகர் ஸ்தோத்திரம்."

"இருக்கட்டுமே. விளையாடற வயசு இவளுக்கு. இவளுக்கு எதுக்கு இப்போ பக்திப் பாடல் எல்லாம் தெரியணும். உனக்கு உன் அப்பா அந்த நாளில் இந்தப் பாட்டுக்களை எல்லாம் சொல்லி வச்சார்ன்னா அவருக்கு மரமண்டை."

"ஆரம்பிச்சுட்டீங்களா? நான் உள்ளே போறேன்."

அடுத்த நாள்.

பம்பாயிலிருந்து கடிதம் வந்தது.

பிரித்துப் படித்த ஜானகி அதை ரங்கதுரையிடம் கொடுத்தாள்.

அன்புள்ள அப்பா அம்மாவுக்கு,

அநேக நமஸ்காரம் செய்து உங்கள் மகள் ஜெயா எழுதுவது.

நான் இந்த வருடம் ரேகாவை இங்கு கான்வென்டில் சேர்ப்பதாக இருக்கிறேன். இது உங்கள் மாப்பிள்ளையின் ஏற்பாடு. வயதான காலத்தில் இனியும் உங்களுக்குத் தொந்தரவாக அவள் அங்கே இருப்பதை நாங்கள் விரும்பவில்லை.

எனவே,

உங்கள் பேத்தியை அழைத்துப் போக, நான் இருபதாம் தேதி கிளம்பி வருகிறேன்.

மற்ற விஷயங்கள் நேரில்.

இப்படிக்கு,
உங்கள் அன்பு மகள்,
ஜெயா.

கடிதத்தைப் படித்ததும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

விஷயம் புரியாமல் ரேகா அவர்களைப் பார்த்தாள்!



அத்தியாயம் 85

சிற்பத்தின் உட்பொருள்

சேந்தன் அமுதனாகிய மதுராந்தகத் தேவர், தம்மைத் திருவயிறு சுமந்து பெற்ற அன்னை செம்பியன் மா தேவியைப் பார்த்து, "அம்மா! இந்த உலகில் யுத்தப் பைத்தியம் பிடித்து அலைகிறவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். போர் செய்யாத நாள் எல்லாம் வீண் போன வெறும் நாளாகவே அவர்களுக்குத் தோன்றுகிறது. அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்தான் என் நண்பர் வந்தியத் தேவரும் என் சகோதரர் பொன்னியின் செல்வரும். தாங்களோ, இறைவனைப் பற்றிப் பேசாத நாளெல்லாம் பிறவாத நாள் என்று கருதுகிறவர் ஆயிற்றே? தாங்களும் போர்த் தொழிலை ஆதரித்துப் பேசுவது மிக மிக ஆச்சரியமாயிருக்கிறது. அதன் காரணத்தை எங்களுக்கு விளக்கமாய்ச் சொல்ல வேண்டும்!" என்றார்.

அப்போது செம்பியன்மா தேவி "என் அருமை மகனே! வேறு யார் போர்த் தொழிலை இகழ்ந்து பேசினாலும் நீ பேசக் கூடாது; பூங்குழலியும் பேசலாகாது. வல்லத்து அரசர் போர்த் தொழிலிலும் வல்லவராயிருப்பதினாலேயல்லவா நீ இன்று உயிரோடிருந்து இறைவனைத் துதிக்கும் பாடல்களை என் உள்ளமும் உடலும் உருகப் பாடுகிறாய்?" என்றார்.

"தாயே! நான் தங்கள் அருமைப் புதல்வரின் உயிரைக் காப்பாற்றியது இருக்கட்டும். அவரும் அவரைக் கரம் பிடித்த தங்கள் மருமகளும் என் உயிரைக் காப்பாற்றியதை நான் மறக்க முடியாது. பூங்குழலி அம்மையாரின் போர்க் குணம் அல்லவோ நான் இன்று உயிரோடிருப்பதற்குக் காரணமாயிருக்கிறது?" என்றான் வந்தியத் தேவன்.

"பரமேசுவரனும் துர்க்கா பரமேசுவரியும் நம் எல்லாரையும் காப்பாற்றுகிறார்கள்! அவர்களுடைய கருணை இல்லாவிட்டால், நாம் ஒருவரையொருவர் காப்பாற்றுவது ஏது?" என்றார் மதுராந்தகத் தேவர்.

"குழந்தாய்! கருணையே வடிவமான சிவபெருமானும் பலமுறை போர் செய்ய நேர்ந்தது. அன்பும் அருளும் சாந்தமும் உருக்கொண்ட ஜகன் மாதாவான துர்க்கா பரமேசுவரியும் யுத்தம் செய்வது அவசியமாயிற்று. இந்தப் புண்ணிய ஸ்தலத்திலுள்ள ஆலயத்தில் அம்பிகை அறம் வளர்த்த நாயகியாக வீற்றிருக்கிறாள். ஆயினும், ஆலயத்தின் திருச்சுற்று வீதியில் மகிஷாசுர மர்த்தனியாகவும் தரிசனம் தருகிறாள். நீ கவனித்தாயல்லவா?" என்றார்.

"ஆம், அன்னையே! கவனித்து வியந்தேன். அண்ட சராசரங்களை ஈன்றெடுத்துக் காக்கும் அன்னை ஓர் எருமை மாட்டின் தலை மீது எதற்காக நின்று காட்சி அளிக்கிறாள் என்று எண்ணி அதிசயித்தேன்!" என்றார் மதுராந்தகர்.

"ஆம், ஆம்! இந்த ஆலயத்தில் உள்ள தேவி, மகிஷாசுரனை வதம் செய்து முடித்து விட்டாள். அதனால் எருமையின் தலையில்

அமரர் கல்கி

நிற்கும் தேவியின் திருமுகத்தில் அன்பும் அருளும் குடிகொண்டிருக்கக் காண்கிறோம். மாமல்லபுரத்துக் குகைச் சிற்பங்களிலே தேவி மகிஷாசுரனுடன் போரிடுவது போல் அமைந்த சிற்பம் ஒன்று இருக்கிறது. அங்கே துர்க்கா பரமேசுவரி வீர பயங்கர ரணபத்திர காளியாகத் தரிசனம் தருகிறாள். சகலலோக மாதாவாகிய துர்க்கா பரமேசுவரி கேவலம் ஓர் எருமை மாட்டுடன் ஏன் சண்டை போட வேண்டும், அதற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம் வேண்டுமா என்று வெளிப் படையாகப் பார்ப்பவர்களுக்குத் தோன்றக் கூடும். என் அருமைக் குமாரா! நம் பெரியோர்களின் உள்ளத்தில் உதயமான இத்தகைய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் உட்பொருள்கள் இருக்கின்றன. அவற்றை அறிந்து கொள்வதற்குத் தக்க பரிபக்குவம் வேண்டும்; அறிந்து கொள்ள வேண்டும் என்னும் சிரத்தையும் வேண்டும்!''

''தேவி! எங்களுக்கெல்லாம் பரிபக்குவம் இருக்கிறதோ, என்னமோ, தெரியாது! ஆனால் சிரத்தை இருக்கிறது. தாங்கள் திருவாய் மலர்ந்தருளும் வார்த்தை ஒவ்வொன்றையும் சிரத்தையுடன் கேட்டுக் கொண்டிருக்கிறோம்! ஏன்? நமது வல்லத்து அரசருடைய ஓயாமற் சலிக்கும் கண்கள் கூட வல்லவா தங்களையே பார்த்துக் கொண்டிருக்கின்றன?'' என்றார் அருள்மொழி.

இந்த வார்த்தைகள் அங்கே சிறிது கலகலப்பை உண்டாக்கின. வந்தியத் தேவன் அடிக்கடி இளைய பிராட்டியின் திரு முகத்தை நோக்குவதையே அருள்மொழி வர்மர் குறிப்பிடுகிறார் என்று அறிந்து கொண்ட பெண்மணிகள் இலேசாக நகைத்தார்கள்.

செம்பியன்மா தேவி கூறினார்: ''சிரத்தையுடன் கேட்பதானால் சொல்கிறேன், கேளுங்கள். நமது புராண இதிகாசங்களில் தேவாசுர யுத்தங்களைப் பற்றி நிரம்பக் கூறியிருக்கிறார்கள். இவ்வுலகில் திருமால் அவதாரம் எடுத்து ராட்சதர்களோடு சண்டையிட்டது பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். இறைவன் உலகத்தைப் படைத்த காலத்திலிருந்து தேவ சக்திகளும் அசுர சக்திகளும் போரிட்டு வருகின்றன. அசுர சக்திகளை இறைவன் ஏன் படைத்தார் என்று கேட்டால், அதற்குச் சிற்றறிவு படைத்த நம்மால் விடை சொல்ல முடியாது. இறைவனுடைய திருவிளையாடல் அது என்றுதான் கூற முடியும். தெய்வ சக்திகளும் அசுர சக்திகளும் ஓயாமல் போராடி வருகின்றன என்பது மட்டும் நிச்சயம். சில சமயம் அசுர சக்திகளின் கை மேலோங்குவது போல் காணப்படுகின்றன. அவையே உலகை என்றென்றைக்கும் ஆளும் என்றும் தோன்றுகின்றது. சூரபத்மனும், இரணியனும், இராவணனும் எத்தனை பல்லாயிரம் ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்கள்! ஆனாலும் அவர்களுக்கெல்லாம் ஒரு நொடிப் பொழுதில் முடிவு வந்து விட்டது!''

''ஆம், ஆம்! தேவர்களையெல்லாம் அடிபணிந்து குற்றேவல் புரிய வைத்த தசகண்ட இராவணனுக்கு முடிவு வந்த போது, இரண்டு மனிதர்களும் ஒரு சில வானரங்களும் சேர்ந்து அவனைக் குலத்தோடு நாசமாக்கி விட வில்லையா?'' என்றார் மதுராந்தகத் தேவர்.

''ஆகையால் அசுர சக்திகள் மேலோங்குவதைக் கண்டு மாந்தர்கள் மனச்சோர்வு அடைந்து விடக் கூடாது. தெய்வ சக்திகள் முடிவில் வெற்றி கொள்ளும் என்று நம்பித் தர்மத்திலும் சத்தியத்திலும் நின்று போராட வேண்டும். அப்படிப் போராடுகிறவர்களுக்குத் தெய்வமும் நிச்சயம் துணை செய்யும்!''

''அன்னையே! மகிஷாசுரனைப் பற்றிச் சொல்ல வந்தீர்கள்!'' என்று பூங்குழலி ஞாபகப் படுத்தினாள்.

''ஆம்; நல்ல வேளையாக ஞாபகப்படுத்தினாய், மகளே! அசுர சக்திகள் இரண்டு வகையானவை. ஒன்று, மௌடீக அசுர சக்திகள், இன்னொன்று, மதி நுட்பம் வாய்ந்த அசுர சக்திகள். மௌடீக அசுர சக்தியையே மகிஷாசுரனாக நமது முன்னோர்கள் உருவகப்படுத்தினார்கள். காட்டெருமைக்கு வெறி வந்து தெறி கெட்டு ஓடுவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அப்போது அந்த எருமை யானையை விட அதிக பலம் பெற்று விடுகிறது. தன் எதிர்ப்பட்ட பிராணிகள் எல்லாவற்றையும் சின்னா பின்னப் படுத்தி விடுகிறது. மௌடீகமும் வெறி கொண்ட காட்டு எருமையைப் போல் வலிமை கொண்டது. மௌடீகம் சில சமயம் சிங்காதனத்தில் அமர்ந்து ஆட்சி நடத்தத் தொடங்கி விடுகிறது. இதைத்தான் மகிஷாசுரனுடைய ஆட்சி என்று நம் முன்னோர்கள் சொன்னார்கள். மகிஷாசுரன் தேவலோகச் சிங்காதனத்தில் அமர்ந்து ஆட்சி செலுத்தத் தொடங்கிய போது, மூன்று உலகங்களிலும் அல்லோலகல்லோலமுண்டாயிற்று. அறிவு வேண்டாம், அறிவு நூல்கள் வேண்டாம், அறிவுக் கலைகள் வேண்டாம், இசை வேண்டாம், சிற்பம், சித்திரம், கோயில் கோபுரம் ஒன்றும் வேண்டாம் — எல்லாவற்றையும் அழித்துப் போடுங்கள் என்று மகிஷாசுரன் கட்டளையிட்டான். தேவர்கள் முனிவர்கள் மனிதர்கள் எல்லாரும் நடு நடுங்கினார்கள். அவர்களில் பலர் மகிஷாசுரனுக்கு அடி

பணிந்து அவனுடைய ஆட்சியை ஒப்புக் கொண்டார்கள். இதனால் மகிஷாசுரனுடைய அகந்தையும் மூர்க்கத்தனமும் அதிகமாயின. மௌடீகத்தோடு அகந்தையும் மூர்க்கத்தனமும் சேர்ந்து விட்டால் கேட்க வேண்டுமா? மகிஷாசுரனுடைய கொடுமையைப் பொறுக்க முடியாமல் மூன்று உலகங்களிலும் மக்கள் ஓலமிட்டார்கள். அசுரர்களுங் கூடச் சேர்ந்து அலறினார்கள். துர்க்கா பரமேசுவரி அப்போது கண் திறந்தாள். மாகாளி வடிவங் கொண்டு வந்து மகிஷாசுரனை வதஞ் செய்தாள். மௌடீக சக்தியைத் தெய்வீக சக்தி வென்றது. மூன்று உலகங்களும் மௌடீக அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்றன. தேவர்களும் முனிவர்களும் மனிதர்களும் அசுரர்களுங் கூடப் பெரு மூச்சு விட்டுத் துர்க்கா பரமேசுவரியை வாழ்த்தி வணங்கினார்கள். குழந்தைகளே! இப்போதுங்கூட இவ்வுலகில் மௌடீக அசுர சக்திகள் இல்லாமற் போக வில்லை. இந்தப் புண்ணிய பரத கண்டத்தின் வடமேற்கு திசைக்கு அப்பால் மௌடீக அசுர சக்திகள் சில தோன்றியிருப்பதாக அறிகிறேன். அவர்கள் மூர்க்காவேசத்துடன் போர் புரிந்து நகரங்களைச் சூறையாடிக் குற்றமற்ற மக்களைக் கொன்று கோயில்களையும் விக்கிரகங்களையும் உடைத்துத் தகர்த்து நாசமாக்குகிறார்களாம். அவர்களைத் தடுத்து நிறுத்தக் கூடிய பெரிய சக்கரவர்த்திகள் இப்போது வட நாட்டில் யாரும் இல்லையாம்! இந்தத் தெய்வத் தமிழ் நாட்டுக்கு அத்தகைய கதி நேராதிருக்கட்டும். அப்படி நேர்வதாயிருந்தால், வீர மறக்குலத்தில் பிறந்த நீங்கள் அந்த அசுர சக்திகளுடன் போராடச் சித்தமாயிருக்க வேண்டுமல்லவா?''

''கட்டாயம் சித்தமாயிருப்போம். தாயே! மற்றொரு வகை அசுர சக்திகளைப் பற்றியும் சொல்லுங்கள்!'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

''மற்றொரு வகை அசுரர்கள் அறிவுக் கூர்மையுள்ளவர்கள். அந்த அறிவைக் கெட்ட காரியங்களில் பயன் படுத்துகிறவர்கள். அவர்கள் தவம் செய்து வரம் பெறுவார்கள். அதையும் துஷ்ட காரியங்களுக்கே பயன் படுத்துவார்கள். திரிபுரர்கள் என்ன செய்தார்கள்? ஒவ்வொருவரும் ஒரு உலகத்தையே உண்டாக்கிக் கொண்டார்கள். வானத்தில் பறந்து சென்று நாடு நகரங்களின் மீது இறங்கி நிர்மூலமாக்கினார்கள். சூரபத்மன் எத்தனை தடவை அவனுடைய தலையைக் கொய்தாலும் புதிய தலை அடையும் ஆற்றலைப் பெற்றிருந்தான். இராவணன், இந்திரஜித்து முதலிய ராட்சதர்கள் வானத்தில் மேகங்களில் மறைந்து கொண்டு கீழே உள்ளவர்கள் மீது அஸ்திரங்களைப் பொழியும் சக்தி பெற்றிருந்தார்கள். இத்தகைய சூழ்ச்சித் திறமை வாய்ந்த அசுர சக்திகளையே 'முயலகன்' என்னும் அசுரனாக நம் முன்னோர்கள் உருவகப்படுத்தியிருக்கிறார்கள். இறைவன் ஆனந்த நடனம் புரியும் போதெல்லாம் தம்முடைய காலடியில் அடக்கி வைத்திருக்கும் முயலகன் மீதும் சிறிது ஞாபகம் வைத்துக் கொள்கிறார். கொஞ்சம் கவனக் குறைவாயிருந்தால் முயலகன் கிளம்பி விடுவான். சிருஷ்டியின் ஆரம்ப காலத்தில் இருந்து அசுர சக்திகளுடன் தெய்வீக சக்திகள் போராடி வருகின்றன என்பதையே முயலகன் நமக்குத் தெரியப் படுத்துகிறான்! ஆகையால், என் அருமை மக்களே! யுத்தமே கூடாது என்று நாம் எப்படிச் சொல்லி விட முடியும்!''

''தேவி! இதுவரையில் எங்களுக்கு விளங்காமலிருந்த பல விஷயங்களை இன்று தெரிந்து கொண்டோம். எங்களுக்கு என்ன கட்டளை இடுகிறீர்கள்?'' என்று பொன்னியின் செல்வர் கேட்டார்.

''குழந்தைகளே! நீங்கள் எப்போதும் தெய்வீக சக்திகளின் பக்கம் நின்று போராடுங்கள் என்று மட்டுமே நான் சொல்ல முடியும். உங்களுக்குக் கட்டளையிட முடியாது. உங்களுடைய அந்தராத்மாதான் உங்களுக்குக் கட்டளையிட முடியும். அந்தக் கட்டளையைக் கேட்டு நடவுங்கள். சற்று முன்னால், இந்தச் செந்தமிழ் நாட்டைச் சுற்றியுள்ள கடல்களில் கப்பல் கொள்ளைக்காரர்கள் மிகுந்து விட்டதாகச் சொன்னீர்கள். அதனால் தமிழ் நாட்டு வர்த்தகர்கள் பெரிதும் கஷ்ட நஷ்டங்களை அடைவதாகவும் கூறினீர்கள். அந்தக் கொள்ளைக்காரர்களை ஒழித்து நம் நாட்டு வர்த்தகர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது இராஜ குலத்தில் பிறந்த உங்கள் தர்மம். இன்று கடல் கொள்ளைக்காரர்களுக்கு இடங்கொடுத்து விட்டால், நாளைக்கு அவர்கள் இந்தத் தெய்வத் தமிழ் நாட்டிற்குள்ளேயும் பிரவேசித்து விட மாட்டார்களா? இன்று கைலாச வாசியாகிச் சிவபெருமானுடைய சந்நிதியில் சிவ கணங்களுடன் வீற்றிருக்கும் என் கணவர் ஜீவிய வந்தராயிருந்தால், அவரும் உங்களுக்கு இதைத்தான் சொல்லியிருப்பார்!''

''தேவி! தங்கள் திரு உள்ளத்தை அறிந்து கொண்டோம். அதன்படியே நடந்து கொள்வோம்!'' என்றார் இளவரசர் அருள்மொழிவர்மர்.

''பொன்னியின் செல்வ! நீ என்னுடைய விருப்பத்தை மதித்து நடப்பதாயிருந்தால், இன்னும் ஒன்றும் இப்பொழுது சொல்ல விரும்புகிறேன்!'' என்றார் அந்தப் பெரு

மூதாட்டியார்.

"தேவி! தங்கள் விருப்பத்துக்கு மாறாக இது வரை நான் நடந்ததாக நினைவில்லையே? அப்படி ஏதேனும் செய்திருந்தால் மன்னியுங்கள்!"

"குழந்தாய்! இதற்கு முன்னால் நீ நடந்து கொண்டதெல்லாம் வேறு; இனிமேல் நடக்கப் போவது வேறு. இதுவரையில் நீ அரண்மனையின் செல்வக் குழந்தையாக இருந்தாய். உன் விருப்பம் போல் நாங்கள் நடந்தோம்; எங்கள் விருப்பத்தை நீயும் நிறைவேற்றி வைத்தாய். இனி, நீ இந்த மாநிலத்தை ஆளும் மன்னர் மன்னன் ஆகப் போகிறாய். முடிசூட்டு விழா நடந்த பிறகு, உன்விருப்பத்தின் படிதான் நாங்கள் எல்லாரும் நடந்து கொள்ள வேண்டும்."

"தாயே! அப்படிச் சொல்ல வேண்டாம். இனியும் நான் உங்கள் செல்லக் குழந்தையாகவே இருந்து வருவேன். உங்கள் விருப்பப்படியே நடப்பேன்."

"அப்படியானால், இதைக் கேள்! இந்தப் புராதனமான சோழர் குலம் வாழையடி வாழையாகத் தளிர்த்து வளர வேண்டும். இராஜ குலத்தில் பிறந்தவர்கள் எப்போதும் வீர சொர்க்கம் அடையத் தயாராயிருக்க வேண்டியது தான். ஆனால் குலம் வளர்வதற்கும் முன் ஜாக்கிரதையாக ஏற்பாடு செய்ய வேணடும். உன் தமையன் ஆதித்த கரிகாலன் கலியாணம் செய்து கொள்ளாமலே காலமாகி விட்டான். சோழ குலம் தழைப்பதற்கு நீ ஒருவன்தான் இருக்கிறாய்! ஆகையால் நீ மறுபடியும் கப்பலேறிக் கடல் கடந்து வெற்றித் திருமகளைத் தேடிப் போவதற்கு முன்னால் குலந் தழைப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். உன் மகுடாபிஷேகத்தோடு சேர்த்துத் திருமணத்தையும் வைத்துக் கொள். வானதியைப் போன்ற பெண்ணை மனைவியாகப் பெற நீ எவ்வளவோ தவம் செய்திருக்க வேண்டும். இந்தப் பெண்ணரசியின் மாங்கலிய பலம் நீ போகுமிடமெல்லாம் மந்திரக் கவசம் போலிருந்து உன்னைப் பாதுகாக்கும்!"

"தேவி! அந்தக் கவசத்தை அணிய நான் சித்தமாகத்தானிருக்கிறேன். வானதிதான் மறுதலிக்கிறாள். 'சிங்காதனம் ஏற மாட்டேன்; சபதம் செய்திருக்கிறேன்' என்று பிடிவாதம் பிடிக்கிறாள்!" என்றார் இளவரசர்.

யாரும் எதிர்பாராத விதமாகப் பூங்குழலி அப்போது தலையிட்டு, "கொடும்பாளூர் இளவரசியின் பேச்சை அப்படியே நம்பி விட வேண்டாம். நாமெல்லாரும் சேர்ந்து மேலும் உபசாரம் செய்ய வேண்டும் என்று எண்ணுகிறார். பொன்னியின் செல்வர் இன்னும் கொஞ்சம் கெஞ்சிக் கேட்க வேண்டும்!" என்று சொல்லி நகைத்தாள். அது வேடிக்கைப் பேச்சு என்று எண்ணி மற்றவர்களும் சிரித்தார்கள். ஆனால் வானதி மட்டும் விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

"அசட்டுப் பெண்ணே! இது என்ன? எதற்காக நீ இப்படி விம்மி அழுகிறாய்?" என்று குந்தவை கேட்டு விட்டு, வானதியின் கரத்தைப் பிடித்து அழைத்துக் கொண்டு கீழே போனாள்.

அத்தியாயம் 86

"கனவா? நனவா?"

மறு நாள் காலையில் செம்பியன்மாதேவியும் மதுராந்தகரும்பூங்குழலியும்தஞ்சைக்குப் புறப்பட்டார்கள்.

பொன்னியின் செல்வரும் வந்தியத்தேவரும் உறையூருக்கும் ஸ்ரீரங்கத்துக்கும் போய்வர எண்ணியிருந்தார்கள். போகும் போது கரிகாலச் சோழர் காலத்தில் காவேரி நதியின் நீரைத் தேக்குவதற்காகக் கட்டப்பட்ட பேரணையை வந்தியத் தேவனுக்குக் காட்டுவதாக அருள் மொழிவர்மர் கூறியிருந்தார்.

அவர்கள் புறப்படுவதற்கு முன்னால் பொன்னியின் செல்வர் குந்தவை தேவியிடம் விடை பெற்றுக் கொள்ளுவதற்காகச் சென்றார்.


"அக்கா! தாங்கள் பழையாறைக்கு அவசியம் போகவேண்டுமா?" என்றார்.

"தம்பி! நீங்கள் உறையூருக்கு அவசியம் போக வேண்டுமா? எங்களுடன் பழையாறைக்கு வரக் கூடாதா?" என்று கேட்டாள்.

"இல்லை, அக்கா! உறையூரில் ஆழ்வார்க்கடியானை முக்கியமான காரியத்துக்காகச் சந்திப்பதாகச் சொல்லியிருக்கிறோம்..." என்று சொன்னார்.

"ஆகா! நீ முன்மாதிரி இல்லை, தம்பி! உன் மனசு மிகவும் கெட்டுப் போய் விட்டது. என்னை நீ இலட்சியம் செய்வதே இல்லை. இந்த மாறுதலுக்குக் காரணம் அந்த வல்லத்து அரசரின் சிநேகந்தான் என்று கருதுகிறேன்...."

"வீணாக அவர் பேரில் பழியைப் போடாதீர்கள்! எனக்குப் பிராயம் வந்துவிட


"...கடல் கடந்து தூராதூர தேசங்களுக்கெல்லாம் சென்று புலிக்கொடியை நாட்டி விட்டு வெற்றி முழக்கத்துடன் நான் திரும்பி வரும்போதெல்லாம் நீ ஒரு வெற்றி மாலையுடன் எனக்காகக் காத்திருக்க வேண்டும்......"
"ஒரு மாலை என்ன? நூறு நூறு மாலைகள் தொடுத்து வைத்துக் கொண்டு காத்திருப்பேன்."
மணியம்

வில்லையா, அக்கா! ஒரு பெரிய இராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொள்ளப் போகிறேன். இனிமேலாவது என் இஷ்டப்படி நான் நடந்து கொள்ள வேண்டாமா?''

''நன்றாக உன் இஷ்டப்படி நடந்து கொள்! உன்னுடைய அதிகாரத்தை என் பேரில் காட்டாமலிருந்தால் சரி. உன் இஷ்டப்படி நான் நடக்க வேண்டுமென்று சொல்லாமலிருந்தால் சரி.''

''மகுடாபிஷேகத்துக்கு மட்டும் வந்து விடுங்கள். அப்புறம் உங்கள் இஷ்டப்படி நடந்து கொள்ளுங்கள்.''

''மகுடாபிஷேகத்துக்குப் பிறகு வேண்டுமானால் நீ என்பேரில் அதிகாரம் செலுத்தலாம். அதுவரை என்னைக் கட்டாயப் படுத்த உனக்கு என்ன உரிமை?''

''அப்படியானால், நீங்கள் மகுடாபிஷேகத்துக்கு வரப்போவதில்லையா?''

''அது வானதியின் விருப்பம். அவள் போக வேண்டுமென்றால் நானும் வருவேன். இல்லாவிட்டால் வரமாட்டேன்.''

''அந்தப் பெண் எங்கே அக்கா!''

''உன் அன்னை பொன்னி நதிக்குப் பூஜை செய்யப் போயிருக்கிறாள். உனக்கு நல்ல புத்தியைக் கொடுத்து அருள வேண்டுமென்று பிரார்த்தனை செய்யப் போயிருக்கிறாள்.''

இளவரசர் சிரித்து விட்டு, ''அவளுடைய பிரார்த்தனை நிறைவேறட்டும்; நான் புறப்படுகிறேன்'' என்றார்.

''தம்பி! உன்னைப் போல் குரூரமானவனை நான் பார்த்ததே இல்லை. வானதி இரவெல்லாம் தூங்கவே இல்லை; நினைத்து நினைத்து விம்மிக் கொண்டிருந்தாள். காவேரிப் படித் துறைக்குச் சென்று அவளிடம் விடை பெற்றுக் கொண்டு போ!'' என்றாள் குந்தவை.

''அவள் தூங்காதது மட்டும் என்ன? என் தூக்கத்தையும் அவள்தான் பறித்துக் கொண்டு விட்டாள் போலிருக்கிறது. ஒருவர் மனத்தை ஒருவர் அறிந்து நடந்து கொள்ளத் தெரியாவிட்டால் விம்மி அழுது கொண்டிருக்க வேண்டியதுதான். இப்படிப் பட்ட பெண்ணைக் கட்டிக் கொண்டு வாழ் நாளெல்லாம் நான் கஷ்டப்பட வேண்டுமென்கிறீர்கள்!'' என்று பொன்னியின் செல்வர் சொல்லி விட்டு, அந்த அரண்மனையின் பின் புறம் விரைந்து சென்றார். தோட்டத்தைத் தாண்டியதும் பொன்னி நதியின் படித்துறையில் வானதி அமர்ந்திருப்பதையும், பக்கத்திலிருந்த தட்டிலிருந்து மலர்களை எடுத்துப் பொன்னி நதியின் வெள்ளத்தில் ஒவ்வொன்றாகப் போட்டுக் கொண்டிருப்பதையும் பார்த்தார்.

வானதி அவ்விதம் அர்ச்சனை செய்துகொண்டிரா விட்டால், அவள் அந்தக் காவேரித் துறையில் அமைக்கப்பட்ட ஒரு பெண்ணின் பொற் சிலையாகவே தோன்றியிருப்பாள்.

பொன்னியின் செல்வர் சத்தமிடாமல் சென்று வானதிக்குப் பின்னால் மேற்படி ஒன்றில் உட்கார்ந்து கொண்டார்.

வானதிக்கு யாரோ வருகிறார்கள் என்பது தெரிந்துதானிருக்க வேண்டும். உள்ளுணர்வினால் அவர் பொன்னியின் செல்வர்தான் என்று தெரிந்து கொண்டாள் போலும். ஆகையால் திரும்பிப் பாராமல் அர்ச்சனை செய்வதையும் நிறுத்திவிட்டுச் சும்மா இருந்தாள்.

தட்டிலிருந்த மலர்களின் இதழ்களில் பனித் துளிகள் இரண்டொன்று காணப் பட்டன. வானதியின் கண் மலரின் இதழ்களிலும் முத்துப்போன்ற இரண்டு கண்ணீர்த் துளிகள் பிரகாசித்தன.

உதய சூரியனின் பசும் பொற் கிரணங்கள் பொன்னி நதியின் மெல்லிய அலைகளோடு கூடிக் குலாவிய போது, சோழ சாம்ராஜ்ய மங்கை தங்க ரேகைகள் ஊடுருவிப் படர்ந்த நீலப் பட்டுச் சேலையை உத்தரீயமாக அணிந்து விளங்குவது போலத் தோன்றியது. அந்த நீலப் பட்டுச் சேலையின் இருபுறங்களிலும் அமைந்த பச்சை வர்ணப் பட்டுக் கரையைப் போல, நதியின் இருபுறங்களிலும் செழித்து வளர்ந்திருந்த பசும் சோலைகள் காட்சி தந்தன.

காவேரியின் பிரவாகம் இசைத்த இனிய சுருதிக்கு இணங்க இருபுறத்துச் சோலைகளிலும் பலவகைப் புள்ளினங்கள் மங்கள கீதங்கள் பாடி வாழ்த்தின.

கற்பனை உலகிலே சஞ்சரித்துப் பகற் கனவு காண்பதற்கு இடமும் நேரமும் சூழ்நிலையும் மிக வாய்ப்பாக இருந்தன.

இளவரசர் சிறிது மௌனமாயிருந்து பார்த்துவிட்டு, ''வானதி! பகற் கனவு காண்கிறாயா? நான் உன் கனவைக் கலைத்து விட்டேனா?'' என்றார்.

''நான் பகற் கனவுதான் காண்கிறேன், ஐயா! ஆனால் என் கனவைத் தாங்கள் எப்படிக் கலைக்க முடியும்? இரவிலே நான் கனவு கண்டாலும் பகலிலே நான் கனவு கண்டாலும், அக்கனவிலே நடு நாயகமாக விளங்குகிறவர் தாங்கள்தானே? ஆகையாலேயே தங்களைப் பக்கத்திலே பார்க்கும் போது, 'இது கனவா? நனவா?' என்று எனக்குச் சந்தேகம் தோன்றிவிடுகிறது. 'வாருங்கள்!' என்று அழைக்கவும் இயலா

மற் போகிறது. ஆம், சுவாமி! எத்தனையோ நாள் எத்தனையோ விதமான பகற் கனவு கண்டிருக்கிறேன். தங்களை முதன் முதலில் திருநல்லம் அரண்மனைத் தோட்டத்தில் நான் சந்தித்தபோது, தங்களை யானைப் பாகன் என்று நினைத்தேன். தாங்கள் சாதாரண யானைப் பாகனாகவே இருக்கக்கூடாதா என்று பின்னர் பலதடவை நான் எண்ணியதுண்டு. தாங்கள் வெறும் யானைப் பாகனாயிருந்து என்னைத் தங்கள் பின்னால் யானையின் மீது ஏற்றிச் சென்றதாகப் பலமுறை கற்பனையில் கண்டு களித்தேன். அப்போதெல்லாம் இந்த உலகத்தைச் சேர்ந்த சாதாரண கரிய யானையின் மேல் ஏறிப் போவதாக எனக்குத் தோன்றுவதில்லை. தேவலோகத்தில் உள்ள ஐராவதம் என்னும் வெள்ளை யானையின் பேரில் நான் ஏறிச் செல்வதாகத் தோன்றும். தாங்களே தேவேந்திரன் என்றும் நான் இந்திராணி என்றும் எண்ணிக் கொள்வேன்...''

''அப்படியானால் இப்போது....'' என்று பொன்னியின் செல்வர் குறுக்கிட்டுப் பேச முயன்றதை வானதி தடுத்துத் தொடர்ந்து கூறினாள்:—

''கொஞ்சம் பொறுங்கள், அரசே! தேவேந்திரன் இந்திராணி என்ற கற்பனையை உடனே மாற்றிக் கொள்வேன். தேவேந்திரனுக்கும், இந்திராணிக்கும் நிம்மதி ஏது? அவர்கள் இருவரும் தனியாக ஐராவதத்தில் ஏறி ஆனந்தப் பிரயாணம் செய்வதற்கு அவகாசம் ஏது? தேவர்களும் தேவிகளும் புடை சூழவல்லவா எப்பொழுதும் கொலு விருக்க வேண்டும்? ஆகையால் அந்த எண்ணத்தை உடனே மாற்றிக் கொள்வேன். அரசர் குலத்தில் பிறந்தவளாயில்லாமல் கடற் கரையில் வாழும் படகுக்காரர் குடும்பத்தில் நான் பிறந்திருக்கக் கூடாதா என்று எண்ணிக் கொள்வேன்.''

''தெரிகிறது, வானதி! எனக்குத் தெரிகிறது! பூங்குழலியைப் பார்த்து நீ பொறாமைப் படுகிறாய்!''

''ஆம், அது உண்மைதான்! இந்த உலகத்திலேயே பூங்குழலி தேவியைப் பார்த்துத் தான் நான் பொறாமைப்படுகிறேன். அவருடைய மனோரதம் நிறைவேறி விட்டது. அவரும் அவருடைய காதலரும் கோடிக் கரைக்குப் போய் அலை கடலில் படகு செலுத்தியும் குழகர் கோவிலில் சேவை செய்தும் ஆனந்த வாழ்க்கை நடத்தப் போகிறார்கள். அவர் ஏன் என்னைப் பார்த்துச் சிரிக்க மாட்டார்? சிரிக்கத்தான் சிரிப்பார்! ஐயா! வேறு எந்த விதமாக வேனும் என்னைத் தண்டியுங்கள். பூங்குழலி தேவி என்னைப் பார்த்துச் சிரிக்கும்படி மட்டும் செய்யாதீர்கள்!....''

முதல் நாள் இரவு நடந்ததைப் பொன்னியின் செல்வர் நினைவு கூர்ந்து, ''வானதி! கொஞ்சம் பொறுத்துக் கொண்டிரு! நேற்று பூங்குழலி உன்னைப் பார்த்துச் சிரித்தாள் அல்லவா? அவளைப் பார்த்து நீ சிரிக்கும் காலம் வரும்!''

''சுவாமி! நான் பூங்குழலி தேவியைப் பார்த்துச் சிரிக்க விரும்பவில்லை. வேறு யாரைப் பார்த்துச் சிரிக்கவும் விரும்பவில்லை. யார் வேண்டுமானாலும் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு போகட்டும். தங்களுடைய பொன் முகத்தில் சில சமயம் புன்னகையைக் காண்பதற்குத்தான் ஆசைப் படுகிறேன் மற்றவர்களைப் பார்க்கும் போதும் பேசும் போதும் தங்கள் முகம் மலர்ந்திருக்கிறது. என்னைப் பார்க்கும் போது மட்டும் தங்கள் புருவங்கள் நெரிகின்றன. இப்போது கூடத் தங்களைப் பார்ப்பதற்கே எனக்குப் பயமாயிருக்கிறது...''

''வானதி! இதைக் கேள்! உன்னைப் பார்த்ததும் என் முகம் சுருங்குவதற்குக் காரணம் இருக்கிறது. மற்றவர்களால் எனக்கு எவ்வித இடையூறும் இல்லை; அவர்களால் என் மன நிம்மதி குலைவதில்லை. உன்னால் என் உள்ளம் அமைதியை இழக்கிறது. நேற்றிரவு நீ தூங்கவில்லையென்று என் தமக்கையார் கூறினார். நானும் தூங்கவில்லை, வானதி! பல தினங்களாகவே தூங்குவதில்லை. அரண்மனை மேன்மாடத்தில் படுத்து ஆகாசத்து நட்சத்திரங்களைப் பார்த்தேனானால், உன் கண்களின் ஒளியைத் தான் அந்த விண்மீன்கள் எனக்கு ஞாபகப்படுத்துகின்றன. சோலை மரங்கள் காற்றில் அசைந்தாடி இலைகள் சலசலவென்று சப்திக்கும் போது, நீ உன் இனிய குரலில் கல கலவென்று சிரிக்கும் ஒலியைத்தான் கேட்கிறேன். மிருதுவான தென்றல் காற்று என் தேகத்தில் படும் போது நீ உன் காந்தள் மலர்களையொத்த விரல்களால் என்னைத் தொடுவதாக எண்ணிப் பரவச மடைகிறேன். வானதி! இப்படியெல்லாம் உன் நினைவு என்னை ஆட்கொண்டிருப்பதால், உன்னை நேருக்கு நேர் பார்க்கும் போது என் முகம் சுருங்குகிறது; புருவங்கள் நெரிகின்றன. என் வாழ்க்கையில் நான் சாதனை செய்ய விரும்பும் காரியங்களுக்கெல்லாம் நீ தடங்கலாகி விடுவாயோ என்று அஞ்சுகிறேன்....''

''சுவாமி! அந்த பயம் தங்களுக்கு வேண்டாம்! தங்கள் காரியங்களுக்கு நான் தடையாக இருக்க மாட்டேன்....''

''நீ தடையாக இருக்க மாட்டாய்; யாருமே தடையாக இருக்க முடியாது! மாரிகாலத்தில்

கீழ்த்திசையிலிருந்து புயல் கொண்டு வரும் கருமேகத் திரளை நீ பார்த்திருக்கிறாயா, வானதி! அந்த மேகத்திரளில் மழை நீர் நிறைந்திருக்கிறது. மின்னல்களும் இடிகளும் அம்மேகத்தில் மறைந்திருக்கின்றன. சண்டமாருதம் அந்த மழை நிறைந்த கொண்டலைத் தள்ளிக் கொண்டு வருகிறது. அதை யாராவது தடுத்து நிறுத்த முடியுமா? அந்த மேகங்களின் நிலையில் நான் இருக்கிறேன், வானதி! என் உடம்பில் எப்போதும் ஒரு பரபரப்பு இருந்து கொண்டிருக்கிறது. என் உள்ளத்தில் ஏதோ ஒரு வேகம் இருந்து கொண்டிருக்கிறது. கண்ணுக்குத் தெரியாத மின்னல்கள் மின்னுகின்றன; காதில் கேட்காத இடி முழக்கங்கள் ஒலிக்கின்றன. புயல்களும் சூறைக்காற்றுகளும் சண்டமாருதங்களும் என்னை அழைக்கின்றன. ஏழு கடல்களிலும் மலைமலையாக அலைகள் கிளம்பி என்னை வரவேற்கின்றன. ஆயிரமாயிரம் சங்கங்களின் நாதமும், முரசுகளின் முழக்கமும், போர் யானைகளின் பிளிறல்களும் என்னைக் கவர்ந்து இழுக்கின்றன. என்னை யாரும் தடுக்க முடியாது, வானதி! ஆனால் தடுக்க முயன்று எனக்கு மன அமைதி இல்லாமல் செய்ய முடியும்....''

''சுவாமி! அவ்வாறு நான் ஒரு நாளும் செய்ய மாட்டேன்; தடை செய்ய முயலவும் மாட்டேன். மூன்று உலகையும் ஆளப் பிறந்த தங்களுக்கு உதவி செய்ய முடியாவிட்டாலும் இடையூறாக இருக்க மாட்டேன். ஆகையினாலேதான் தங்கள் அருகில் சோழ சிங்காதனத்தில் உட்காரவும் மறுதலிக்கிறேன்.''

''வானதி! சோழர் குலச் சிங்காதனம் மகிமையில் பெரியதானாலும், அளவிலே சிறியது. அதில் ஒருவர்தான் அமர முடியும். சக்கரவர்த்திக்குப் பக்கத்தில் வேறொரு சிங்காதனம் அமைத்து அதில்தான் சக்கரவர்த்தினி அமர வேண்டும்.''

''சுவாமி! எனக்குத் தாங்கள் அமரும் சிங்காதனத்திலும் இடம் வேண்டாம். தங்கள் அருகில் தனிச் சிங்காதனத்திலும் இடம் வேண்டாம். தங்களுடைய பட்டமகிஷியாகச் சிங்காதனத்தில் அமர்ந்திருக்கப் புண்ணியம் செய்தவளுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கட்டும். தங்களுடைய நெஞ்சகமாகிய சிங்காதனத்திலே எனக்குச் சிறிது இடங் கொடுத்தீர்களானால், அதுவே ஏழு ஜன்மங்களில் நான் செய்த தவத்தின் பயன் என்று கருதிப் பூரிப்பு அடைவேன்!''

''வானதி! என்னால் சுலபமாகக் கொடுக்க முடிந்ததை நீ கேட்டாய். என்னுடைய நெஞ்சமாகிய சிங்காதனத்தில் நீ ஏற்கெனவே இடம் தயார் செய்து கொண்டு விட்டாய்! அதை நான் உனக்குத் தருவதில் எவ்விதத் தடையுமில்லை! இந்தப் பெரிய சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினியாக உண்மையிலேயே நீ விரும்பவில்லையா, வானதி! கண்டோர் கண்கள் கூசும்படி ஜொலிக்கும் நவரத்தினங்கள் பதித்த பொற்கிரீடத்தை உன் சிரசில் சூட்டிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை உனக்கு இல்லையா?''

''அந்த ஆசை எனக்குச் சிறிதும் இல்லை! சோழ குலத்துப் புராதன மணி மகுடங்களை நான் பார்த்திருக்கிறேன். கையில் எடுத்தும் பார்த்திருக்கிறேன். அவற்றில் ஒன்றை என் தலையில் வைத்துக் கொண்டால், அதன் கனம் என் தலையை அமுக்கிக் கழுத்தை நெறித்து மூச்சுவிடத் திணறும்படி செய்து விடும் என்று அஞ்சுகிறேன். அவ்வளவு வலிமை என் உடலில் இல்லை. அவ்வளவு தைரியம் என் மனத்திலும் இல்லை. சுவாமி! நவரத்தினங்கள் இழைத்த மணி மகுடத்தைச் சுமக்க வலிமையும் தைரியமும் உள்ளவர்கள் அதைச் சுமக்கட்டும். தாங்கள் கடல் கடந்த நாடுகளுக்குப் பிரயாணம் புறப்படுவதற்கு முன்னால், எனக்கு வேறொரு பரிசு கொடுத்து விட்டுப் போங்கள். அரண்மனை நந்தவனத்திலிருந்து அழகான மலர்களைப் பறித்துத் தொடுத்து மாலை கட்டித் தருகிறேன். என்னால் எளிதில் சுமக்கக் கூடிய அந்த மாலையை என் கழுத்தில் சூட்டி என்னைத் தங்கள் அடிமையாக்கிக் கொண்டு விட்டுப் புறப்படுங்கள்!....''

''சீன வர்த்தகர்களிடமிருந்து நவரத்தின மாலையை உனக்குப் பட்டாபிஷேகப் பரிசாகக் கொண்டு வந்தேன்.''

''தங்கள் பட்டாபிஷேகத்துக்கு எனக்குப் பரிசு எதற்கு?''


''சரி; வேண்டாம்! இதை வேறு யாருக்காவது கொடுத்து விடுகிறேன். வானதி! நீயும் நானும் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வோம். நான் புறப்படுவதற்கு முன்னர் உன் விருப்பத்தின்படி உனக்கு ஒரு மாலை சூட்டி விட்டுப் போகிறேன். நான் சூட்டும் அந்த மணமாலைக்குப் பதிலாக நான் ஒவ்வொரு தடவை அயல் நாடுகளிலிருந்து திரும்பி வரும் போதும் நீ ஒவ்வொரு பூமாலையுடன் காத்திருக்க வேண்டும். கடல் கடந்து தூர தூர தேசங்களுக்கெல்லாம் சென்று புலிக்கொடியை நாட்டி விட்டு வெற்றி முழக்கத்துடன் நான் திரும்பி வரும்போதெல்லாம் நீ ஒரு வெற்றி மாலையுடன் எனக்காகக் காத்திருக்க வேண்டும்....''

''ஒரு மாலை என்ன? நூறு நூறு மாலைகள் தொடுத்து வைத்துக் கொண்டு காத்திருப்பேன். இந்தத் தேச மக்கள் எல்லாரும் காத்திருப்பார்கள்!'' என்றாள் இளவரசி வானதி.

(தொடரும்)


கல்கி
ஆகஸ்டு 5
ஆண்டு மலரில் ஆரம்பம்!
அமரர் கல்கியின்
சிவகாமியின் சபதம்

ஐடிபிஐ - முதலீட்டுப் பத்திரங்கள் முதலீட்டு ஆதாய வரி விலக்குப் பெற ஒரு கவர்ந்திடும் வழி



- ஆண்டு முழுவதும் சமவிலையில் கிடைக்கும்.
- வருமான வரிச் சட்டம், 1961, பிரிவு எண் 54E-ன் கீழ் முதலீட்டு ஆதாய வரி விலக்கு.
- செல்வ வரிச் சட்டம், 1957, பிரிவு எண் 5(1)xvie)-ன் கீழ் செல்வ வரி விலக்கு.
- வருமான வரிச் சட்டம், பிரிவு எண் 80-Lன் கீழ் வருமான வரி குறைப்பு.
- ஆண்டொன்றுக்கு 9% விகிதத்தில் ஆறு மாதத்திற்கொரு முறை வட்டி வழங்கப்படும்.
- முதலீடு செய்தவர் விரும்பினால் 3 ஆண்டுகட்கான மொத்த வட்டியும் தள்ளுபடி முறையில் முன்னதாகவே ஒரே நேரத்தில் வழங்கப்படும்.
- எவ்வித வரியும் வட்டி வழங்கும்பொழுது கழிக்கப்படமாட்டாது.
- வெளியூர்க் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவற்றை மாற்றுவதற்கான செலவை ஐடிபிஐ ஏற்றுக்கொள்ளும்.

Sobhagya-B/89 TAM

மேற்கொண்டு விவரங்களுக்கு அருகாமையிலுள்ள ஐடிபிஐ ஆபீஸை அணுகுங்கள் அல்லது மானேஜருக்கு எழுதுங்கள்:

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப் இந்தியா

ஐடிபிஐ டவர், கஃப் பரேட், கொலாபா, பம்பாய்-400 005.



* இந்தச் சிறுவனின் படிப்பு தொடர நீங்கள் உதவ முடியும்....

உசிலம்பட்டி! — இந்த ஊரின் பெயரைச் சொன்னாலே பெண் சிசுக் கொலைகள், அதுபற்றி எழுதப்பட்ட கட்டுரைகள், கதைகள் என்று அலை அலையாக நெஞ்சை உலுக்கும் நினைவுகள்தான் எழும்... ஆனால், உசிலம்பட்டியில் பல பெண் குழந்தைகள் கொலை செய்யப்படுவது தடுக்கப்பட்டும் உள்ளது; காப்பாற்றப்பட்ட அக்குழந்தைகள் சட்டபூர்வமாகத் தத்து கொடுக்கப்பட்டுள்ளன என்பதை அறிந்த போது சற்று ஆறுதலாக இருந்தது.

இந்தியன் கவுன்சில் ஃபார் சைல்ட் வெல்ஃபேர் (ICCW) என்ற அமைப்பு, உசிலம்பட்டி பகுதியில் வாழும் பெண்களிடையே சேவை செய்து வருகிறது. 'பெண் சிசுக்களைக் கொல்லாதீர்கள். அக்குழந்தைகளை எங்களிடம் கொடுத்தால் நாங்கள் அவற்றைத் தத்து கொடுக்கும் மையங்கள் மூலம், குழந்தைகளுக்காக ஏங்கும் அன்பான பெற்றோரிடம் ஒப்படைக்கிறோம்' என்று உசிலம்பட்டி பகுதி வாழ் பெண்களிடம் எடுத்துச் சொல்லி, குழந்தைகளைப் பொறுப்புடன் வாங்கிச் செல்கின்றனர் ICCW ஊழியர்கள். குழந்தைக் காப்பகங்கள் அமைத்தும் பெண்களிடம் அன்பாக எடுத்துச் சொல்லியும் இங்கே நிலவும் பயங்கர நடைமுறையை ஒழிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னையின் சேரிகளில் உள்ள குழந்தைகள், பள்ளிக்குச் சென்று வருகிறார்கள். ஆனால் அவர்கள் வாழும் சூழ்நிலை, எழுத்தறிவில்லாத பெற்றோரால் அவர்களுக்கு உதவ முடியாமல் இருப்பது ஆகிய காரணங்களால் அவர்கள் படிப்பில் சராசரி மதிப்பெண்கள் கூடப் பெற முடிவதில்லை. எனவே இக் குழந்தைகளுக்குச் சிறப்புப் பயிற்சியளிக்க முடிவு செய்தது ICCW. மாலை நேர வகுப்புக்களில் படிப்பதற்கு நல்ல சூழ்நிலையும் கூடுதல் பயிற்சியும் இக் குழந்தைகள் பெறுகிறார்கள். சுமார் முப்பது, நாற்பது குழந்தைகள் பயிலும் ஐந்து மாலை நேர வகுப்புக்கள் இப்போது சென்னையில் நடக்கின்றன.

திருச்சி — ஸ்ரீரங்கம் வட்டாரத்தில் கள்ளச் சாராயத்துக்குப் பல இளைஞர்கள் பலியானதால் நிறைய இளம் பெண்கள் கணவன்மார்களை இழந்து, நிராதரவாகி விட்டனர். குழந்தை குட்டிகளுடன் பிழைக்க வழி தெரியாமல் தவித்த இவர்களுக்கு, 'Lead' என்ற அமைப்பு வழிகாட்டியுள்ளது. இப் பெண்களுக்குத் தொழிற்கல்வி அளித்தும் பிறகு தொழில் தொடங்க பண உதவி செய்தும், மெள்ள மெள்ள தங்கள் சொந்தக் கால்களில் நிற்கச் செய்துள்ளது. (Lead: League for Education and Development)

தமிழகத்தில் தனித்தனியாக நிகழ்ந்து வரும் மேற்படி மூன்று நல்ல காரியங்களுக்கும் பொருளுதவி செய்து வருகிறது CRY அமைப்பு. Child Relief and you என்பதன் சுருக்கம்தான் CRY. பெயரிலேயே ஒரு தனித்தன்மை இருக்கிறது. 'சமூக, பொருளாதாரக் காரணங்களால் குழந்தைப் பருவத்தின் உல்லாசத்தையும் போஷிப்பையும் பாதுகாப்பையும் அனுபவிக்க முடியாமல் தவிக்கும் ஆயிரமாயிரம் இந்தியக் குழந்தைகளின்

* CRY சின்னம்

CRY

CHILD RELIEF AND YOU

குழந்தைகள்
நலனுக்காக
ஒரு கூக்குரல்



"என்னது...? டிராஃபிக்கை, கேரள நெடுஞ்சாலை ஓரமாத் திருப்பி விட்டுட்டாங்களா... ஏன்?"

"அமைச்சர் ஹெலிகாப்டரில் வந்துட்டிருக்காராம்...!"

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.

அழுகைக் குரல்கள் உங்களுக்குக் கேட்கவில்லையா? இந்தக் குழந்தைகளுக்காக நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?' என்று நம் மனச்சாட்சியை நோக்கிக் கேள்வி கேட்பது போல் அமைந்துள்ளன CRY என்ற ஆங்கிலப் பெயரும் அதன் சின்னமும்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களில் பிறந்த குழந்தைகளுக்காக நாம் ஏதேனும் செய்தாக வேண்டும் என்ற நன்னோக்கைக் கொண்டிருந்த ஒருவர் ரிப்பன் கபூர். பம்பாயைச் சேர்ந்த இந்த ஏர்—இந்தியா ஊழியர், சமூக சேவையில் கொஞ்சம் அனுபவம் பெற்றிருந்தார். சில நண்பர்களுடன் ஒன்று சேர்ந்து தமது வீட்டுச் சாப்பாட்டு மேஜையில் அமர்ந்து, திட்டமிட்டு, CRY அமைப்பைத் தோற்றுவித்தார்.

சமூக சேவை செய்வதற்குப் பயிற்சி பெற்ற ஊழியர்கள் இருக்கிறார்கள். நல்லெண்ணம் கொண்ட பலரால் பல குழந்தைகள் நலத் திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளன... ஆனால் இவை எல்லாமே பலன் தர நீண்ட காலம் ஆகும். அதுவரை திட்டம் நீடிக்கப் பொருளுதவி பெறுவதுதான் பெரிய பிரச்னை — இது ரிப்பன் கபூர் அனுபவத்தில் கண்டறிந்த உண்மை.

எனவே சிறந்த குழந்தைகள் நலத் திட்டங்களுக்குப் பொருளுதவி பெற்றுத் தருவதே CRY அமைப்பின் பிரதான நோக்கமாக விளங்குகிறது.

ஆரம்பத்தில் பிரபல அறக்கட்டளைகளிடம் நன்கொடை பெற்று அத் தொகையை முதலாகக் கொண்டு நற்பணிகளுக்கு உதவியது CRY. மெள்ள மெள்ள பொது மக்களும் நிறுவனங்களும் பொருளாகவும் பணமாகவும் கொடுத்து உதவ ஆரம்பித்தனர். சிலர் உழைப்பை மட்டுமே வழங்க முன்வந்தனர். தற்போது CRY வாழ்த்து அட்டைகளும் காலண்டர்களும் தயாரித்து விற்று, அந்தத் தொகையையும் நற்பணிகளுக்கு வழங்கி வருகிறது.

இந்தியா முழுவதிலுமாகச் சுமார் நாற்பது குழந்தைகள் நலத் திட்டங்களுக்குப் பொருளுதவி அனுப்புகிறது CRY. பம்பாய், டெல்லி, பெங்களூர், சென்னை ஆகிய இடங்களில் CRY அலுவலகங்கள் உள்ளன. இங்குள்ள ஊழியர்கள் எல்லோரும் மிகக் குறைந்த ஊதியம் பெற்றுக் கொண்டு கொள்கைக்காக உழைக்கிறார்கள்.

குழந்தைகளின் நல்வாழ்வில் தாய்மார்களுக்கும் முக்கியப் பங்கு உண்டு என்று உணர்ந்து பெண்கள் நலத் திட்டங்கள் பக்கமும் கவனம் திருப்பியுள்ளது CRY.

- உதய்பூரில் ஆதிவாசிப் பெண்களிடையே அடிப்படை உரிமைகள் பற்றிய அறிவைப் பரப்பும் 'ஜன் விகாஸ்'.
- கல்கத்தாவில் கட்டடத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு நடைபாதைப் பள்ளிகளில் சுகாதாரம் மற்றும் முறைசாரா கல்வி அறிவூட்டும் 'புர்பசல் உத்யான்' சங்கம்.
- பம்பாயில் சுகாதார ஊழியர்களின் மேம்பாட்டுக்காகவும் அவர்களுடைய குழந்தைகளின் நலனுக்காகவும் வகுக்கப்பட்டுள்ள 'பால்மீகி தலித் விகாஸ்' சமிதி.
- ஹைதராபாத்தில் உழைக்கும் சிறுவர்களின் கல்விக்காகவும் கொத்தடிமைக் குழந்தைகளின் புனருத்தாரணத்துக்காகவும் பாடுபடும் 'எம். வெங்கடரங்கையா ஃபவுண்டேஷன்'

— இவையெல்லாம் CRY ஆதரித்து வரும் சில அமைப்புக்கள்.

நிதியுதவி கோரும் மனுக்களைப் பரிசீலித்து, நேரில் சென்று திட்டங்களை ஆராய்ந்து நிதி ஒதுக்க ஒரு குழு செயல்படுகிறது. நேர்மையும் நல்நோக்கும் உடைய நடைமுறைச் சாத்தியமான திட்டங்களுக்குத் தயங்காமல் உதவுகிறது CRY. சமாளிக்க முடியாத அளவுக்கு நிதி கோரி விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. பணப் பற்றாக்குறை காரணமாகச் சில விண்ணப்பங்களை நிராகரிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இனி தெருவோடு நடக்கையில் குறுக்கே நீளும் ஏழைச் சிறுவனின் கரத்தையோ அல்லது தன் இளமையைப் பத்துப் பாத்திரம் தேய்த்துத் தொலைத்துக் கொண்டிருக்கும் சிறுமியின் முகத்தையோ காண நேர்ந்தால் 'ஓர் அனுதாபப் பெருமூச்சு விடுவதற்கு மேலாக நாம் என்ன செய்ய முடியும்' என்ற எண்ணத்துடன் மேலே செல்லாதீர்கள். CRY உங்கள் மிகச் சிறு உதவியையும் ஏற்கும்.

— சீதா ரவி

CRY
45, போயஸ் சாலை,
தேனாம்பேட்டை,
சென்னை — 18.




இது சாதாரணம், பாருங்களேன். நான் சாக்லேட்களை கபளீகரம் செய்வது போல, வழக்கமாக ஸிபாகா ஃப்ளோரைட் உபயோகித்து என்னுடைய பற்களைத் தேய்க்கிறேன்.

ஸிபாகாவினுடைய செழிப்பான நுரை சுத்தப்படுத்தி எல்லா சாக்லேட் துணுக்குகளை நீக்குகிறது. அதனுடைய பிரத்தியேகமான ஃபார்முலா பற்கள் கெட்டுப் போகாமல் பாதுகாக்கிறது.

ஆகையால் ஸிபாகா ஃப்ளோரைடுக்கு நன்றி. என் முப்பத்திரண்டு பற்களும் பளிச்சிடும் வெண்மையுடன் வாழ்நாள் முழுவதும் உறுதியாக இருக்கும். சாக்லேட் எல்லாம் இருந்தும் கூட.

பற்களுக்கு பலம். என்றென்றும் தரும்.



ULKA-13196 TAM

அதிர்ஷ்ட தேவதை

11

தினம் தூங்கவில்லை. தூக்கம் வராமல் ரமணியும் மயில்சாமியும் ரங்கனும் தடுத்தார்கள். அவள் மேற்கொண்டு என்ன செய்வாள்? செய்யமுடியும்! இருபத்தைந்துலட்சம் ரூபாய் என்றால் எவ்வளவு என்று நிர்ணயமாக அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை என்றாலும், அது ஒரு பெரிய தொகை. அதன் மூலம் தான் ஒரு பணக்காரியாகிவிடலாம் என்பதைப் புரிந்து கொண்டாள். ரங்கனுடைய கைக்குப் பணம் வந்துவிட்டாலே போதும். அவளுடைய கைக்கு வந்த மாதிரிதான்.

ஆனால் வராது போலிருக்கிறதே?

சீட்டுக் கடைக்காரன் ரங்கனுடைய பெயரை எழுதி வைத்துக் கொள்ளாமல் ரமணியின் பெயரை அல்லவா எழுதி வைத்திருக்கிறான்? சீட்டும் ரமணியின் பெயரில் இருக்கிறது. அவளுக்குத் தெரியும், ரங்கன் தான் வாங்கியிருக்கிறான், ரமணியிடம் ஒப்படைத்திருக்கிறான் என்றெல்லாம். இவ்வளவு முட்டாள்தனமாக யாராவது இருப்பார்களா?

திடீரென்று அவளுடைய குறுக்குப் புத்தி சிந்திக்க ஆரம்பித்தது.

அவள் பணத்தின் மீது உரிமை கொண்டாட வேண்டும். எப்படி? ரங்கன் ஒருவன் மூலமாகத்தான் உரிமையின் கொண்டாட்டம் ஆரம்பிக்க முடியும்.

ரங்கன் அவள் மீது அபரிமிதமாக ஆசை கொண்டிருக்கிறான். ஆனால் அதுவரைக்கும் அவள் அவனை அலட்சியம் செய்திருக்கிறாள். அவனிடம் தான் இதுவரை கையாண்டிருக்கும் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும். ஆனால், இதனால் எப்படி ரங்கனால் ரமணியிடமிருந்து, பரிசுச் சீட்டைப் பெற முடியும்? ரங்கன் — ரமணி இருவருக்கிடையே அவள் எப்படிப் பாய்வாள்?

அவளுக்கு இன்னொரு யோசனையும் பிறந்தது. பேட்டை ரௌடிகள் சில பேர்களை அவளுக்குத் தெரியும். மம்மட்டி கோவிந்து இருக்கிறான். பிக்பாக்கெட் காசி இருக்கிறான். இருவரில் யாராவது ஒருவனுக்கு ஆயிரமோ, இரண்டாயிரமோ தள்ளினால், பரிசுச் சீட்டு என்ன, ரமணியின் குடலையே உருவி எடுத்து வந்து அவள் கழுத்தில் மாலையாகப் போடுவார்கள். ஆனால் அவர்களுக்கு விஷயம் தெரிந்துவிடும். பரிசுச் சீட்டே அவளுடைய கைக்கு வராமலும் போய்விடலாம். மேலும் ரமணியைத் தாக்குவதோ, அவனிடமிருந்து சீட்டைப் பறிப்பதோ அவ்வளவு எளிதாக இருக்காது. அவன் நேரே போலீசுக்குப் போவான். போலீஸ் என்று வந்தால், நிச்சயம் தோல்வி அவளுக்குத்தான். அவள் ஒரு தடவை பூக்கடை போலீஸ் ஸ்டேஷனில் ஒரு நாள் முழுதும் அடைக்கப்பட்டிருக்கிறாள்.

என்ன செய்ய?

அடிதடி முறை உதவாது என்றால் வேறு என்ன வழி?

பரிசுச் சீட்டிலிருந்து மனம் ரங்கனுக்கு வந்தது. நேற்றுக் காலை ஆபீசுக்குப் புறப்பட்டவன் இன்னும் வரவில்லை. அவன் அன்று ஆபீசுக்கே செல்லவில்லை, ரமணியும் அவனுடைய சிநேகிதிப் பெண்ணும் கூட வரவில்லை என்று மயில்சாமி சொன்னான். அப்படியானால் என்ன அர்த்தம்? மூன்று பேருமாகப் பணத்தைப் பங்கு போட்டுக் கொள்ளுகிறார்களா? இந்தப் பட்டணத்தில் ரங்கனை எங்கே என்று தேடுவது?

மறுபடியும் ஆபீசுக்குச் செல்வது என்று முடிவு எடுத்து, மீண்டும் இரண்டு மூன்று தம்ளர் தண்ணீர் குடித்துப் படுக்கையில் விழுந்தாள்.

ரமணி சேலம் ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் ரங்கன், "ரமணி சார்... ரமணி சார்... இப்படிப் பண்ணிட்டீங்களே, ரமணி சார்!" என்று அலறி அழுதான். ஒரு சிலர் அவனுடைய குரலைக் கேட்டு, நின்று வேடிக்கை பார்க்கத் தயாரானார்கள்.

"டேய் மடையா, ஏண்டா ஊளையிடறே? உனக்கு என்னாச்சு? மாலு, இவன் இப்படித்தான் ரயிலிலே அலறிட்டு வந்தானா?"

"இல்லையே... கும்பகர்ணன் மாதிரி தூங்கிட்டு வந்தானே...! ரங்கா, என்ன நீ, யாரோ செத்து விட்ட மாதிரி அழறே? இது பிளாட்பாரம். பேசாமல் வா..."

"இன்னொரு வாட்டி கத்தினே, உன்னை ஏர்க்காடு மலைக்காட்டிலே மரமோடு மரமாக் கட்டிப் போட்டுடுவேன், வா பேசாம!" என்றான் ரமணி. பிறகு "மாலு, மொதல்லெ லாட்ஜுக்குப் போகலாம். குளிச்சு, டிபன் சாப்பிட்டப்புறம் மத்த வேலைகளைப் பார்க்கலாம்," என்றான்.

என்ன வேலை என்று மாலுவுக்கு இன்னமும் தெரியாது. இருந்தாலும் தலை ஆட்டினாள்.

நாலு ரோடு அருகே ஒரு பெரிய ஓட்டலின் முன் ஆட்டோ நின்றது.

"இறங்கு, ரங்கா!" என்றான் ரமணி.

ரங்கன் மௌனமாய் இறங்கி, அவர்களைப் பின்தொடர்ந்தான். மாலு ஒரு தனி அறைக்குச் செல்ல, ரங்கனை அழைத்துக் கொண்டு ரமணி தன் அறைக்குள் பிரவேசித்தான்.

''ரங்கா, பல் தேய்ச்சியா?''

''இல்லே.''

''மொதல்ல பல் தேய்ச்சுக் குளி... அது சரி... குளிச்சப்புறம் போட்டுக்க கையிலே பாண்ட் ஷர்ட் கொண்டு வரலியா?''

''இல்லே!'' என்ற ரங்கன், ''ரமணி சார் எதுக்கு என்னை இந்தச் சேலத்துக்கு வரச் சொல்லியிருந்தீங்க? நீங்க ரெண்டு பேரும் ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் கல்யாணம் செய்து கொள்ளப் போறீங்களா? அதுக்கு நான் சாட்சிக் கையெழுத்துப் போடணுமா?'' என்றான்.

ரமணி சிரித்தான்.

''நீ ஒரு முட்டாள்னு உலகம் பூரா நினைக்கிறது. ஆனால் நீ முட்டாள் இல்லே! மூளை நன்னா வேலை செய்யறது... ஆமாம் நீ ஏன் ரயில்வே ஸ்டேஷன்லே அழுதே?''

''ஏன்னு உங்களுக்குத் தெரியாதா, ரமணி சார்...? எனக்கு... எனக்கு...''

''சரி, சரி, கொஞ்ச நேரம் பேசாம இரு. மொதல்ல இந்த பாண்ட் ஷர்ட்டை சோப் போட்டுத் தோய்ச்சு, ஃபேனுக்கு அடியிலே காயப் போடு. ரெண்டு மணி நேரத்திலே காய்ஞ்சுடும். அதுவரையில்என் வேஷ்டியைக் கட்டிக்க,'' என்றான்.



''அதுக்கு முன்னாடி ஒரு முக்கியமான விஷயம் பேசணும், ரமணி சார்.''

''எதைப் பத்தி?''

''ராஜஸ்தான் லாட்டரிச் சீட்டு! என் டிக்கெட்டுக்கு இருபத்தைஞ்சு லட்சம் ரூபாய் விழுந்திருக்கு ரமணி, சார்!''

அப்படியா. ரொம்பசந்தோஷம். போய்ப் பல் தேய்.''

''டிக்கெட் உங்க கையிலே இருக்கு ரமணி சார்.''

''அதுக்கு இப்ப என்ன, நான் சொன்னதைச் செய்... போ!''

ரமணியை எதிர்த்துப் பேச ரங்கனுக்குத் தைரியம் வரவில்லை. ரமணியின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டால் அவன் டிக்கெட்டையே கண்ணில்காட்டமாட்டான்.

குளியலறைக்குள் சென்ற ரங்கன் குழம்பிப் போனான். ஷர்ட்டைக் கழற்றுகையில் கை நடுங்கியது. அவன் ரமணியிடம், ராஜஸ்தான் லாட்டரியில் இருபத்தைந்து லட்சம் ரூபாய் பரிசு விழுந்திருக்கிறது என்கிறான். அதற்கு எப்படிப்பட்ட உணர்ச்சியையும் காட்டாமல் ரமணி, 'அப்படியா, ரொம்ப சந்தோஷம்' என்கிறான். டிக்கெட்டைப் பற்றிப் பேசும் பொழுது 'அதுக்கு இப்ப என்ன?' என்று லட்சியமில்லாமல் பேசுகிறான். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? எதற்குச் சேலத்துக்கு அவனை இந்த ரமணி அழைத்திருக்கிறான்? ஏர்க்காடு காட்டினுள் துரத்தி அடிக்கவா? ஏர்க்காடு எங்கே இருக்கிறது?

காடு என்றால் அதில் புலி, கரடி, யானை எல்லாம் இருக்குமே?

அவன் குளியலறையிலிருந்து திரும்பிய போது ரமணி இல்லை. ஒரு டீப்பாயின் மேல், இட்லி, வடை, பொங்கல் எல்லாம் இருந்தன. ஒரு பிளாஸ்க்கில் காப்பியும் இருந்தது.

துணிகளைக் காயப் போட்ட ரங்கன், கட்டிலின் மீது கிடந்த வேட்டியைக் கட்டிக் கொண்டான்.

இட்லியும் வடையும் லேசில் இறங்கவில்லை. ஆனால் வயிறு பசியில் இரைந்தது.

ரமணி எங்கே போய்விட்டான்?

பக்கத்து அறையில் மாலு இருக்கிறாள். இருவருமாக அங்கே டிபன் சாப்பிடுகிறார்களோ?' ரங்கன் எழுந்து கதவைத் திறக்க முயற்சி செய்தான். அது வெளியே பூட்டப் பட்டிருப்பது தெரிந்தது. ரமணி ஏன் அவனை இந்த அறையில் வைத்துக் கதவைப் பூட்ட வேண்டும்?

திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. ரமணி நடிக்கிறானா அல்லது உண்மையி

பி.வி.ஆர்.

லேயே லாட்டரிப் பரிசு பற்றித் தெரியாதா? பணத்தின் மீது எழுந்த வெறியில் இப்போது மூளை சுறுசுறுப்பாக வேலை செய்தது. ரமணியின் பெட்டியைக் குடைந்து பார்த்தால் என்ன?

கதவின் உள் தாழ்ப்பாளைப் போட்டு விட்டுப் பெட்டிக்கு வந்தான். துணி மணிகள் தான் இருந்தன. பெட்டியின் அடிப்பாகம் வரை துழாவினான்.

பரிசுச் சீட்டு இல்லை.

'ரமணி சார் தன் மணி பர்சிலேயே வைத்திருக்க வேண்டும்.'

சரியாகப் பத்து மணிக்கு ரமணி அறைக்கு வந்தான்.

''ஷர்ட்டும் பாண்ட்டும் காய்ஞ்சுடுத்தா ரங்கா?''

''ஷர்ட் காய்ஞ்சுடுத்து. பாண்ட் ஈரமா இருக்கு.''

''பரவாயில்லே. அதையே போட்டுக்க. வெயில்ல கொஞ்ச நேரம் நடந்தால் காய்ஞ்சுடும். வா, போகலாம்.''

''எங்கே ரமணி சார்?''

''நீ எங்கிட்டே கேள்வி கேட்கப்படாது. வாயை மூடிட்டு வரணும்.''

''எதுக்கு ரமணி சார் என்னை இப்படிப் பயமுறுத்தறீங்க? நீங்க இது மாதிரி எப்பவுமே என்கிட்டப் பேசினதில்லே?''

''இப்பத்தானே சொன்னேன், நீ கேள்வி கேட்கப்படாதுன்னு. நீ ஒரு முட்டாள். நான் எவ்வளவு முட்டிண்டும் நீ அந்த பஜாரி கழுத்திலே தாலியைக் கட்டினே. அதுக்கு அனுபவிக்கறே. இப்ப நான் அவகிட்டேர்ந்து உன்னைக் காப்பாத்தப் போறேன்.''

''அவ என் பெண் ஜாதி, ரமணி சார். அவளுக்கு வாய் கொஞ்சம் அதிகம்தான்... அதுக்காக...''

''பேசாமல் வா!'' என்ற ரமணி, ஒரு கணம் நின்று, ''இப்ப நீ, நான், மாலு மூணு பேரும் ஒரு இடத்துக்குப் போகப் போகிறோம். அங்கே நீ அனாவசியமாப் பேசப்படாது. பேசினா காரியமே குட்டிச்சுவராகிவிடும்.''

''நம்ம பெண்ணுக்கு உன் அப்பா மாப்பிள்ளை பார்க்கிறதை ஏன் வேணாங்கறே?''

''அவர் மாப்பிள்ளை செலக்ட் பண்ற இலட்சணம் எனக்குத் தெரியாதா?''

— சி. பன்னீர் செல்வன்.



''என்ன காரியம், ரமணி சார்?'' ரங்கனால் கேள்வி கேட்காமல் இருக்க முடியவில்லை.

ரமணி பதில் பேசாமல் கதவைப் பூட்டினான். தன் அறை வாயிலின் முன் மாலு முகமெல்லாம் சிரிப்பாய் நின்று கொண்டிருந்தாள். ரங்கனை அவள் பார்த்த போது, அவனுக்கு அது ஏளனச் சிரிப்பாகப் பட்டது.

ஆட்டோவிலிருந்து இறங்கிய பிறகுதான், ரங்கன், தான் பாரத ஸ்டேட் வங்கியின் முன் நிற்பதை உணர்ந்தான்.

''வா, ரங்கா'' என்றான் ரமணி. இப்போது அவனுடைய குரலில் கடுமை இல்லை.

வங்கி மேலாளர் அறைக்குள் மூவரும் பிரவேசித்தார்கள்.

''வாடா ரமணி... சொன்னபடி ரெண்டு பேரையும் அழைச்சு வந்துட்டே... மிஸ் மாலு, ஐ'ம் சிவா. மானேஜர் ஆஃப் திஸ் பிராஞ்ச். ரமணியின் மாமா பிள்ளை. உன்னைப் பத்தி ரமணி சொல்லியிருக்கான். உட்கார்ப்பா ரங்கா, உட்கார்.''

மாலு சிரித்தாள்.

ரங்கனுக்குத் தலை சுற்றியது. அவன் இந்தச் சிவாவை முன்பின் பார்த்ததில்லை. ஆனால் அவர் அவனைப் பல நாள் பழகியது போல பெயர் சொல்லி அழைக்கிறார்...

''ரங்கா, உட்கார்,'' என்றான் ரமணி.

பயம் எப்போதோ போய் விட்டது. ரங்கன் உட்கார்ந்தான்.

''ரமணி, நீ சொன்னபடியெல்லாம் செய்துடறேன். அதுக்கு முன்னாடி ரங்கனுக்கு என் வாழ்த்தைத் தெரிவிச்சுடறேன்.''

''அதெல்லாம் ஒண்ணும் தேவை இல்லை, சிவா... இந்த லாட்டரி டிக்கெட் மெட்ராஸ்லே இருந்தா அதைப் பெண்டாட்டி, மாமனார் ரெண்டு பேருமாச் சேர்ந்து சுக்கு நூறாக் கிழிச்சுப் போட்டுடுவா. நான் சொன்னபடி, இவன் பேர்ல ஒரு அகௌண்ட்டை ஓபன் பண்ணு. நூத்து ஒண்ணு ரூபாயோட அகௌண்ட் ஆரம்பிக்கட்டும். அப்புறம், இந்த லாட்டரிச் சீட்டு மூலமா வர்ற பணத்தை அதிலே சேர்த்துடு.''

ரங்கன் தான் ஏன் இன்னும் மயங்கி விழவில்லை என்று தன்னையே கேட்டுக் கொண்டான்.


'சே, என்ன மனிதன் அவன்? சுத்தமான பாலில் விஷம் இருக்கிறது என்று ரமணியை எடை போட்டானே?'

''இதிலே ஒரு கையெழுத்துப் போடு, ரங்கன். அப்புறம் கீழே ரெண்டு 'X' மார்க் பென்சில்லே போட்டிருக்கே, அங்கே ரெண்டு கையெழுத்துப் போடு,'' என்றார் மானேஜர்.

ரங்கன் கை நடுங்காமல் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்கையில், ''ரமணி, நான் இன்னிக்கே டிக்கெட்டை ஜெய்ப்பூ

பம்பாய் வி. டி. ஸ்டேஷன் அருகேயுள்ள நியூ எக்ஸெல்ஸியர், நியூ எம்பயர் போன்ற தியேட்டர்களின் வாசலில் கிருஷ்ணன் ஒரு சிறு கூட்டத்தைக் கூட்டி, உயிரோடு சில பாம்புகளையும், தவளையையும் விழுங்கிக் காண்பிக்கிறார்! பிறகு அவற்றை உயிரோடு வெளியே கொணர்ந்தும் காண்பிக்கிறார். இதற்கு வேண்டிய தண்ணீர் பாம்புகளை, இங்கிருந்து சில மைல்கள் தூரத்திலுள்ள 'வாசி'யில் சென்று பிடித்து வருகிறார்! இந்தத் தொழிலில் ஒரு நாளைக்கு ரூ. 100 முதல் 200 வரை கிடைக்கிறது என்கிறார் கிருஷ்ணன்!

— 'ராஜீவி நரசிம்மன்'.



ருக்கு அனுப்பிடறேன். இன்கம்டாக்ஸ் நாப்பது சதவீதம் கழிப்பாங்க. பத்து சதவீதம் ஏஜெண்ட் கமிஷன்னு குறைப்பாங்க. ரங்கன் கணக்கிலே கிட்டத்தட்ட பதிமூணரை லட்சம் வரும். அது வந்தப்புறம் என்ன செய்யணும்னு சொல்லு. அப்படிச் செய்யறேன்!'' என்றார் மானேஜர்.

''பதிமூன்றரை லட்சம்தானா, ரமணி சார்?'' என்றான் ரங்கன்.

ரமணி பதில் கூறாமல் விறைத்துப் பார்த்தான். சிவா, ''ஆமாம் ரங்கா, வருமானவரி, ஏஜெண்ட் கமிஷன்னு நிறையப் போயிடும். ஆனா மீதி இருக்கே! அதுவே பெரியதொகையாச்சே!'' என்றார்.

''இந்தப் பணத்தை நான் சொல்றபடி தான் நீ முதலீடு செய்யணும், சிவா. உங்க பாங்க்லே பிக்சட் டெபாசிட்டுக்கு என்ன வட்டி கொடுப்பீங்க? பதினோரு சதவீதம். நேஷனல்சேவிங்ஸ், ஐ டி பி ஐ, யூனிட்ட்ரஸ்ட் இதிலெல்லாம் அதிக டிவிடெண்ட் கிடைக்கிறது. அதனாலே...''

''ஒரு நிமிஷம் ரமணி!'' என்ற சிவா, இந்த வருஷம் மார்ச் முப்பத்தொன்றுக்கு முன்னாடி பணம் வந்துடும். அதுக்குச் சொத்து வரி உண்டு. இதை மறந்துடாதே!'' என்றான்.

''நான் எதையும் மறக்கலேடா சிவா. இந்த ரங்கன் அஞ்சாறு வருஷமா மாசம் தவறாம அம்பது நூறுன்னு செலவழிச்சு லாட்டரி டிக்கெட் வாங்கிட்டு வர்றான். இப்ப அதிர்ஷ்ட தேவதை இவனைப் பார்த்துச் சிரிச்சிருக்கா. ஒவ்வொரு சிரிப்பிலும் ஒவ்வொரு அர்த்தம் இருக்கு, இல்லையா? இப்ப தெய்வம் சிரிக்கிற சிரிப்புக்கு என்ன அர்த்தம்னு எனக்கு முழுமையா விளங்கல்லேன்னாலும் அது விபரீதமா இவனைத் தாக்கிடுமோங்கற பயம் எனக்கு இருக்கு. இந்த ரங்கனுக்குப் பணத்து மேலே ஆசை இருக்கிற அளவுக்கு, அதை அனுபவிக்கத் திறமை கிடையாது. ஏன்னா இவனாலே, தன்னிச்சையா எதையும் சிந்திக்க முடியாது. அதனாலதான் நான் இங்கே வந்து இவனுக்காக பிளான் போட வேண்டியிருக்கு.''

''நீ என்ன சொல்றியோ, அப்படிச் செய்யறேன், ரமணி.''

''அப்ப குறிச்சு வைச்சுக்க.''

''சொல்லு.''

''சொத்து வரி எவ்வளவுன்னு தெரியாது. நீ அப்புறமாக் கணக்குப் போட்டு அதைத் தனியா வை. ஏப்ரல் மாசத்திலே யூனிட் ட்ரஸ்ட்டோட ஒரு திட்டம் அமுலுக்கு வரும். அதிலே மூணு லட்சம் போடலாம் மாசா மாசம் மூவாயிரம் இவன் செலவுக்கு வரும். அப்புறம் உன் பாங்க்லே ரெண்டு லட்சம் அஞ்சு வருஷத்துக்குப் போடு. வருஷா வருஷம் வர்ற வட்டியும் அதிலேயே இருந்து வளரட்டும். அஞ்சு வருஷத்துக்கு அப்புறம் மூணே முக்கால் லட்சத்துக்கும் அதிகமா வரும். அஞ்சு லட்சமாச்சா? பாக்கியை நேஷனல் சேவிங்சில் போடு.''

''ஜாயின்ட் அக்கௌண்ட் இல்லையே?'' என்று கேட்டார் சிவா.

''இல்லை. எல்லாம் இவன் பெயரில். விலாசம், ரங்கன், கேர் ஆஃப் ரமணி, என் வீட்டு விலாசம்தான் உனக்குத் தெரியுமே...?''

''ஓகே... என்ன சாப்பிடறீங்க?''

''எல்லோருக்கும் ஜில்லுன்னு கொண்டு வரச் சொல்லு.'' என்ற ரமணி, ரங்கன் பக்கம் திரும்பி, ''உன் பரிசுப் பணம் இங்கே பத்திரமா இருக்கும். டெபாசிட் ரசீது, அப்புறம் நேஷனல் சேவிங்ஸ் பத்திரம் எல்லாம் இந்த பாங்க் லாக்கர்லே இருக்கும். லாக்கர் அக்கௌண்ட் மட்டும் நம்ப ரெண்டு பேர் பேர்லேயும் இருக்கும். சாவி என்கிட்டதான்! பயப்படாதே, உன் கையெழுத்து இல்லாம யாராலும் பணத்தைத் தொட முடியாது!''

அங்கேயே அவன் கால்முன் சாஷ்டாங்கமாய் விழுந்து ரமணியின் கால்களைத் தன் கண்ணீரால் கழுவ வேண்டும் என்று தோன்றியது ரங்கனுக்கு. ஆனால் இடம் சரியாக இல்லை.

தன்னையும் மீறி, ''தனத்துக்கு?'' என்ற அவன், ''அவ கேட்டால் என்ன சொல்றது?'' என்றான்.

''பளாரென்று கன்னத்தில் அறை! பணம் வந்தால் கூடவே பலமும் வந்துடும்!'' என்றான் ரமணி.

(தொடரும்)

விரிசல்

நண்பர் வீட்டில் விருந்து முடிந்து, நாராயணன் வீடு வந்து சேர்ந்தபோது இரவு மணி பத்து ஆகிவிட்டிருந்தது. விசாலத்தை எழுப்ப மனம் இன்றித் தம்மிடமிருந்த மாற்றுச் சாவியால் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனார். ஒரு தம்ளர் தண்ணீரைக் குடித்துவிட்டு, படுக்கை அறைக்குள் சப்தம் எழுப்பாமல் நுழைந்தார். மங்கலான ஜீரோ வாட் வெளிச்சத்தில் விசாலம் படுத்திருந்த கோலம் வழக்கத்துக்கு விரோதமானதாக இருந்தது. மல்லாந்து படுத்துக் கொண்டு, இரு கைகளையும் தலைக்கு மேல் அகலமாக விரித்து வைத்துக் கொண்டிருந்தாள்.

''விசாலம்!'' மெல்லிய குரலில் அழைத்தபடி விளக்கைப் போட்டார்.

''ஓ! நீங்க வந்தாச்சா?'' என்று பொட்டுத் தூக்கக் கலக்கம் கூடத் தென்படாமல் சொன்ன விசாலத்தை வெளிச்சத்தில் பார்த்ததும் நாராயணனுக்கு மேலும் அதிர்ச்சி.

கை விரல்களில் தவில்காரர் அணிவது போல் பச்சைத் தொப்பிகள். உள்ளங்கைகளிலும் மருதாணி வட்டங்கள். இது போதாதென்று கால்களில் வேறு மருதாணி இட்டுக் கொண்டு... இதுஎன்ன கணுக்காலில்பளபளவென்று...! புத்தம்புது வெள்ளிக் கொலுசு!

நாராயணனுக்குச் சிரிப்பு வந்தது. ''இதென்ன மருதாணி, கொலுசு...!'' என்று சிரிப்பை அடக்கிக் கொண்டு 'சீரியஸாக'க் கேட்டார்.

''நாளை மறுநாள் என் பிள்ளைக்குக் கல்யாணம் இல்லையா? கல்யாணத்துக்கு மங்களகரமா மருதாணி இட்டுக்கணும். அதுதான் சாஸ்திரம்'' என்றாள் விசாலம்.

நாராயணனுக்கு அவளுடைய வயசுக்கு மீறிய ஆசை பைத்தியக்காரத்தனமாகப் பட்டது. நாளை குழந்தைகள் அவளைப் பார்த்தால் எப்படியெல்லாம் கேலி செய்வார்கள் என்று நினைத்தால் வேதனையாக இருந்தது. விசாலமோ 'சஹானா' ராகத்தை முணுமுணுத்தபடி விட்டத்தைப் பார்த்துப் படுத்திருந்தாள்.

தம்மையும் அறியாமல் ''சபாஷ்!'' போட்டார் நாராயணன்.

''என்னா! பாட்டு நன்னாயிருக்கா?''

''உன்னையே நீ வருத்திண்டு, உடம்பு, கை, கால்களை அசைக்க முடியாத நிலையிலும் நன்னாவே பாடறே விசாலம். அதுக்குத்தான் சபாஷ்.''

''நான் பாடினது ஸஹானாதான்னு கண்டுபிடிச்சேளே, அதுக்கு உங்களுக்குத்தான் சபாஷ் போடணும்.''

''ஆமாம், இப்ப என்ன; அர்த்த ராத்திரியில் ஸஹானா சாதகம்...?''

''நான் ஒரு பாட்டு போட்டிருக்கேன்னா... நம்ம பிள்ளை கல்யாணத்துல பாட...''

''ஐயோ! எதுக்குப் புதுப்பாட்டெல்லாம்? நீதான் எனக்கு நினைவு தெரிஞ்ச நாள்லேருந்து 'பாலாலே காலலம்பி...'ன்னு கிறல் விழுந்த கிராமபோன் பிளேட் மாதிரி பாடுவியே!''

''அது சாதாரண கல்யாணத்துக்கு. இது ஸ்பெஷல் கல்யாணம் இல்லையா? பாலாஜி எனக்கு ஸ்பெஷல் பிள்ளை இல்லையா?'' என்று மீண்டும் ஸஹானாவை இழுக்க ஆரம்பித்தாள் விசாலம்.

''ஆமாமாம்! இப்ப நீ தூங்கு!'' என்று சொல்லிவிட்டு மறுபுறம் திரும்பிப் படுத்துத் தூங்கிவிட்டார் நாராயணன்.

விசாலம் ரொம்ப நேரம் தூங்காமல் வார்த்தைகளைப் பார்த்துப் பார்த்துச் சேர்த்துக் கவிதை இயற்றிக் கொண்டிருந்தாள்.

விசாலம் கல்யாணம் ஆகி வந்தபொழுது சின்னப் பெண். பெரிய குடும்பத்தில் கடைசி மருமகள். மருண்டு மருண்டு நிற்பாள். நாராயணனின் அண்ணா குழந்தைகள் விசாலத்துக்கு மூன்று நான்கு வயதே சிறியவர்கள். அதனால் அந்தக் குழந்தைகளின் தோழமை விசாலத்துக்குப் புக்ககத்தில் நிறைய தெம்பைக் கொடுத்தது. அவர்களும் 'சித்தி சித்தி' என்று இவளிடம் ஒட்டிக் கொண்டார்கள்.

பெரியவர்களெல்லாம் தூங்கும் போது, விசாலம் வந்து மச்சினர் பெண்ணுடன் ஸ்கிப்பிங் ஆடுவாள்; மச்சினர் பிள்ளையுடன் காரம் ஆடுவாள்.

''விசாலம்! நீ கல்யாணம் ஆன பொண்ணு! குழந்தைகளுக்குச் சமமாகத் 'தொம் தொம்'முன்னு குதிச்சு விளையாடாதே! அம்மாவுக்குப் பிடிக்காது'' என்று ஓர்ப்படி கிசுகிசுப்பாள். விசாலத்துக்குச் சப்தநாடியும் ஒடுங்கிப் போகும். ஆனால் சீக்கிரமே அந்தக் கண்டிப்பு மனசிலிருந்து விலகி விளையாட்டு ஞாபகம் வந்துவிடும்.

ஒரு நாள் யாருக்கோ உடம்பு சரியில்லை. ''விசாலம்! முன்னறையிலிருந்து தர்மாமீட்டர் கொண்டு வா!'' என்று மாமியார் அவளை அனுப்பினார். முன்னறையில் மச்சினர் குழந்தைகள் இருவரும் 'செஸ்' ஆடிக் கொண்டிருந்தார்கள். விசாலத்துக்கு எல்லாவற்றிலும் ஆர்வம் அதிகம். தர்மாமீட்டர் எடுக்கப் போனவள் ஆட்டத்தில் லயித்து விட்டாள். மச்சினர் பெண் செல்லு ஒரு தவறான 'மூவ்' செய்ததும் பதறிப்

ராமப்ரியா

போய், தர்மாமீட்டர் இருப்பதை மறந்து, கையை ஓர் உதறு உதறினாள் விசாலம். தர்மாமீட்டர் விழுந்து நொறுங்கிவிட்டது!

விசாலத்துக்குப் பயத்தில் ஜுரம் வரும் போல் ஆகிவிட்டது. ''ஐயையோ! அம்மா திட்டுவார்களே! நான் என்ன செய்வேன்?'' என்று அழுதுவிட்டாள். அவளுக்கு மூன்றே வயது இளையவனான பாலாஜி, ஆட்டத்தைப் பாதியில் விட்டுவிட்டு எழுந்தான். கீழே விழுந்த தர்மாமீட்டரின் ஒரு துண்டைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு விசாலத்தையும் கரகரவென்று இழுத்துக் கொண்டு தன் பாட்டியிடம் போனான்.


''பாட்டி! இந்தத் தர்மாமீட்டர் உடைஞ்சது சித்தியாலதான்! செல்லுவும் நானும் செஸ் விளையாடிண்டு இருந்தோமா...? அப்ப சித்தி வந்து செல்லுவுக்கு 'சப்போர்ட்' பண்ணினா. எனக்கு ரொம்பக் கோபம் வந்து, சித்தி கையிலேயே ஒரு போடு போட்டேனா, தர்மாமீட்டர் கீழே விழுந்து உடைஞ்சுடுத்து.'' என்று கம்பீரமாகப் பொய் சொல்லி விசாலத்தைக் காப்பாற்றி விட்டான்.

''குழந்தைகள் விளையாடற இடத்துல உனக்கென்ன வேலை...!'' என்று மாமியார் இலேசாக அதட்ட, ''அவளும் குழந்தை தானே, கிழவியில்லையே!'' என்று மச்சினர் பரிந்து கொண்டு பேசி, அந்த தர்மாமீட்டர் உடைந்து போனது மறக்கப்பட்டது.

இதைப் போல் எத்தனையோ சம்பவங்கள் அந்தக் குழந்தைகளிடையே பந்தத்தை வளர்த்து வலுப்படுத்தின. அவரவர்களும் வளர்ந்து, தனித்தனியே குடும்பம் நடத்த ஆரம்பித்த பின்னரும், ஏதாவது விசேஷம், கல்யாணம், கார்த்திகை என்றால் ஒருவர் பாக்கி இல்லாமல் ஒன்று சேர்வார்கள். பழைய கதைகளைப் பேசிப் பேசி மகிழ்வார்கள். அன்னியோன்னியம், பற்று, பாசம் வளர்ந்தே வந்தது. சகோதரர்களின் குழந்தைகளிடையே உள்ள ஒற்றுமையைப் பார்த்துத் திருஷ்டி போட்டு விடுவார்களோ என்று விசாலத்தின் பேதை உள்ளம் பயப்படுவது கூட உண்டு.

பாலாஜிக்கு அறுபதாம் கல்யாணம்! தான் பார்த்து வளர்ந்த பிள்ளை; வளர்த்த பிள்ளை. விசாலம் மட்டற்ற மகிழ்ச்சியில் பூரித்துப் போயிருந்தாள். தான் பெற்ற பிள்ளைக்கு இந்த விழா வர இன்னும் இருபது ஆண்டுகள் ஆகும். அதுவரை தான் இருப்பது நிச்சயமில்லை. எனவே தன் பிள்ளைக்குச் செய்ய ஆசைப்பட்டதையெல்லாம் பாலாஜிக்குச் செய்து பார்க்கத் துடித்தாள்.





நரகர் (பெண்ணின் தந்தையிடம்): மாப்பிள்ளைப் பையனுக்கு எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது. வேலை உண்டு லஞ்சம் உண்டுன்னு இருப்பார்!

— எஸ். முகம்மது யூசுப்.

முதலில் மருதாணி இட்டுக்கொண்டு, காலுக்குப் புது கொலுசு வாங்கிப் போட்டுக் கொண்டு, தன்னை அலங்கரித்துக் கொண்டாள். ஸஹானாவில் பாலாஜிக்கென்றே பாட்டு இயற்றினாள்.

மறுநாள் காலை காப்பியுடன் வந்த விசாலத்தின் கைகளைப் பார்த்தார், நாராயணன். செக்கச் சிவக்க மருதோன்றி பற்றிக் கொண்டிருந்தது. ''எப்படி இருக்கிறது?'' — கண்களை விரித்துக் கொண்டு கேட்டாள்.

''நன்னாத்தான் இருக்கு — ஆனால், நீ ஏன் இப்படி தேவைக்கதிகமா அலட்டிக்கறேன்னுதான் புரியலை...''

''பாலாஜி நம்ம பிள்ளை! நாம் பெற்ற குழந்தைகள் எங்கெங்கேயோ இருக்கும் போது அவன்தானே பிள்ளைக்குப் பிள்ளையாய் நம்மைப் பார்த்துக் கொள்கிறான்? அவன் கல்யாணத்தின்போது நான் ரொம்பச் சின்னவளாக இருந்தேன். பெரியவர்கள் சொல்வதைச் செய்யும் எடுபிடியாக இருந்தேன். இப்போது நான்தான் இருப்பவர்களிலேயே பெரியவள். அவன் அறுபதாம் கல்யாணத்திலே சிறியவர்களை வேலை வாங்கி என் இஷ்டப்படி செய்யப் போகிறேன். ஒரு கவிதைகூட எழுதி இருக்கிறேன். இப்போது சொல்ல மாட்டேன். அன்றைக்கு எல்லாரும் மூக்கின் மேல் விரலை வைக்கப் போகிறார்கள்!'' என்றாள் மிதமிஞ்சிய சந்தோஷத்தில்!

பாலாஜியின் அறுபதாம் கல்யாண நாள். விசாலம் எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுக் கொண்டு ஓடி ஓடிச் செய்தாள். லாலி பாடினாள். சீதா கல்யாணம் பாடினாள். கன்னூஞ்சல் பாடினாள். நாதஸ்வரம் வாசிக்கிறவர்களுக்கும் குஷி பிறந்து விட்டது. ஊஞ்சல் பாட்டை விசாலம் பாடி நிறுத்தியவுடன் அதே அடியை அவள் மாதிரியே திருப்பி நாதஸ்வரத்தில் வாசிக்க ஒரே அமர்க்களம். ஆனந்தம்.

மாங்கல்யதாரணம் முடிந்தது. கூட்டத்தினரைப் பார்த்துச் சற்று அமைதியாக இருக்கும்படி கையை அமர்த்தினான். மந்திரத்தில் கட்டுப்பட்ட மாதிரி அனைவரும் அமைதியானார்கள்.

விசாலம் ஸஹானாவில் கணீரென்று, தான் இயற்றிய பாட்டைப் பாடினாள். ஆதி நாளில் தன்னோடு விளையாடியவன் இன்று பெரிய அந்தஸ்துடன் இருப்பது வரை கோவையாகச் சொல்லிப் பாடினாள். ஒரே கரகோஷம்.

விசாலத்துக்குக் கல்யாண அலுப்பு தீர இரண்டு நாட்களாயின. போனில் பாலாஜியைக் கூப்பிட்டாள். ''எப்படி கல்யாணமெல்லாம்!'' என்று மகிழ்ச்சி ததும்பக் கேட்டாள். ''நீ முன்னே நின்று நடத்தும் போது எப்படி இருக்க முடியும்?'' என்றான் பாலாஜி. விசாலத்துக்கு ஜில்லென்று உடம்பெல்லாம் குதூகலம் பொங்கி வழிந்தது.

''நான் என்னத்தைச் செய்து விட்டேன்! உன் குழந்தைகள் உன் கூடப் பிறந்தவர்கள் ஜமாய்த்தார்கள். நான் பார்த்து மகிழ்ந்து ஏதோ ஒரு கவிதை பாடினேன். அது உனக்குப் பிடித்ததோ?'' என்றாள் மிக ஆவலுடன்.

''கவிதையா சித்தி? எல்லாரும் நன்றாக இருந்ததென்றுதான் சொன்னார்கள். யார் சித்தி எழுதிக் கொடுத்தா?'' என்றான் குரலில் யாதொரு சலனமும் இல்லாமல்.

விசாலத்துக்கு இதயம் ஒரு வினாடி நின்று இயங்கியது. ''என்ன பாலாஜி! இப்படி ஒரு சந்தேகமா? நான்தான் எழுதினேன்...''

''என் சித்தியின் அன்பு, பாசம், சாமர்த்தியம் எல்லாம் தெரியும். ஆனால் நீ கவிதை எழுதும் திறமை படைத்தவள் என்பதை நான் நம்பத் தயாராக இல்லை,'' என்றான். குரலில் சூடு வைக்க ஆரம்பித்தது.

''பாலாஜி! நீ என்னை ரொம்ப இன்ஸல்ட் பண்ணிவிட்டாய். கையில் மருதாணியுடன் ராத்திரி பூரா யோசிச்சு யோசிச்சு வார்த்தைகளைக் கோத்துக் கோத்துச் செய்ய எத்தனை சிரமப்பட்டிருப்பேன் தெரியுமா? நம்ம சின்ன வயசிலே அடித்த கொட்டமெல்லாம் எழுதியிருக்கிறேனே? என்னைத் தவிர வேறு யாருக்குத் தெரியும், அதெல்லாம்?'' விசாலத்தின் குரல் சுருதி ஏறியது.

பாலாஜிக்கும் சூடேறியது.


''இல்லை, இல்லை! உனக்குக் கவிதை எழுதத் தகுதியும் திறமையும் போதவே போதாது! உன்னை மதிக்கிறேன். உன்னைத் தாயாக, சகோதரியாக நேசிக்கிறேன். ஆனால் இன்னமும் அந்தக் கவிதை நீ எழுதியது என்பதை நம்ப மாட்டேன்!'' என்றான் ஒரே அடாவடித்தனமாக.

விசாலத்துக்கு இத்தனை பாடுபட்டதும் ஒரு வினாடியில் சுண்ணாம்பு தெளித்த மாதிரி ஆகிவிட்டது. இத்தனை வருடம் தான் குடும்பம் ஒன்றாக இருக்கப் பாடுபட்டதெல்லாம் வீண் என்று தோன்றியது. வெறுப்புடன் போனை வைத்துவிட்டுப் படுக்கையில் படுத்துக் கொண்டாள். கடைக்கண்ணில் வழிந்த நீர் கன்னம் வழியே கீழிறங்கித் தலையணையை நனைத்தது.

ஆரோக்கிய ரகசியம்: 11

வி. என். குமாரசாமி.

பஸ்கிமோத்தானாசனம்



* மல்லாந்து படுத்த நிலையிலிருந்து எழுந்து அமர்கின்ற முதல் நிலை.

தொழிலகத்தில் ஓர் இயந்திரத்தை வாங்குகிறோம் என்றால் அதன் ஒவ்வொரு சிறு பாகமும் அதற்கு அவசியம் என்பதை உணர்ந்திருக்கிறோம். அந்த இயந்திரத்தைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்கு ஒரு முறை நிறுத்தி, துடைத்து, எண்ணெய் விட்டுப் பராமரிக்கிறோம். அதை ஜாக்கிரதையாகப் பாதுகாத்தால் பத்து வருடங்கள் வேலை செய்யக் கூடிய இயந்திரத்தை இன்னும் அதிக காலத்துக்கு வேலை வாங்கலாம் என்பதை அறிந்திருக்கிறோம்.

இப்படி இயந்திரத்தினிடம் எடுத்துக் கொள்ளும் அக்கறையைக் கூட மனிதன் தன் சரீரத்தினிடம் காட்டுவதில்லை என்பது தான் வருந்தத்தக்கது. சோப்புப் போட்டு மணக்க மணக்கக் குளித்து, அதற்கும் மேல் பவுடர் அள்ளித் தெளித்து, அலங்கார உடை அணிந்து, செண்டு பூசிக் கொண்டு புறப்படுவது தேகத்தைப் பாதுகாப்பதோ, பராமரிப்பதோ ஆகாது. வெளி உடலை மட்டும் சுத்தப்படுத்தி என்ன பயன்? உள் அவயவங்களின் சுத்தத்தை ஒழுங்கான தேகப் பயிற்சிகளினாலும் நல்ல ஆகாரப் பழக்க வழக்கங்களினாலும்தான் ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

எல்லா அவயவங்களையும் உபயோகப் படுத்த வேண்டும். சோம்பியிருந்து துருப் பிடிக்க அனுமதிக்கக் கூடாது. ஆனால் நடைமுறை வாழ்க்கையில் இது சாத்தியமாவதில்லை. சிலர் கால்களை மட்டுமே அதிகம் உபயோகிக்கிறார்கள். சிலர் கைகளால் மட்டுமே வேலை செய்கிறார்கள். சிலருக்கு மூளை மட்டுமே அதிக வேலை செய்ய வேண்டியதாகிறது. உபயோகப்படும் அவயவம் உறுதி அடைந்து மற்றவை உறுதி குறையும் வாய்ப்பு உண்டு. இக் குறையை நீக்கத் தான் ஆசனங்கள் பெரிதும் உதவுகின்றன. தினசரி வாழ்க்கையில் உபயோகப்படுத்தாத அவயவங்களுக்கு யோகாசனத்தின் மூலம் பயிற்சி அளித்து ஆரோக்கியமாய் வைத்திருக்கலாம்.


உடலில் உள்ள முக்கியமான உறுப்புக்களில் ஒன்று சிறுநீரகம். ரத்தத்திலுள்ள வேண்டாத அசுத்தங்களை வடிகட்டி, நீருடன் கரைந்த நிலையில் வெளியேற்றுவது சிறுநீரகத்தின் வேலை. அது சரியாக இயங்கவில்லையானால் அசுத்தங்களை வடிகட்டும் வேலை சிறப்பாக நடக்காது. அசுத்தங்கள் ரத்தத்திலிருந்து நீக்கப்படவில்லையானால் என்ன நேரும்? இருதய பலவீனம் முதற்கொண்டு தலைவலி — இடுப்பு வலி வரை என்ன வேனுமானாலும் நேரிடலாம். உயிருக்கே ஆபத்து வரவும் கூடும். அம்மாதிரி தருணங்களில் சில காலம் செயற்கைச் சிறுநீரகத்துடன் ரத்த நாளத்தை இணைத்து "டயாலிஸிஸ்" முறையில் ரத்தத்தைச் சுத்தப்படுத்துகிறார்கள். இதுவும் போதாமல் கடைசியில் மாற்றுச் சிறுநீரக ஆபரேஷன் செய்கிறார்கள். இதற்கெல்லாம் ஏகப்பட்ட செலவு ஆவது மட்டுமல்ல, சிறுநீரகம் ஒன்றைத் தானம் கொடுக்க, அல்லது விற்க ஆள் பிடிக்க வேண்டும். அந்தச் சிறுநீரகத்தை இந்த உடல் ஏற்றுக் கொள்ள

* இரண்டாம் நிலை நோக்கி... உடலை முன்னுக்குச் சரித்து, கரங்களை முன் நீட்டி) கால் விரல்களைத் தொட முயற்சி செய்தல்.



* முழுமை பெற்ற மூன்றாம் நிலை.





○○ உலகில் மூன்றில் ஒரு பாகம் தீப் பெட்டிகள் சிவகாசியில் தயாராகின்றன!
—விருதை ராஜா.

வேண்டும். நிராகரித்து விடாமலிருக்க மருந்து சாப்பிட வேண்டும். ஊசி போட்டுக் கொள்ள வேண்டும்.

இந்தக் கஷ்டமெல்லாம் எதற்கு? சற்று நம்பிக்கையுடனும் திடமனத்துடனும் யோகாசனம் பயின்று வந்தால் சிறுநீரகம் தொடர்பான வியாதியே வராது. அதிலும் பஸ்கிமோத்தானாசனம் இருக்கிறதே, அது, சிறுநீரகத்தைச் சிக்கல் ஏதும் நெருங்கவிடாமல் பாதுகாக்கும் காவல் வீரன்.

விரிப்பில் மல்லாந்து படுக்கவும். இரண்டு கால்களையும் சேர்த்தாற்போல் ஒட்ட வைத்து நீட்டிக் கொள்ளவும். இரண்டு கைகளையும் தலைக்கு மேல் நீட்டி, காதுகளை ஒட்டினாற்போல் வைத்துக் கொள்ளவும்: மூச்சைப் பிடித்து எழுந்து உட்காரவும். அப்படி எழும் போதும் கைகளைக் காதுகளை ஒட்டினாற் போலவே வைத்திருக்க வேண்டும். பிறகு மூச்சை விட்டுக் கொண்டே முன்னுக்குக் குனிந்து கால் கட்டை விரலை, கரங்களின் ஆள் காட்டி விரல் — நடுவிரல் இவை இரண்டினாலும் கொக்கி போட்டு மடக்கிப் பிடித்துக் கொள்ளவும். கைகள் காதுகளை விட்டு விலகாமல் பார்த்துக் கொள்ளவும். பிறகு கைகளை மடக்கி, முகம், முழங்கால்களின் சந்து வரை எட்டுமாறு குனியவும். மடக்கின முழங்கை தரையில் ஒட்ட வேண்டும். இந்நிலையில் 2 — 3 வினாடிகள் இருந்துவிட்டு, கால் கட்டை விரலை விட்டுக் கரங்களை அகற்றி நிமிர்ந்து, காதுகளுடன் ஒட்டியவாறே கைகளை உயர்த்திய நிலையில் உட்காரவும். பிறகு மெதுவாய்ப் பின்புறம் சாய்ந்து படுக்கவும். இப்போதும் கைகள் காதுகளை ஒட்டியே இருக்க வேண்டும். இப்படிச் செய்தால் ஒரு முழு பஸ்கிமோத்தானாசனம் ஆகும். இம்மாதிரி இடையில் களைப்பாறாமல் தொடர்ந்து மூன்றிலிருந்து ஆறு தடவை வரை செய்யலாம்.

இந்த ஆசனத்தை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம். 1. கைகளைப் பின்னால் நீட்டிப் படுத்த நிலையிலிருந்து எழுந்து உட்காருவது. 2. கைகளை முன் நீட்டிக் கால் விரல்களைத் தொடுவது, பிறகு கொக்கி போட்டது போல் பிடிப்பது; 3. தலையைக் குனிந்து முகத்தைக் கால் முழங்கால்களுடன் ஒட்டுவது. எடுத்த எடுப்பிலேயே எல்லாப் பாகங்களையும் சரியாகச் செய்துவிட முடியாது. ஒவ்வொரு பாகமாகச் செய்து படிப்படியாக முன்னேறலாம்.

முதல் பாகம் — படுத்த நிலையிலிருந்து எழுந்து உட்காருவது: இதை மட்டும் தினம் ஆறு தடவையாகச் சில நாட்கள் செய்து பிறகு இரண்டாம் பாகம் செய்ய ஆரம்பிக்கலாம். இந்த முதல் பாகம் செய்யவே பலருக்குச் சரியாக வராது. கைகளைக் காதுகளுடன் ஒட்டியவாறு நீட்டியபடியே எழுந்து உட்கார முடியாது. கையை ஊன்றியே எழுந்திருப்பார்கள். அல்லது எழும் போது கையை வீசித்தான் எழுந்திருக்கும்படி இருக்கும். அப்போது கைகள் காதுகளை விட்டு விலகிவிடும். சிலருக்கு இரண்டு கால்களும் மேலே தூக்கிக் கொள்ளும். இப்படிப்பட்ட ஆரம்பப் பிழைகளைப் படிப்படியாக வென்று, கைகள் காதுகளை விட்டு விலகாமலும் கால் தூக்கிக் கொள்ளாமலும் எழப் பழக வேண்டும். உதவிக்கு யாரையேனும் கால்களைப் பிடித்துக் கொள்ளச் சொல்லலாம். சில நாட்கள் முயற்சியில் கால் தூக்காமலே எழ முடியும்.

கால்கட்டை விரலைப் பிடிப்பதும் சுலபமல்ல. "இன்றே செய்து விடுகிறேன்" என்று முரட்டுத்தனமாக முயற்சி செய்யக் கூடாது. மெதுவாக நாளாவட்டத்தில் முன்னேறுவதே மேல். அப்போது வலி ஏதும் ஏற்படாது. நாளடைவில் முதுகெலும்பு கட்டுத் தளர்ந்து, வளைந்து கொடுக்கும்.

சிலருக்கு வயிறு பருத்திருப்பதாலும் காலைத் தொட வராது. அவர்கள் சலபாசனம், தனுராசனம் ஆகியவற்றை ஆகார நியமத்துடன் செய்து வந்தால் பிறகு பஸ்கிமோத்தானாசனம் பழக வரும்.

சிலருக்குக் கால் கட்டை விரலைப் பிடிக்கும் போது முழங்கால் தூக்கிவிடும். பரவாயில்லை. "அடுத்த தடவை சரியாகச் செய்கிறேன்" என்று உறுதியோடு முயன்று, சிறிது சிறிதாக முன்னேறவும். கால் அல்லது தொடை நரம்பு இழுத்துக் கொண்டு வலித்தாலும் "இப்போதைக்குப் போதும்" என்று நிறுத்தி விடவும். மறுபடி மறுநாள் முயற்சியைத் தொடரவும்.

மூன்றாவது பாகமாகிய முகத்தை முழங்கால்களுடன் ஒட்டுவது, முதல் இரு நிலைகளை விடவும் கஷ்டமானதுதான். ஆனால் விடாப்பிடியாக முயன்றால் முடியாத காரியம் இல்லை. ஒருநாள் இல்லாவிட்டால் ஒரு நாள் உடல் நம் வசப்பட்டே தீரும்!

பஸ்கிமோத்தானாசனம் சிறுநீரகங்களுக்கு வலிமையூட்டும் என்றேன். வேறு பலன்களும் உண்டு. அவை பற்றி விரிவாக அடுத்த இதழில் கூறுகிறேன்.

கருவுற்ற பெண்கள் புதிதாக இதைப் பழகக் கூடாது. வழக்கமாகச் செய்பவர் இரு மாதங்கள் வரை செய்யலாம்.

(தொடரும்)

படம்: **உத்ரா.**

படத்தில்: **சதீந்திரன்.**

கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை—

ஏழை மாணவர்களுக்கு உதவி: ரூ 27,000/—

அறிவிற் சிறந்த, ஆனால் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவ மாணவியருக்குச் சென்ற மூன்று ஆண்டுகளாகக் கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை உதவி வருகிறது.

சென்ற ஆண்டை விட இந்தக் கல்வி ஆண்டுக்கு (90—91) ரூ. 2000/— அதிகரித்து மொத்தம் ரூ. 27,000/— உதவித் தொகை வழங்க அறங்காவலர்கள் தீர்மானித்துள்ளனர். இத்தொகை பின்வருமாறு விநியோகிக்கப்படும்.

பட்டமேற்படிப்பை அல்லது ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கிற மாணவர்கள் இருவருக்குத் தலா ரூ. 1500/— வீதம் ரூ. 3000/—.

இசை அல்லது நாட்டியம் பயிலும் இருவருக்குத் தலா ரூ. 1000/— வீதம் ரூ. 2000/—.



பன்னிரண்டு கல்லூரி மாணவர்களுக்குத் தலா ரூ. 1000/— வீதம் ரூ. 12,000/—.

இருபது பள்ளி மாணவர்களுக்குத் தலா ரூ. 500/— வீதம் ரூ. 10,000/—.

இவற்றுள் அமரர் கல்கி படித்த மூன்று பள்ளிக்கூடங்களில் மூன்று மாணவர்களுக்கு மூன்று உதவித் தொகைகள் ஒதுக்கப்படுகின்றன. அவையாவன: தேசியக் கல்லூரி உயர்நிலைப் பள்ளி, திருச்சி; ஈ. ஆர். உயர்நிலைப் பள்ளி, திருச்சி; நகராட்சி மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை.

இவை போக மீதமுள்ள உதவித் தொகைகளைப் பெற, தமிழகமெங்கும் உள்ள கல்வி நிலையங்களில் படிக்கும் மாணவர்களிடமிருந்து அவர்கள் தங்கள் கைப்பட எழுதிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

உதவித் தொகைகளைப் பெற மாணவ மாணவிகள் படிப்பில் சிறந்தவர்களாகவும் அதே சமயம் கல்வியைப் பெற்றோர் உதவியுடன் மட்டும் தொடர முடியாத நிலையில் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாகவும் இருக்க வேண்டும். இந்த இரண்டையும் உறுதிப்படுத்தக் கல்லூரி அல்லது பள்ளி முதல்வரின் சான்றிதழுடன் விண்ணப்பிக்க வேண்டும். சென்ற கல்வி ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் நகலை முதல்வரின் கையொப்பத்துடன் இணைப்பது அவசியம்.

சென்ற ஆண்டு விண்ணப்பித்தவர்கள் கல்வியைத் தொடர மீண்டும் விண்ணப்பிப்பதில் தடையில்லை. ஆனால் தகுதியின் அடிப்படையில்தான் அவர்களும் பிறருடன் போட்டியிட நேரும்.

வருகின்ற விண்ணப்பங்களை ஆராய்ந்து உதவித் தொகையைப் பெறத் தகுதியுள்ள மாணவர்களை அறங்காவலர்கள் தேர்ந்தெடுப்பார்கள். அறங்காவலர்களின் முடிவே இறுதியானது.

விண்ணப்பங்கள் வந்துசேரக் கடைசித் தேதி: **ஜூலை, 31, 1990.**

கி. ராஜேந்திரன்,
(ஆசிரியர், கல்கி)
நிர்வாக அறங்காவலர்.

விலாசம்:

நிர்வாக அறங்காவலர்,
'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை,
நெ. 1, ஐந்தாவது தெரு,
ஏரி வட்டம், நுங்கம்பாக்கம்,
சென்னை — 600 034.

உலகம் உய்ய உயர்ந்த கோபுரம்

எறும்புப் புற்றிலிருந்து சாரி சாரியாக எறும்புகள் ஊர்ந்து செல்கின்றன... பக்தி சிரத்தையோடு அந்த எறும்பு வரிசையைப் பின் தொடர்ந்து, ஒரு காத தூரம் நடக்கிறார்கள் பேரரசனும் அவனது பட்டத்தரசியும். எறும்புகள் ஒரு சிவலிங்கத்தையும் நந்தியையும் வலம் வருவதைக் கண்டு அதிசயிக்கிறார்கள். சித்ரா நதிக்கரையில், செண்பக மலர்கள் அடர்ந்த அந்த இடத்திலேயே சிவாலயம் அமைத்து, நகர நிர்மாணம் செய்வதென்று தீர்மானிக்கிறார்கள்.

— இதுவே காசி கண்ட அரிகேசரி பராக்கிரம பாண்டியன் தென்காசி திருக்கோயில் கட்ட ஆரம்பித்த வரலாறு. அவன் வாழ்ந்த காலம் பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கம்.

பராக்கிரம பாண்டியன் வடக்கே காசி வரை சென்று வந்தான்; அவனது மகன் பொன்னன் பெருமாள், தந்தை பெற்ற புண்ணியத்தைத் தான் தினம் தினம் பெற வேண்டும் என்ற ஆவலில் தென்காசி திருக்கோயிலைக் கட்டினான் என்ற வரலாறும் விளங்குகிறது.

ஒன்பது நிலைகள் கொண்ட ராஜகோபுரம் பிற்பாடு அமைக்கப்பட்டது. அதைக் கட்டி முடிக்க ஐம்பது ஆண்டுகள் ஆயினவாம்! விண்முட்ட நின்ற கோயிலைக் காண பராக்கிரம பாண்டியன் உயிரோடு இல்லை. அப்போது பாண்டிய நாட்டரசனாய் விளங்கியவன் ஜடிலவர்ம பாண்டியன்.


பராக்கிரம பாண்டியனின் மறைவுக்குப் பின்னர் பாடப்பட்ட தமிழ்ப் பாடல் ஒன்று அவனது பக்திச் சிறப்புக்குச் சான்றாக விளங்குகிறது:


கோதற்ற பக்தி அறுபத்து மூவர் தம்
கூட்டத்திலோ



* முத்தையா ஸ்தபதி

* 178 அடி உயர புதிய ராஜ கோபுரம்.





* கல்சாரத்துக்கு மேல் நின்ற உடைந்த கோபுரத்தை அகற்றிய பிறகு...

தீதற்ற வெள்ளிச் சிலம்பகத்தோ,
செம்பொன்னம்பலத்தோ
வேதத்திலோ சிவ லோகத்திலோ
விசுவநாதன் இரு
பாதத்திலோ சென்று புக்கான் பராக்கிரம
பாண்டியனே.

பாண்டிய மன்னர்களின் வல்லமை இந்திரனுக்குத் திகிலூட்டியது. சிவனருள் பெற்றவர்கள் என்பதாலேயே ஒரு பொறாமை! தன்னுடைய விண்ணுலக எல்லைக்குள் துருத்திக் கொண்டு நின்ற தென்காசி கோயில் கோபுரத்தைக் கண்டு ஆத்திரப்பட்டுத் தன் வஜ்ராயுதத்தால் அதை இரண்டாகப் பிளந்து விட்டான்! — சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தீக் கோளால் தாக்குண்டு சிதைந்து போன கோபுரத்தைப் பற்றி விளங்கும் பாரம்பரியக் கதை இது.

சிற்பச் சிறப்பும் பக்திச் சிறப்பும் மிக்க தென்காசி கோயிலுக்குத் திருஷ்டிப் பரிகாரம் போல் ஏற்பட்ட இந்தப் பின்னம், 'தென்காசி' என்று சொன்னாலே பிளவு பட்ட மொட்டை கோபுரம் நினைவு வரும் அளவுக்கு நிலைத்துப் போய் விட்டது. கோயில் பிராகாரத்தில், கரும்பு வில்லும் மலரம்பும் ஏந்திப் புன்னகையோடு குழலூதும் மதனகோபாலனையும், ஊர்த்தவ தாண்டவரையும் அவரோடு போட்டியாக ஆடும் காளி தேவியையும் கண்டு, ரசித்து, வணங்கி வந்தவர்கள், மொட்டைக் கோபுரத்தையும் கோயிலின் ஓர் அம்சமாகவே ஏற்றுக் கொண்டு, பராக்கிரம பாண்டியனைப் பக்தியும், மரியாதையும் கலந்த பரிவுணர்வுடன் எண்ணிப் பார்த்து விட்டுச் சென்றார்கள்.

* தீக்கோளால் பிளவுபட்ட கோபுரம்



இந்த ராஜகோபுரத்தைச் சீர் செய்ய 1963 இல் பி.டி.ராஜன் தலைமையில் திருப்பணிக் குழு அமைக்கப்பட்டது. கல்சாரத்துக்கு மேல் நின்ற உடைந்த கோபுரத்தை அகற்றும் பணியை மட்டுமே இக் குழுவால் நிறைவேற்ற முடிந்தது. 1981 இல் தமிழக அரசு முயற்சியைப் புதுப்பித்து மீண்டும் ஒரு திருப்பணிக் குழுவை அமைத்தது. கடந்த ஆறு ஆண்டுகளாக ராஜ கோபுரத் திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு 25.6.90 அன்று காலை 9.30 மணிக்குக் குடமுழுக்குப் பெருவிழாவும் நடைபெற உள்ளது.

சிவந்தி ஆதித்தன் தலைமையில் திருப்பணிக் குழு, குடமுழுக்கு விழாவையொட்டி கோயில் முழுவதையும் புதுப்பித்துப் பொலிவுறச் செய்திருக்கிறது. ராஜ கோபுரத் திருப்

பணி வேலைகளை ஏற்று, சிரத்தையாகவும் திறம்படவும் செய்துள்ளவர் — வேறு யார்...? முத்தையா ஸ்தபதிதான்!

திருப்பணிச் செலவான ஒரு கோடி ரூபாயில் ஒரு பகுதி கோயில் வருமானம் மற்றும் பக்தர்களின் நன்கொடைகள் மூலம் கிடைத்துள்ளது. தவிர, பழனி தண்டாயுதபாணி திருக்கோயில், மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில் ஆகிய கோயில்களின் நன்கொடைகள் மூலமாகவும் பெறப்பட்டுள்ளது. இவ்வாறு தென்காசி விசுவநாதருக்கு அவரது 'குடும்ப' அங்கத்தினர்களே முன்நின்று விழா எடுக்கிறார்கள்!



* வெற்றி ஆதித்தன்



* அறநிலையத் துறை அமைச்சர் கே. பி. கந்தசாமி

பதினைந்தாம் நூற்றாண்டில்தான் தென்காசி திருக்கோயில் கட்டப்பட்டது என்பதால் இது பாடல் பெற்ற ஸ்தலம் அல்ல. இந்தக் குறை தீரும் வகையில் முத்துசுவாமி தீக்ஷிதர், காம்போதி ராகத்தில் 'காசி விச்வேச்வர ஏஹி, மாம் பாஹி' என்ற க்ருதியை இயற்றியிருக்கிறார். பாட்டின் இறுதியில் 'தக்ஷிணகாசி' என்று சொல்லப்படுவதால் பாட்டுடைத் தலைவர் தென்காசி விசுவநாதரே.

அரிகேசரி பராக்கிரம பாண்டியன் தமிழ்ப் புலவனும் கூட. அவனும் இத் தலத்தைப் பற்றிப் பாடிச் சென்றிருக்கிறான். அப்பாடல்களைக் கொண்ட கல்வெட்டுக்களை இன்றும் கோயிலில் காணலாம். அவற்றுள் ஒன்று:

'பூந்தண் பொழில் தென்காசியைப் பூதலத்தில் தங்கள் கிளைகளுடன் புரப்பார்கள் எல்லாம் வேந்தன் பணிபவராகி விளங்குவார்கள்' என்று கூறுகிறது.

இப்படிக் கூட ஒரு பக்தி இருக்க முடியுமா! தான் கட்டிய கோயிலுக்கு வருங்காலத்தில் திருப்பணி செய்பவர்களுக்கெல்லாம் முன்கூட்டியே வந்தனம் தெரிவித்திருக்கிறான் பராக்கிரம பாண்டியன்! அவனுடைய தீர்க்கதரிசனம் மெய்யானதை எண்ணி இரட்டிப்புச் சந்தோஷம் பெருகுகிறது.

உலக முழுதுடைய உலக நாயகி அம்மை சமேதரான விச்வேச்வரரை வணங்கி உலக க்ஷேமத்தை வேண்டுவோம்.

— ஆனந்தி


அடுத்த இதழில்....

சுஜாதா சிறுகதை:

○ நீலப் புடைவை; ரோஜாப்பூ!

○ இளமைத் திரைப்படத்தின் இமாலய வெற்றி.

— வண்ணப்படங்களுடன்



○ குங்குமம் அணிவதும் ஒரு கலை

— சிறப்புக் கட்டுரை



* தேர்தல் வழக்கு வெற்றி

நீங்கள் கேட்டவை — தராசு

செல்வியார் அரசியலில் இல்லாததால் விறுவிறுப்பே இல்லைதானே?

* எம். சம்பத். வேலாயுதம்பாளையம்.

? ஜனதா தளம் உடைகிறதா? உடைந்து விட்டதா? உடையப் போகிறதா?

! உடையவில்லை; உடையக் கூடாது; ஆனால் 'உடையாது' என்று கூறச் சற்று தயக்கமாகத்தான் உள்ளது.

* பி. ராஜசேகரன், மதுரை.

? விடுதலைப் புலிகள் வரிவசூல் செய்வதைப் பற்றி யாழ் தமிழர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளது குறித்து?

! அவர்கள் அதிருப்தி தெரிவித்து என்ன பயன்? அதான் கொழும்பு அரசு. 'விடுதலைப் புலிகள் சாப்பிட வேண்டாமா? வரி வசூலிக்கத்தான் செய்வார்கள்' என்று கூறி விட்டதே! 'மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி' என்ற நிலைதான் யாழ் தமிழர்கள் நிலை!

* எஸ். சுந்தர், பாளையங்கோட்டை.

? தேசிய முன்னணி அரசுக்கு அதிக ஆபத்து யாரிடமிருந்து? ராஜீவிடமிருந்தா தேவிலாலிடமிருந்தா?

! காஷ்மீர், பஞ்சாப், அஸ்ஸாம், இலங்கைப் பிரச்னைகளையெல்லாம் பார்க்கும் போது, விலைவாசி உயர்வையும் கவனிக்கும் போது, 'நமக்கேன் வம்பு வி. பி. சிங்கே பிரதமர் பதவியைக் கட்டிக் கொண்டு அழட்டும்' என்று விட்டு விட்டாலும் அதிசயமில்லை!

* ஜி. ராஜசேகர், வளையமாபுரம். *

? ஜனநாயகம் செழிக்க நாட்டில் மூன்றே மூன்று கட்சிகள் இருந்தால் போதும் என்கிறாரே, சி. சுப்பிரமணியம்?

! வலது சாரி இடது சாரி என்று இரண்டே போதும். நடுரோட்டில் நடக்கிற காங்கிரஸ் பாணி ஜனநாயக சோஷலிஸம் தேவையற்றது. அது சோஷலிஸமும் இல்லாமல் காப்பிடலிஸமும் இல்லாமல் அரசியல்வாதியின் சுயநல இஸத்துக்கே தீனி போட்டுக் கொழுக்க வைப்பது!

* எஸ். வரதராஜன், பள்ளத்தூர்.

? 'நேரு குடும்பம் என்னும் மாயா லோகத்திலிருந்து காங்கிரஸ்காரர்கள் எப்போது விடுபடுகிறார்களோ, அப்போதுதான் நாட்டுக்கும் நல்லது' என்கிறீர்களே, நேரு குடும்பம் என்பதாலேயே அவர்கள் குடும்பம் புறக்கணிக்கப்பட வேண்டுமானால் அதுமட்டும் எந்த ஜனநாயக மரபுகளுக்குப் பொருந்தும்?

! 'நேரு குடும்பம் என்பதற்காக ராஜீவைப் புறக்கணியுங்கள்' என்று நான் கூறவில்லை. 'நேரு குடும்பம் என்பதற்காக ராஜீவைப் புறக்கணிக்கக் காங்கிரஸ்காரர்கள் தயங்கவோ அஞ்சவோ கூடாது' என்றுதான் கூறுகிறேன். இரண்டுக்கும் வித்யாசமிருக்கிறது. நேரு குடும்பம் என்பதற்காகவே ராஜீவைப் புறக்கணிப்பது எனில் அவர் பிரதமரான போது பிரமாத எதிர்பார்ப்புடன் அவரை வரவேற்றுப் பாராட்டி கல்கி தலையங்கங்கள் எழுதியிருக்காது. ஆனால் நமது எதிர்பார்ப்புக்களும் நம்பிக்கைகளும் பொய்த்துப் போகும்படி அவர் நடந்து கொண்டு விட்டதால், இப்போது, 'நேரு குடும்பம் என்பதற்காக அவரைக் கட்டிக் கொண்டு அழ வேண்டாம்; துணிந்து செயலாற்றுங்கள். புதிய தலைமையை உருவாக்குங்கள்' என்று காங்கிரஸ்காரர்களுக்குக் கூறுகிறோம்.


* எம். கே. சக்திவேல், சேலம்.

? மரணத்தை நினைத்தால் பயமாயிருக்கிறதே?

! 'காலா உனை நான் சிறுபுல்லென மதிக்கிறேன்; என்றன் காலருகே வாடா! சற்றே உனை மிதிக்கிறேன்!' என்ற பாரதியின் பாடல் வரிகளைச் சொல்லிப் பார்த்துக் கொள்ளுங்கள். இதற்கு வலம்புரி ஜான் அளிக்கின்ற கம்பீரமான விளக்க உரையைக்



* செவிசாய்க்க வேண்டாம்



* மூன்று கட்சிகள் போதும்

கேட்கக் கூடுமானால் இன்னும் நல்லது!

* எம். செல்லையா, சாத்தூர்.

? 'தேவிலால் சொல்லும் யோசனைக் கெல்லாம் நான் செவி சாய்க்கத் தேவை யில்லை' என்று ஹெக்டே பேசியிருக் கிறாரே?

! வசதியான யோசனை என்றால் செவி சாய்ப்பார்; இடைஞ்சலான யோசனை என்றால் என்ன செய்ய? இப்படித்தான் பதில் கூற வேண்டும். வேறு வழி? ஆனால் ஒன்று. ஏற்கெனவே தார்மிகப் பொறுப் பேற்று ஹெக்டே ராஜினாமா செய்து விட்ட ஒரு விஷயத்துக்காக மறுபடி, இன்று ராஜினாமா செய்யுமாறு தேவிலால் சொல் வதும் நியாயமில்லைதான்.

* லட்சுமி செங்குட்டுவன், வேலூர் (சேலம்)

? செல்வியார் அரசியலில் இல்லாததால் அரசியலில் ஒரு விறு விறுப்பே இல்லை தானே?

! நீங்கள் இப்படி குறை பட்டுக் கொள் கிறீர்கள் என்பதற்காகத்தானோ என்னவோ, செல்வியார் தேர்தல் வழக்கில் ஜெயித்துக் காட்டியிருக்கிறார். ஜெ மீது போடப்பட்ட வழக்கில் சாரம் இருந்தாலும், செய்வன திருந்தச் செய்யாத காரணத்தால் வழக்கு தள்ளுபடியாகி விட்டது. இவ்வளவு முக்கிய மான வழக்கைஇவ்வளவு அசிரத்தையாக நடத்தியிருக்கிறார்களே என்று நாம் மட்டு மல்ல, நீதிபதியே வருத்தப்பட்டிருக்கிறார்!

* கு. சிவகுமார், வாய்மேடு.

? தற்போதைய கவலைக்குரிய விஷயம்?

! பஞ்சாபில் முகர்ஜி காரணம் ஏதும் கூறா மல் சட்டென்று ராஜினாமா செய்து விட, வீரேந்திரவர்மா கவர்னர் பதவியை ஏற்றுள் ளார். யார் போய் யார் வந்தாலும் பிரச்னை என்னவோ தீருகிறவழியாய் இல்லை. பஞ்சாபில் நிர்வாக ஆற்றல் செயல்பட்டால் மட்டும் போதாது; அரசியல் தீர்வு காணப் பட வேண்டும். ஆரம்பத்தில் மத்திய அரசு இந்த விதமாகச் சிந்திப்பது போல்தான் தோன்றியது. வி.பி.சிங்கின் பொற்கோயில் விஜயம், டில்லியில் சர்வகட்சி மாநாடு எல்லாம் நம்பிக்கை அளித்தன. ஆனால்

* கலைஞர் விழாவில் குட்டு



* கம்பீர விளக்க உரை



* ரூ 20 பரிசு பெறுபவர்:
ஜி. ராஜசேகர்,
வளையமாபுரம்,
வலங்கைமான், 612 804.

தொடர்ந்து ஆக்க பூர்வமான நடவடிக் கைகள் எடுக்கப்படாததால், கிடைத்த ஆதாயங்கள் கறைந்து போய்விட்டன. ஆளுனர்கள் மாறிப் பயனில்லை; தெளி வான கொள்கை உருவாகி, அமுல்படுத்தப் பட வேண்டும்.

* கே. மகேஷ், சங்கராபுரம்.

? கலைஞர் பிறந்த நாள் விழாவில் இந்து ஆசிரியர் ராம் கலந்து கொண்டதைத் தங்களால் ஜீரணிக்க முடிகிறதா?

! அதை மட்டுமல்ல; அந்தக் கூட்டத்தில் ஹிந்து பத்திரிகைக்கும் ராமுக்கும் கலைஞர் வைத்த குட்டையும் என்னால் ஜீரணிக்க முடிய வில்லை. இரண்டுமே தவிர்க்கப் பட்டிருக்கலாம்.

* எம். ஜி. ராமச்சந்திரன், சங்கமங்கலம்.

? ஜோக்குகளைக் கார்டில் எழுதி அனுப் பலாமா?

! தபால் கட்டண உயர்வை யோசிக்கும் போது இனி சிறுகதைகளே கார்டில் எழுதப் பட்டு வந்தாலும் வியப்பதற்கில்லை!

* எஸ். முத்து, திருவண்ணாமலை.

? முரசொலியில் பலசரக்கு பகுதியில் சின்னக் குத்தூசி கிழி கிழி யென்று கிழித்து விட்டதே, உம் பதில் என்ன?

! கல்கியின் இன்றைய ஒரு நேர்மையான விமர்சனத்துக்கு நேரடியாகப் பதில் தர முடியாத போது பிரச்னைகளைத் திசை திருப்பிக்கொண்டு போவதிலும் பழங்கதை களைக் கிளறுவதிலும் கலைஞருக்குத் தாம் சளைத்தவரில்லை என்று மீண்டும் நிரூபிக் கிறார் பலசரக்குக்காரர். இந்தக் காரியத் துக்குத் தமக்கு உதவுவதற்காக, இவர்களால் ஓரம் கட்டப்பட்ட ம. பொ. சியை அரங் கின் மையத்தில் கொண்டு வந்து நிறுத்தி யிருக்கிறார். ஒரு காலகட்டத்தில் நடக்கின்ற ஒரு சம்பவத் தொடரை, அவரவரும் அவரவர் நோக்கில்தான் பார்ப்பார்கள். ம.பொ.சி. எந்த நோக்கில் எப்படிப் பார்த் தார் என்பதை மட்டும் இன்று முரசொலி கூறுகிறது. 'கல்கி' எந்த நோக்கில் எவ்வாறு பார்த்தார் என்பதையும் அறிந்து கொள்ள விரும்புகிறவர்கள் ''பொன்னியின் புதல் வர்'' நூலைப் படித்துப் பார்க்கலாம். பக்கம் பக்கமாக அவற்றை இங்கு மறு பிரசுரம் செய்வது சாத்தியமில்லை. குங்குமத்தி லிருந்து முரசொலிக்குத் தாவி அவர்கள் விவாதத்தை வளர்ப்பது போல் நாம் செய்ய, நம்மிடம் வேறொரு நாளிதழ் இல்லையே.

பயம்

"உன் பெண்டாட்டி, இப்படி ஒன்றுமில்லாததற்கெல்லாம் கத்தி, கதவை அடைக்கறது கொஞ்சம் கூட நன்னாவே இல்லை. தெருவே சிரிக்கிறது.."

கோபி ஆபீசிலிருந்து வீட்டிற்குள் நுழையும் முன்பே, அவன் அம்மா கல்பகம் இரண்டு பக்கம் கொள்ளாமல் சரளாவைப் பற்றிப் புகார் படித்து விட்டாள்.

சரளா அழுத கண்ணும், சிந்திய மூக்குமாய் அவனுக்குக் காப்பி கொண்டு வந்து வைத்தாள்.

இதுவே பழைய கோபி என்றால், ஹைஜீன் பற்றி அரை மணி நேரமாவது சொற்பொழிவாற்றி விட்டுத்தான் உட்காருவான்.

பெண்டாட்டியாச்சே...!

அதுவும் புதுப் பெண்டாட்டி...! இன்னும் அவள் என்ன சோப் தேய்த்துக் குளிக்கிறாள் என்பது கூடத் தெரியவில்லை.

போதாக்குறைக்குப் பயங்கர பயந்தாங்கொள்ளியாக வேறு இருக்கிறாள்.

சாந்தி முகூர்த்த அறையில், சுவரிலிருந்த பல்லி பார்த்துக் கொண்டிருக்கிறது என்கிற பயத்தில், கோபியின் கையைத் தொடக் கூட மறுத்துவிட்டாள்.

"ஐயய்யோ... சரளா.. நீ என்ன இப்படி ஒரே முட்டா பயந்தாங்கொள்ளியா இருக்கே? பல்லி என்ன செய்யும். நீ ஏன் அதைப் பார்க்கறே?"

"இல்லீங்க. அதுங் கண்ணைப் பாருங்க. எத்தனை கோபம், எத்தனை பொறாமை!"

கோபிக்குப் பொறுமை தொலைந்து கொண்டிருந்தது. இருந்தாலும் புன்னகை மாறாமல் சொன்னான்.

"சரள்... உன் மேல் சத்தியமாச் சொல்றேன். உனக்கு முன்னாலே இந்தப் பல்லியை நான் கல்யாணம் செஞ்சுக்கலே. அது யாரோ? நான் யாரோ. சரள்.. சரள் கண்ணு. உன் கையைக் கொடு. ரேகை பார்க்கிறேன்."

சரளா வெடுக்கென எழுந்து கொண்டாள்.

"எனக்கென்னமோ சந்தேகமா இருக்குங்க. அந்தப் பல்லி போகட்டும். நான் கட்டிலுக்கு வர்றேன்."

அவள், ஒரு ஜமுக்காளத்தைத் தரையில் விரித்துப் படுத்து விட்டாள்.

இதற்குப் பின் ஒவ்வொரு ராத்திரியும், சரளா படுக்க வரும் வரையில், பல்லியோ, பூச்சியோ கண்ணில் தென்படாதவாறு ஆலோலம் பாடிக்கொண்டிருப்பது இவன் வேலையாயிற்று.

ஏதோ, பல்லி — கரப்புக்குப் பயந்தால் பரவாயில்லை. கேவலம் சரளா ஆறறிவு கொண்ட மனிதர்களிடம் கூட வெடவெடத்து நிற்கும் போதுதான் கோபிக்குப் பரிதாபமாக இருக்கும்.

ஆனால் பெண்டாட்டியை விட்டுக் கொடுக்காமல் சொல்லுவான்.

"அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு — இதெல்லாம் ஒரு பொம்பளைக்கு அவசியம்னு அந்தக் காலத்துல சொல்லியிருக்காங்க. ஸ்டோன் வாஷ் ஜீன்ஸை மாட்டிட்டு மோட்டார் சைக்கிள்லே போற பொண்ணுங்களுக்கெல்லாம் இதைப் பத்தி என்ன தெரியுமாம்...?"

இதோ இப்பொழுது அம்மாவிடமும் அதையேதான் சொன்னான்:

"அம்மா, இயற்கையிலேயே அவ கொஞ்சம் பயந்த சுபாவம்தான். நேத்திக்குப் பாரு, நீ காய்கறி வண்டிக்காரன்கிட்ட கத்திட்டிருக்கே. இவ பிழியப் பிழிய அழறா."

"நல்லா அழுதா. இவளுக்காக நாங்க எல்லாரும் குரலைக் குறைச்சுப் பேசணும் போல இருக்கு."

"பேசுங்க. அதனால் ஒண்ணும் மோசமில்லே."

கோபி, இதைக் கூறி விட்டு, மனைவியின் முகத்தில் விளக்குப் போட்டாற் போல ஏற்படும் சந்தோஷ வெளிச்சத்தைக் காண, படுக்கையறைப் பக்கம் போய் விட்டான்.

"சரள்... எங்கே இருக்கே.."

"இங்கேதான் கிச்சன்லே. இருங்க டிபன் எடுத்திட்டு வந்துடறேன்."

"எதுக்குச் சிரமம்... நானே வர்றேனே."

கோபி, தன் அம்மா கூடத்திலிருக்கும் தைரியத்தில் சமையலறைக்குள் நுழைந்தான்.

"என்ன டிபன் சரள்.."

"வெங்காய பக்கோடா.."

"ஹை! எனக்கு ரொம்பப் பிடிக்குமே.. மே...மே..."

கோபியின் பார்வை பரண் மீதே குத்திட்டு நின்றது.

'அதோ... அது என்ன.. எலி வாலா?'

ஐயோ சரள் பார்த்து விட்டால் அவளுக்கு ஹார்ட் அட்டாக்கே வந்து விடுமே!

அனுராதா ரமணன்

அவன் ஜாடையாகச் சரளாவையே கவனித்தான்.

அவளோ, வாணலியில் பொன்னிறமாய் வறுபடும் பக்கோடாவிலேயே கண்ணாக...

''நீங்க எதுக்கு இங்கே.. கூடத்துக்குப் போங்க..''

''ஏன் ஆம்பிளைங்க சமையலறைக் குள்ள வரக் கூடாதுங்கற பத்தாம் பசலித் தனமான நம்பிக்கை உனக்கும் இருக்கா சரளா..''

(இவ்வளவு பெரிய வசனம் தேவை யில்லைதான். ஆனால், வாய் பேசாமல் இருந்தால், கண்டிப்பாய் சரளா தன் பக்கம் திரும்பி விடுவாளே என்கிற பயம்.)

கோபி கண்களை ஒருமுறை அழுந்த மூடித் திறந்தான்.

'நிஜமாலுமே அது எலி வால்தானா?'

'இல்லை — ஜன்னல் திரைச் சீலைக்காக உபயோகித்த கர்ட்டன் கம்பியா..?'

'கர்ட்டன் கம்பி இப்படி அடி பெருத்து, நுனி சிறுத்து இருக்குமா...?'

'ஒருவேளை அம்மா கொண்டை கட்டிக் கொள்ள உபயோகப்படுத்தும் கறுப்பு நூலாக இருக்குமோ...?'

கோபியின் சந்தேகத்துக்கு ஏற்ப, அந்தக் கறுப்பு, நீண்ட வஸ்து ஆடாமல், அசை யாமல் இருந்தது.

'ஒருவேளை — எசகு பிசகாகப் போய் தானாகவே மாட்டிக் கொண்டு உயிரை விட்டதோ...?'

கோபி, தன் வானப் பட்டறை மூக்கை உள்ளுக்கு இழுத்துப் பார்த்தான்.

'எலி செத்த நாத்தமென்றால் வீட்டைத் தூக்கிக் கொண்டு போகுமே. ஊஹூம்...! இல்லை! வெங்காய பக்கோடாவின் நறு மணம்தான் சுற்றிலும்...'

அடுத்த கவலை ஆரம்பித்து விட்டது கோபிக்கு.

'டிபன் தட்டைக் கொடுப்பதற்காகச் சரளா திரும்பினால் — அவளது நீண்ட கடல் போன்ற கண்களில் அந்த எலி வால் தட்டுப் படாமல்தான் போகப் போகிறதா...?'

'காச் மூச்சென்று அலறி அப்படியே





அருள்வாக்கு

''கு'' என்பது இருட்டு; ''ரு'' என்பது போக்குவதைக் குறிக்கும்; குரு என்றால் இருட்டைப் போக்குபவர் என்று சொல்கிறார்கள். ''கும்மிருட்டு'' என்று ரொம்பவும் இருட்டாயிருப்பதைச் சொல்லும் போது ''கு'' என்பது இருட்டைக் குறிப்பதுதான். இருட்டைப் போக்கடிப்பவர் என்பதே ''குரு''வுக்கு அர்த்தமாகிறது. 'தேவ' என்றாலும் பிரகாச ரூபி என்றே அர்த்தம். இருட்டு என்றால் அஞ்ஞானம்தான். 'தமஸோ மா ஜ்யோதிர் கமய' என்கிற போது தமஸ் (இருட்டு) என்பது அஞ்ஞானமே; ஜ்யோதி என்பது ஞானம். அஞ்ஞான மாயை இருள், ஞான ஒளி என்றே சொல்வது வழக்கம். ஆத்ம ஞானமும் மாயா அஞ்ஞானமும்தான் என்றில்லை; எந்த ஒரு விஷயமோ வித்யையோ ஆனாலும் அது தெரியாத நிலையில் அதை அறிவின் இருட்டு என்றும், தெரிந்த நிலையை அறிவு வெளிச்சம் (புத்திப் பிரகாசம்) என்றும் சொல்வதே வழக்கம். இப்படி புத்திக்கு ஒரு விஷயத்தைப் பிரகாசிப்பிக்கிறவர் குரு; முக்கியமாக முடிவாக ஞானப் பிரகாசத்தைக் கொடுக்கிறவர்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கொதிக்கும் எண்ணெயில் அழகான முகத்தைப் புதைத்து...'

'ச்சே... என்ன விபரீத கற்பனை?'

'அவன் திரும்புவதற்கு முன் — நாமே, தட்டை வாங்கிக் கொண்டு விட்டால்...'

கோபியின் முகம் பிரகாசமாயிற்று.

''சரள்...!''

அவன், அவளது தோளைச் சுற்றிக் கரங்களை வளைத்து ஒரு தட்டை எடுத்துக் கொண்டான்.

''சரள்... பக்கோடாவை நீ தட்டுல போடு. நான், எனக்கொரு வாய் — உனக்கொரு வாய் போடுவேனாம்...''

''ஐயோ.. அம்மா வந்து நிற்கப் போறா!'

''இப்போதைக்கு மாட்டா. எனக்குத் தெரியும்..''

''எப்படி...?''

''எதிர் வீட்டு உமாவோட பாய் ஃப்ரெண்டு வந்திருக்காப்பல. பேச்சு ரொம்ப சுவாரஸ்யமாப் போயிட்டிருக்கு. நீ எடு. உனக்கொரு வாய்.. எனக்கொரு வாய்.. மூன்றாவது பக்கோடாவை அவளுக்குத் தெரியாமல் பரண் பக்கம் வீசினான் கோபி.

'அற்ப எலியே.. பகோடா வாசனையைத் தேடிக் கொண்டுதான் வந்தாய் என்றால், இந்தா, பொறுக்கிக் கொண்டு கண் காணாமல் ஓடி விடு.. என் மனைவி எதிரில் வராதே.'

சரளா வேறு ஏதோ வேலையாய் நகர்ந்த போது பரணைப் பார்த்தான் கோபி. எலியின் வாலைக் காணோம். வயிற்றில் சுத்தமான கார்ப்பரேஷன் தண்ணீரை வார்த்தாற் போலிருந்தது அவனுக்கு.

ஏதோ. அந்த நிமிஷத்துக்கு மனசு நிம்மதி அடைந்ததே தவிர. நிரந்தரமாய் இதற்கொரு முடிவு கிடைக்காதவரை கோபிக்குத் தூக்கம் வராது போலிருந்தது.

'சரளாவுக்குத் தெரியாமல் இந்த எலியைப் பொறி வைத்துப் பிடித்து விட வேண்டும்...'

'எப்படி?'

பக்கத்து வீட்டு ராமபத்திரனிடம் ரகசியமாய்ப் பேசி. எலிப்பொறியை வாங்கி, ராயர் கடை மசால் வடை சகிதம் வீடு வந்தான். சரளாவை வற்புறுத்திக் கோவிலுக்கு அனுப்பி விட்டு. பொறியில் வடையை மாட்டி. பரணில் வைத்தான்.

இதற்குள்தான் எத்தனை குறுக்கீடுகள்!

கோபியின் முதல் எதிரியே அம்மாதான்.

''ஏண்டா... மசால் வடை வாங்கினியா?''

''இ.. இல்லையே...''

''ஏண்டா அல்ப விஷயத்துக்கெல்லாம் போய் பொய் சொல்றே? பெண்டாட்டிக்கு வாங்கிண்டு வந்தேன்னு சொல்லிட்டுப் போயேன். இப்ப என்ன இப்ப..''

''அய்யோ... அதில்லேம்மா..''

''எது இல்லே? எல்லாம் எனக்குத் தெரியும்..''

அம்மா, முகத்தைத் திருப்பிக் கொண்டு போனான்.

தாய்க்கும் பிள்ளைக்கும் நடந்த சண்டையே தெரியாமல், சரளா மிதக்கும் கண்களால் கோபியையே பார்த்தாள்.

''நிஜமா சொல்லுங்க. நான் கோவிலுக்குப் போய்த்தான் ஆகணுமா?''

''கண்டிப்பா சரள். உன் புருஷன் சுமங்கலியா வாழணும்னா நீ இப்ப கோவிலுக்குப் போயே ஆகணும்.''

''ஆனா, இப்ப எனக்கு ஆன்மீக மூடே வரல்லையே.. ரொமான்டிக்கா ஏதாவது செய்யணும் போல இருக்கு. வர்றீங்களா பீச்சுக்கு...''

''சேச்சே... முதல்லே கோவில் போய் வா மகளே போய் வா...''

சரளாவின் தலை மறைந்ததும் நிமிஷமாய் எலிப் பொறியை எடுத்து வெங்காய வடையைச் செருகி, பரண் மீது வைத்தான்.

இரவு —

''சரள்... ராத்திரி 'டப்'புனு ஏதாவது சப்தம் கேட்டா பயந்துக்கக் கூடாது.''

''ஏங்க.. என்ன சப்தம் அது?''

''பரண் மேல ஒரு புஸ்தகப் பெட்டியைத் திறந்தேன். மூட முடியலை. திமுர்னு காத்துல மூடிடுச்சுன்னு வச்சுக்க. நீ பயந்து அலறப் போறியேன்னு.. சரள்.. சரள் கண்ணு.. என் நெஞ்சு மேல் தலைய வச்சுட்டுத் தூங்கறியா...?''

இரவு முழுக்கத் தூக்கம் வராமல் புரண்ட கோபி விடிகாலையில்தான் கண்ணயர்ந்தான்.

காலை ஏழு மணி சுமாருக்கு டூத் பிரஷ்ஷும், கையுமாய், குளியலறைக்குச் சென்றவன் திகைத்து ஆணி யடித்தாற் போல நின்று விட்டான்.

ஒரு பக்கெட் தண்ணீரில் எலிப் பொறியை அமுக்கு அமுக்கென அமுக்கிக் கொண்டிருந்தாள் சரளா.

''ஐய்யோ சரளா, என்ன பண்ணிட்டிருக்கே?''

''பொறியில மாட்டின எலியை வெளியில் விட்டா, மறுபடியும் வந்து அமர்க்களம் பண்ணும். எப்பவுமே — இதுதான் சிறந்த வழி. மூச்சு அடங்கிப் போற வரைக்கும் தண்ணியை விட்டு எலிப்பொறிய எடுக்கக் கூடாது. எங்க வீட்டுல எத்தனை எலி பிடிச்சிருக்கேன் நான்.''

கோபி — சரளாவையே வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

அவள் இடுப்பில் இரு கைகளையும் வைத்தபடி நின்றிருந்தாள்.

கோபிக்குச் சரளாவைப் பார்த்த போது அடிவயிற்றில் வினோதமான கலக்கல் பெருகிற்று.

'அதற்குப் பேரென்ன?'

'பயமா?'

சினி சிப்ஸ்:

யாமினியின் அலைச்சலு



* யாமினி: அலைந்ததில் கால்வலி...?

●● 'யாமினி' கன்னடத்தில் ஸ்டேட் அவார்டு வாங்கிய நடிகை. ராஜேந்திர சிங் போன்ற பிரபல டைரக்டர்களின் படங்களில் நடித்திருக்கின்றார். யாமினிக்குத் தமிழ்ப் படங்களில் நடிக்க வேண்டுமாம். வாய்ப்பு கிடைத்தபாடில்லையாம்! ''உதட்டைப் பிதுக்கி விட்டால் கூடப் பாதகமில்லை; ஆனால் இவர்கள் அலைகழிப்பதைத்தான் தாங்க முடியவில்லை. அவார்டு வாங்கிய நடிகைக்கே இந்த நிலைமை என்றால், புதுசாக வாய்ப்புக் கேட்டு வருகிற பெண்களை எப்படிப் படுத்தமாட்டாங்க?'' என்று கேட்கிறார் யாமினி.



* சுரேஷ் கிருஷ்ணா: நான்கு அவார்டுகள்.

●● கே. பாலச்சந்தரிடம் உதவி டைரக்டராகப் பணிபுரிபவர்கள் டைரக்ஷனில் தனியாகச் சாதிக்க முடியாது என்ற சினிமா வட்டார நம்பிக்கையை உடைத்திருக்கின்றார் சுரேஷ் கிருஷ்ணா. தெலுங்கில் இவரின் டைரக்ஷனில் உருவான 'பிரேமா' ஹிட்! அதுமட்டுமல்ல; அந்தப் படத்திற்கு நான்கு அவார்டுகள் கிடைத்துள்ளன. சிறந்த இயக்குநர், சிறந்த நடிகர், சிறந்த காமிராமேன், சிறந்த உதவி நடிகர். (எஸ். பி. பாலசுப்பிரமணியன்!) 'பிரேமா' தற்போது தமிழில் 'அன்புச் சின்னம்' என்று டப் செய்யப்பட்டு ஓடிக் கொண்டிருக்கின்றது. பம்பாயில் பிரசாத் புரொடக்ஷனில் அக்கௌண்டண்டாக இருந்த சுரேஷ் கிருஷ்ணா, பாலச்சந்தரின் 'ஏக் துஜே கேலியே' படம் மூலம் உதவி இயக்குனராகி, கமலஹாசனின் 'சத்யா' படத்தில் டைரக்டரானவர்.

கல்கி விடுமுறைமலர்-1990

* 'எப்போது வரும்? எப்போது வரும் கல்கியின் விடுமுறை மலர்?' என்று அன்றாடம் ஏங்க வைத்து விட்டீர்கள். மலர் வீட்டுக்கு வந்ததும் எங்கள் குடும்பத்தில் நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டு பார்த்துப் படித்து, ரசித்து, ருசித்து, பத்திரப்படுத்தி வைத்து விட்டோம். எல்லா தரப்பு சமாசாரங்களும் சிறப்பாகச் சேகரிக்கப்பட்டிருந்தன. கஷ்டப்பட்டு மலரைத் தொகுத்து வழங்கியமைக்கு மிக்க நன்றி! குறிப்பாக அறிஞர்கள், கலைஞர்கள் சிலரின் புன்னகை ததும்பும் படங்கள் மலருக்குச் சிறப்பான இனிய மணத்தை அள்ளித் தந்துள்ளன.

கும்பகோணம், பிரசன்னா ராஜன்.

* பத்து ரூபாய்க்கு 304 பக்கங்களா! அதுவும் பல வண்ணப் படங்களுடன். ''அதிசயம்! ஆனால் உண்மை'' என்று கூவத் தோன்றியது.

ஹில் ஹைனஸ் 'அப்துல்லா கதையை முழு அளவில் கொடுத்துப் படத்தைப் பார்க்கும் ஆர்வத்தைத் தூண்டி விட்டீர்கள்.

எங்கிருந்து பிடித்தீர்கள் வி. ஐ. பிக்களுடைய

சார்லியின் சந்தோஷமும்!



* 'கேளடி கண்மணி': வசந்த் பட்ட பாடு...!

●● 'கேளடி கண்மணி' படத்தின் மூலம் டைரக்டராக அறிமுகமாகியுள்ள வசந்த் ஒரு பெரிய பிரச்னையைச் சமாளிக்க வேண்டியதாயிற்று. படத்தின் கதாநாயகி ராதிகா, 'வெளிநாடு போகப் போகிறேன்; என் சம்பந்தப்பட்ட காட்சிகளை முதலில் முடிங்க' என்று ஒருபுறமும், கதாநாயகன் எஸ். பி. பாலசுப்பிரமணியன், 'நான் அமெரிக்கா போகப் போகிறேன்; என் சம்பந்தப்பட்ட காட்சிகளை முடிங்க' என்று மறுபுறமும் விரட்டியிருக்கிறார்கள்! மனுஷன் எப்படியோ இரண்டு பேரையும் சமாளித்துப் படத்தை முடித்துவிட்டு, அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டார்!

●● நடிகர் சார்லி ரொம்பவும் குஷி மூடில் இருக்கிறார். 'புது வசந்தம்' படத்துக்குப் பின் வீடு தேடி வாய்ப்புகள் வந்து குவிகின்றனவாம்! "ஒவ்வொரு கம்பெனியாய் வாய்ப்புக் கேட்டு அலைந்து கொண்டிருந்த எனக்குப் பாரதிராஜாவின் 'புது நெல்லு, புது நாத்து' மகேந்திரனின் 'ஊர்ப் பஞ்சாயத்து' மற்றும் பாலு மகேந்திரா, பாலசந்தர் படங்களில் நடிக்க ஒப்பந்தம் ஆகியிருக்கிறது" என்று பெருமிதமாகக் கூறுகின்றார். பாலசந்தரின் படங்களில் எல்லாம் தலையை மட்டுமாவது காட்டி விடும் வழக்கமாம் சார்லிக்கு.

●● தமிழ் சினிமாவின் லேட்டஸ்ட் பாஷன் பிரபலங்களை நடிக்க வைப்பது தான். 'அக்னி நட்சத்திரத்தில்' தொழிலதிபர் உமாபதியை நடிக்க வைத்து இந்த பாஷனைத் துவக்கியவர் மணிரத்னம். தற்போது 'ஜீவி' யும் ஒரு படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். 'மக்கள் தொண்டன்' என்ற படத்தில் அமைச்சர் ரோலில் நடிக்க வி. ஜி. பி. சந்தோஷம் ஒப்பந்தமாகியிருக்கின்றார்!



* ஐஸ்வர்யா, ஜீ. வி. யுடன் சந்தோஷம்: அமைச்சர் ரோலில்...

— எஸ். பாலு.

சிரிப்புப் படங்களை? அவற்றைப் பார்த்து விட்டு 'சிடுமூஞ்சி' கூட கண்டிப்பாகச் சிரித்து விட்டிருப்பார்.

வேலூர். கே. பி. சாரதி.

* சிறுவர்களுக்கு இந்த விடுமுறை மலர் கண்டு குதூகலம்! இளைஞர்களுக்கு இது ஓர் இனிய அனுபவம்! பெரியோர்களுக்கோ இது ஒரு பொக்கிஷம்! ஆக மொத்தத்தில் கல்கி விடுமுறை மலர் கண்ணைக் கவர்ந்து, கருத்தை நிறைக்கும் தயாரிப்பு.

மங்கநல்லூர். சுகன்யா.


* விடுமுறை மலர் பார்த்தேன், படித்தேன், எதைப் பாராட்டுவது? மூன்று மகான்களின் வண்ணப் படங்களை வெளியிட்டதற்கா? ஜெயராதனின் மீண்டும்

வாசகர் விமர்சனம்.

குழந்தைகளையா? அல்லது பி. வி. ஆரின் மதுமதியையா? இல்லை, நீண்ட இடைவெளிக்குப் பின் படிக்க நேர்ந்த புஷ்பா தங்கதுரையின் துப்பறியும் நவீனத்தையா?

எல்லாவற்றுக்கும் மேலாக மலருக்கே மகுடம் வைத்தது போன்று அமைந்தது பொன்னியின் புதல்வரின் "கல்கத்தா பிரயாணம்". எதைப் பாராட்டுவது என்று எங்களைத் திக்குமுக்காட வைத்த கல்கியின் "விடுமுறை மலரே" உனக்கு அனந்தகோடி வந்தனங்கள்!

மயிலாடுதுறை. ஆர். ஜோதாமணி.



• மோனிகா செலஸ்

பதினாறு வயதுப் புயல்

மோனிகா

தொலைக்காட்சியில் ஒரே விளையாட்டு மழை. இரண்டு சானல்களிலும் திருப்பின போதெல்லாம் கொட்டோ கொட்டென்று கொட்டி மற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் ஓரம் கட்டி ஒதுக்குகிறது.

இப்படி இங்கே நிகழ்ச்சி மழையென்றால், பாரிஸில் பெண்கள் ஒற்றையர் டென்னிஸ் இறுதிப் போட்டியன்று நிஜமழை!

சும்மா சொல்லக் கூடாது. பாரிஸ் ரசிகர்கள் ரொம்பவும் பொறுமை சாலிகள். குடைகளை விரித்துக் கட்டுப்பாடாக, அமைதியாக இருந்தார்கள். ஒருவராவது அங்கே இங்கே எழுந்து ஓட வேண்டுமே!

பாரிஸில் எத்தனை ரகக்குடைகள் இருக்கின்றன என்பதை எத்தனை நேரம் தான் காட்டிக் கொண்டிருக்க முடியும்? சுற்றிச் சுற்றி வந்தார் காமெராக்காரர். சில சுவையான காட்சிகளும் கண்களில் பட்டன. அத்தனை மழையிலும் குடை பிடித்தவாறே ஒருவர் கோன் ஐஸ் கிரீம் சுவைத்துக் கொண்டிருக்க, காமிரா அங்கே இங்கே போய் வந்து திரும்பத்திரும்ப அவர் சாப்பிடுவதையே காண்பிக்க... நாவில் நீர் சுரக்கக் கொஞ்சம் பொறாமை யாகத்தான் இருந்தது.

மழை நின்று ஆட்டம் மீண்டும் தொடங்கிய போது, மோனிகா ஸெலஸ் என்கிற அந்தப் பதினாறு வயதுப் புயல் என்ன பாடு படுத்தி விட்டது! மட்டையை இருகைகளாலும் பிடித்துக் கொண்டு, 'ஆ.... ஊ' என்று அவ்வப்போது கூச்சலிட்டு, கோர்ட்டில் அங்குமிங்கும் ஓடி எகிறிக்குதித்து எதிர்த்து விளையாடிய ஸ்டெஃபியை மிரளவைத்துக் கடைசியில் ஜெயித்தே விட்டது!

மோனிகாவின் ஆட்டத்தில் மனத்தைப் பறி கொடுத்தாலும், உள்ளுக்குள், ஸ்டெஃபி தோல்வியடைந்ததில் பனி மூட்டமாக வருத்தம் படரத்தான் செய்தது.

ஆட்டத்தின் ஆரம்பத்தில் மழைதான் ஒரு தடங்கலாக வந்தது என்றால், நடு நடுவே நம்மூர்க்காரர்கள் வேறு அவ்வப்போது தடங்கலுக்கு வருந்தினார்கள்.

அன்றிரவு தமிழ்ச் செய்தி அறிக்கையில் டென்னிஸ் போட்டி முடிவை அறிவிக்கும் போது, 'ஸ்டெஃபிகிராஃபியை' மோனிகா வென்றதாகக் குறிப்பிட்டார்கள். ஒரு முறையல்ல. இரண்டுமுறை. அவர் பெயர் ஸ்டெஃபி கிராஃப். 'ஸ்டெஃபி கிராஃபி' அல்ல.

அண்மையில் முடிவடைந்த 'கப்தக் புகாருன்' என்கிற நிகழ்ச்சி (தேசிய ஒளி பரப்பு) நாடோடிகளின் வாழ்க்கை முறையை அப்பட்டமாக எடுத்துக் காட்டியது என்கிற ஒன்றைத் தவிர எப்போதடா முடியப் போகிறது என்றுதான் இருந்தது.

இத்தனைக்கும் 'கரம்சந்த்' புகழ் பங்கஜ் கபூர் முக்கிய பாத்திரம் ஏற்றிருந்தார். எதனால் அதைப் பதின் மூன்று வாரங்களுக்கும் மேலாகத் தொடர அனுமதியளித்தார்கள் என்பது புரியவில்லை!

'கரம்சந்த்' தொடரை முன்பு பார்க்கத் தவறியவர்கள் இப்போது சனிக்கிழமை பிற்பகலில் இடம்பெறும் மறு ஒளி பரப்பை அவசியம் பார்க்க வேண்டும்.

கால் பந்தாட்ட நிகழ்ச்சிகளின் காரணமாக ஒத்திப் போடப்பட்டது எல். ஆர். ஈஸ்வரியின் 'மலரும் நினைவுகள்.' பதிலாக, போனஸாகக் கிடைத்தது பாலமுரளி கிருஷ்ணா பாடிய பக்த ராமதாஸ் கீர்த்தனைகள். பாவ பூர்வமாகப் பாடப்பட்ட இந்த நிகழ்ச்சிக்கு, 'Setting the Mood' என்று சொல்வார்களே, அந்த வகையில் சோபனா ரவியின் அறிமுக உரையும் விளக்கஉரைகளும் உணர்ச்சி பூர்வமாக அமைந்திருந்தன. இடையிடையே 'விஷுவல்'கள் வேறு. ஆடிய பெண்ணின் பெயரைத்தான் குறிப்பிடத் தவறிவிட்டார்கள்.

— பிச்சாமி.


பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: பி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.

இதோ அறிமுகம்

முற்றும் புதிய

‘ஃப்ரூட் ஸலாட் உணவு’

ஃபாரெக்ஸ் – ஃப்ரூட்ஸ். இது கோதுமை மற்றும் பாலின் ஊட்டச்சத்துக்களுடன் முன்கூட்டிப் பக்குவம் செய்த ஆப்பிள், மாம்பழம் மற்றும் வாழைப்பழத்தின் சுவையும் கொண்டது.



ஃபாரெக்ஸ்-ஃப்ரூட்ஸ்
சுவையுடன் வளரும் வழி.

500 கிராம் பேக்!
ரெகுலர் பேக்கைவிட, 100 கிராம் அதிகம்!

இப்போது தேர்ந்தெடுத்த இடங்களில் மட்டுமே கிடைக்கிறது

Gx.247.90 Tml

REGISTERED NO. M. 4392

Registered as Newspaper in Srilanka

